இந்த இதழுடன்... **எக்ஸாம் டைம் உணவுகள்! 32** பக்க இணைப்பு

www.vikatan.com ₹25 (தமிழ்நாடு, புதுச்சேரி) ₹27 (மற்ற மாநிலங்களில்)

தமிழ்க் குடும்பங்களின் தலைமகள்

# அவள் விகடன்

21.3.17

தமிழின் நம்பர் 1 பெண்கள் இதழ்






## அவளின்றி ஓர் அணுவும் அசையாது!

மகளிர் தின சிறப்பிதழ்







சென்னை • மதுரை • திருச்சி • புதுச்சேரி • கும்பகோணம் • பெங்களூரு
இராமநாதபுரம் • கோயம்புத்தூர் • திருப்பதி • விசாகப்பட்டினம்

# இந்த சிறிய பேப்பர்,

## நீங்கள் நகை வாங்கும் விதத்தில் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும்.




லலிதா ஜுவல்லரி ஷோரூமிற்கு வாருங்கள். உங்களுக்கு பிடித்த நகையை தேர்வு செய்யுங்கள். தங்கம், வைரம், வெள்ளி... அது எந்த நகையாக இருந்தாலும் – ஆம், எந்த நகையாக இருந்தாலும், முதற்கட்டமாக, அதற்கான எஸ்டிமேட் ஸ்லிப்பைத் (Estimate Slip) தருகிறோம்.

இதை வைத்துக் கொண்டு, குறைந்தது 4 அல்லது 5 ஷோரூம்களில் (நேரம் இருப்பின், இன்னும் சில ஷோரூம்களில் கூட) அதே மாதிரியான நகைக்கு உண்டான எஸ்டிமேட் ஸ்லிப்பைக் கேட்டு வாங்குங்கள். சேதாரம் எவ்வளவு, இறுதி விலை என்ன, போன்றவற்றை ஒப்பிடுங்கள். எங்கே சரியான விலையில் உங்கள் மனதிற்கு பிடித்த நகைகள் கிடைக்கிறதோ அங்கே வாங்கிப் பயனடையுங்கள்.

### எங்கள் பணிவான வேண்டுகோள் !

சரியான விலையைத் தெரிந்து கொண்டு நகை வாங்குங்கள். மார்க்கெட்டிலேயே குறைந்த சேதாரத்தில் நகைகளை அளிக்கும் லலிதா ஜுவல்லரி உங்களை அன்போடு வரவேற்கிறது.

**BIS 916 ஹால்மார்க்**

லட்சக்கணக்கான டிசைன்கள்

**லலிதா ஜுவல்லரி** மார்ட் (பி) லிமிடெட்

சென்னை: தி.நகர் - பனகல் பார்க். Ph : 044 - 2814 1155 / 77 / 88 | புரசைவாக்கம் - அபிராமி மால் எதிரில். Ph : 044 - 2641 1188.
அண்ணாநகர் - 'L' வெஸ்ட் ப்ளாக், 2வது அவென்யூ, திருமங்கலம் ஜங்ஷன் அருகில், செந்தில் நர்சிங் ஹோம் அருகில். Ph: 044 - 4555 0005.
மதுரை: தெற்கு மாசி வீதி. Ph : 0452 - 2330 222 / 444 / 555.
கோவை: ஒப்பணக்கார வீதி. Ph: 0422 - 2303277. | திருச்சி: சத்திரம் பஸ் ஸ்டாண்ட். Ph : 0431 - 270 6555 / 3666 |
புதுச்சேரி: நேரு வீதி. Ph : 0413 - 2341188 / 2331177. | கும்பகோணம்: டாக்டர் பெசன்ட் ரோடு. Ph : 0435 - 2402288 / 2402200.
இராமநாதபுரம்: சிகில் ராஜ வீதி. Ph : 04567 - 221133 / 88. | பெங்களூரு | திருப்பதி | விசாகப்பட்டினம்

A product of AVA group | www.avacare.in

# YOGA FOR BODY
# MEDIMIX FOR SKIN

நம்முடைய நவீன வாழ்க்கை முறை நமக்கு பல சரும பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. இவை குணமானாலும் இதனால் தழும்புகளும் மாசுமருக்களும் ஏற்படுகின்றன. மெடிமிக்ஸை தொடர்ந்து பயன்படுத்துவதால் சரும பிரச்சனைகள் ஏற்படாமல் தடுத்துவிடலாம். தொடர்ந்து இதனைப் பயன்படுத்தினால் உங்கள் சருமம் மெருகேறும்.








தேங்காய் எண்ணெய் மற்றும் 18 மூலிகைகளின் நன்மையை கொண்டுள்ள மெடிமிக்ஸ், தனித்துவம் வாய்ந்த ஹேண்ட்மேட் சோப்பாகும். மெடிமிக்ஸ் மென்மையான சருமம் மற்றும் சரும பராமரிப்பு என இரட்டை நன்மையை உங்களுக்கு அளிக்கிறது.

vinisha vision


streax
PROFESSIONAL

# உங்கள் முடியை கலர் செய்யுங்கள் அதன் அழகைக் கெடுக்காமல்

## அறிமுகம் மிகச் சிறந்த ஸ்ட்ரீக்ஸ் புரொஃபெஷனல் ஹேர் கலர்

**ஆர்கன் ஆயில், வால்நட் ஆயில் மற்றும் சிலிகான் ஆக்டிவ் சிஸ்டம்** போன்ற அறிவியல் நற்குணங்களால் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது உங்கள் முடியை ஈரப்பதத்துடன் வைக்கிறது. அதை பரட்டையாக ஆக்காமல், மிருதுவாக்குகிறது. மேலும் அதற்கு கூடுதல் பளபளப்பு தருவதால் முடி மிக அழகாகத் தோற்றமளிக்கிறது.

ஆர்கன் ஆயிலில் இயற்கையான ஆன்டியாக்ஸிடண்ட்ஸ் மற்றும் விட்டமின் E நிறைந்துள்ளது. இது முடியை ஆரோக்கியமாக்குவதற்கு நல்லது.

சிலிகான் ஆக்டிவ் சிஸ்டம் என்பது சிலிகான் மற்றும் டுவல் கடியோனிக் பாலிமரிக் சிஸ்டம் இரண்டும் சேர்ந்த கலவை ஆகும். இது முடியின் நிறத்தை அதிகரித்து அதை ஆழமாகப் பராமரிக்க உதவும்.

இது முடிக் கற்றைகளை சுற்றுப்புறச்சூழலினால் ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்காக ஹேர் கலரண்ட்ஸ்க்கு என்றே உருவாக்கப்பட்டுள்ளது.




ஹேர் கலரண்ட் க்ரீம்

**30 நிறங்களில் கிடைக்கிறது.**

ஹைஜீனிக் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட் பிரைவேட் லிமிடெட், 602, சுப்ரீம் சேம்பர்ஸ், அந்தேரி (மேற்கு), மும்பை - 400 053, இந்தியா.
விசாரணைகள் மற்றும் தகவல்களுக்கு அழைக்கவும் கட்டணமில்லா தொலைபேசி எண்: 18 00 26 68 110
• மின்னஞ்சல் முகவரி : info@hriindia.com • இணையதளம் : www.hriindia.com

வத்ஸலா
84

செளம்யா
88

சுபாஷினி
ஸ்ரீனிவாசன்
74

திவ்யா
92




ஓவியா
66

80
வித்யா
ஸ்ரீனிவாசன்

69
ஸ்ரீப்ரியா

95
ராதிகா
வெமுலா



47
பட்டையைக் கிளப்பும் 'சிஜடி' சீரியல்!

'அவள் சேலஞ்ச்' அடுத்த இதழில்...

14
பேஸிக் மேக்கப் முதல் பிரைடல் மேக்கப் வரை!



அடுத்த இதழ் **21.3.17** அன்று கடைகளில் கிடைக்கும்.

தமிழ்க் குடும்பங்களின் தலைமகள்

# அவள் விகடன்

தமிழின் நம்பர் 1 பெண்கள் இதழ்

19•13

ஆனந்த விகடன் பப்ளிஷர்ஸ் (பி) லிமிடெட் சார்பாக
வெளியிடுபவர், ஆசிரியர்: **ச.அறிவழகன் (ஸ்ரீ)**
757, அண்ணா சாலை, சென்னை - 600 002.

ஆனந்த விகடன் பப்ளிஷர்ஸ் (பி) லிமிடெட் சார்பாக
ஆனந்த விகடன் பிரின்டர்ஸ் (பி) லிமிடெட்
அச்சகத்தில் அச்சிடுபவர் : **எஸ்.மாதவன்**
எண்: 99, (NP), சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098.

**உதவி பொறுப்பாசிரியர்:**
ம.பிரியதர்ஷினி

**தலைமை உதவி ஆசிரியர்கள்:**
என்.சேஷாத்ரி, எம்.மரிய பெல்சின், ஜெ.எம்.ஜனனி

**தலைமை நிருபர்கள்:**
வே.கிருஷ்ணவேணி, இந்துலேகா.சி, பொன்.விமலா

**முதன்மை வடிவமைப்பு:**
பிரபு

**வடிவமைப்பு:**
கே.வி.எஸ்.சக்திவேல்

**ஆசிரியர் இலாகா முகவரி:**
757, அண்ணாசாலை, சென்னை - 600 002.
தொலைபேசி: 2854 3300, 5500, 5588
(காலை 10 முதல் மாலை 5.00 மணி வரை)
ஃபேக்ஸ்: 2851 2929

aval@vikatan.com www.vikatan.com

**விளம்பரப் பிரிவு:**
பத்மா பாலசுப்ரமணி, துணைப் பொது மேலாளர்.
விளம்பரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி:
**விகடன் மீடியா சர்வீஸஸ்,**
757, அண்ணாசாலை, சென்னை - 600 002.
போன்: 2852 4074, 84 ஃபேக்ஸ்: 2851 2929
email: advt@vikatan.com

**பத்திரிகை விற்பனைப் பிரிவு:**
எம்.சூரியநாராயணன், துறைத் தலைவர்
**சந்தா தொடர்பான விவரங்களை அறிய:**
044 - 6680 2901
**சந்தா தொடர்பான குறைகளை பதிவு செய்ய:**
044 - 6607 6407
**முகவரி:** அவள் விகடன், 757, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

**கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.**
இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு
விகடன் நிர்வாகம் பொறுப்பல்ல.
படைப்புகளை பிரதி எடுத்து வைத்துக் கொண்டு அனுப்பவும்.
கண்டிப்பாகத் திருப்பி அனுப்ப இயலாது.

## ஹலோ வாசகிகளே...




அவள் விகடனைப் படிக்கும்போது, உங்கள் மனதில் பல கருத்துக்கள், கேள்விகள், சந்தேகங்கள் அலையடிக்கின்றனவா? அது ஷொட்டோ, குட்டோ... பட்டென்று போனை எடுத்து, சட்டென்று உங்கள் எண்ணத்தைப் பதிவுசெய்யலாம். அதற்குத்தானே காத்திருக்கிறோம்...

**044-66802922**

என்ற எண்ணைத் தொடர்புகொண்டால், கணினிக் குரல் வழிகாட்டும். அதற்கேற்ப 3 நிமிடங்களுக்குள் உங்கள் கருத்தைப் பதிவுசெய்யுங்கள். எதிர்முனையில் உங்களுடன் உரையாட யாரும் இருக்க மாட்டார்கள் எனவே, அந்த 3 நிமிடங்கள் முழுக்க முழுக்க உங்களுக்கே! அவசியமென்றால், நாங்களே உங்களைத் தொடர்புகொண்டு மேலும் விவரங்களைப் பெற்றுக்கொள்வோம், ஓ.கே - வா..?

விகடன் குழுமம் தொடர்ந்து அளிக்கும் சுவாரஸ்யமான செய்தி மற்றும் சேவைகளை எஸ்.எம்.எஸ் மூலம் பெற உங்களுக்கு சம்மதம் எனில்,

**044-66802933**

என்ற எண்ணுக்கு டயல் செய்து, ஒரு மிஸ்டு கால் கொடுங்கள். ரிங் கேட்பதற்குள்ளேயே தொடர்பு உடனடியாகத் துண்டிக்கப்பட்டு, உங்கள் எண் எங்களிடம் பதிவாகிவிடும்.

சந்தா தொடர்பான விவரங்களை அறிய:

**044-66802901**

சந்தா தொடர்பான குறைகளை பதிவு செய்ய:

**044-66076407**

இந்தப் பட்டியலில் இருந்து உங்கள் எண்ணை நீக்கிக்கொள்ள விரும்பினால், 044-66802944 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுத்தால் போதும்.

பயனுள்ள தகவல்களை உங்களுக்கு உடனுக்குடன் அளிப்பது எங்கள் விருப்பமே தவிர, வேறு எந்த ஆதாய நோக்கமும் இல்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

**உங்கள் எண்ணம்... விகடன் வண்ணம்!**

AvalVikatan.com
facebook.com/AvalVikatan
twitter.com/AvalVikatan
YouTube youtube.com/vikatanwebtv



# சட்டென மாறுது பாவனை!

• ஆஸ்கர் பெண்கள் பா.ஜான்ஸன்

விருதுபெற்ற சிறந்த படத்தின் பெயரை மாற்றிச் சொன்ன குழப்பம், ட்ரம்ப்பின் நடவடிக்கையால் விழாவுக்கு வராத அஸ்கர் ஃபர்ஹாடி என இந்த வருடமும் ஆஸ்கர் விழாவில் பரபரப்புக்குப் பஞ்சம் இல்லை. கரோலின் வாட்டர்லோ, ஜோனா நடாசெகரா, அன்னா உட்வர்டி எனப் பல பெண்கள் மேடை ஏறி ஆஸ்கர் பெற்றார்கள். இவர்கள் தவிர, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய மூன்று பெண்கள் இருக்கிறார்கள்!

## எம்மா ஸ்டோன் (லா லா லேண்ட்) சிறந்த நடிகை

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே 'பேர்ட்மேன்' படத்தில் நடித்ததற்காக துணை நடிகைக்கான ஆஸ்கர் விருதை வென்றிருக்க வேண்டியவர், இந்த முறைதான் சிறந்த நடிகையாகக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். கதாநாயகிக்கு முக்கியத்துவம் இல்லாத 'அமேசிங் ஸ்பைடர்மேன்' படத்தின் இரண்டு பாகங்களிலும் நடித்திருந்தாலும், 'இர்ரேஷனல் மேன்' படத்தில் மாணவியாக, 'பேர்ட்மேன்' படத்தில் போதைக்கு அடிமையானவராக அசத்தியிருக்கிறார்!

'லா லா லேண்ட்' படத்தில் நடிகையாக முயற்சி செய்யும் பெண்ணின் கதாபாத்திரம் எம்மாவுக்கு. படத்தில் எம்மா நடிகைக்கான ஆடிஷனில் கலந்துகொள்வது போல ஒரு காட்சி... போனில் எதிர்முனையில் இருப்பவரிடம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டே, அழும்படியான காட்சியை நடித்துக்காட்ட வேண்டும். நடித்துக்கொண்டிருக்கும்போதே பின்னால் கதவைத் திறந்துகொண்டு ஒருவர் உள்ளே வருவார். சடாரென முக பாவனையை மாற்றி அந்த இடையூறுக்குத் தகுந்த மாதிரி ஒரு பார்வை பார்த்துவிட்டு மறுபடி, நடிப்பைத் தொடர்வதா, வேண்டாமா என்கிற குழப்பத்துடன் நிற்பார் எம்மா. அந்த ஒரு காட்சியே போதும்... இவர் சிறந்த நடிகை என்பதற்கு!

நடிக்க வரும்முன், மூன்று ஆண்டு காலம் பேனிக் அட்டாக் பாதிப்புக்கு உள்ளாகி இருந்தார் எம்மா. அப்போது அவருக்கு 11 வயதுதான். சிகிச்சை எடுத்துக்கொண்டே நாடகப் பயிற்சிகளையும் மேற்கொண்டார் எம்மா... அந்த அளவுக்கு நடிப்பின் மீது காதல்கொண்டவரிடம், இப்போது சென்றடைந்திருக்கிறது ஆஸ்கர்!

17 நாடுகளில்*
தழும்பு மற்றும்
ஸ்ட்ரெச் மார்க்குகளை
நீக்க விற்பனையாவதில்
நம்பர் **1** தயாரிப்பு




''நான் மலையேறும்போது என் காலில் ஏற்பட்ட வெட்டுக்காயத்தின்போதுதான் முதன்முதலாக பயோ–ஆயில் பற்றி அறிந்தேன். ஒரு நண்பர் பயோ–ஆயில் பயன்படுத்தும்படி சிபாரிசு செய்தார். எனது காயம் உடனே ஆறிவிட்டது, அவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டு இருக்கிறேன்! பயோ–ஆயில்–க்கு நன்றி, இப்போது தழும்பு ஒரு சிறு மங்கலான கோடுபோல் ஆகிவிட்டது. அது பற்றி நான் நினைப்பதே அபூர்வம். அதன்பின், கடந்த 3–4 வாரங்களுக்கு முன்பாக நான் இதை என் முகத்தில் பயன்படுத்த தீர்மானித்தேன் – நான் எப்போதுமே வெளியில் சுற்றுபவனாக இருப்பதால், என் சருமம் எப்போதுமே வறண்டு, களையிழந்து தோன்றும். ஆனால், என் சருமம் மிகவும் ஸ்மூத்தாக, பளிச்சென்று ஆகிவிட்டது! பயோ–ஆயில் என் அலமாரியில் நிரந்தரமாக இடம் பிடித்துவிட்டது என்பதை கூறவும் வேண்டுமோ'' – பிரோஸா

[illegible] www.bio-oil.com. [illegible]

# அந்த 528 டாலர்!



## வயோலா டேவிஸ் (ஃபென்சஸ்)
## சிறந்த துணை நடிகை

அப்பா குதிரைப் பயிற்சியாளர், அம்மா வீட்டு வேலைகள் செய்பவர், வறுமை சூழ்ந்திருக்கும் குடும்பம். ஓய்வு நேரத்தில்கூட சினிமா பற்றி யோசிக்க முடியாத குடும்பச் சூழல். அப்படிப்பட்ட குடும்பத்தில் ஐந்தாவது குழந்தை வயோலா டேவிஸ். அவருக்குப் பிறகு பிறந்த தங்கையையும் சேர்த்து ஆறு பேர். பண நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் வயோலாவையும் அவருடைய இரு சகோதரிகளையும் பாட்டி வீட்டில் விட்டுவிடுகிறார்கள் பெற்றோர். இந்தச் சூழலில், நடிகையாகச் சாதிக்க வேண்டும் என யோசிக்க முடியுமா? வயோலாவால் முடிந்தது!

நாடகங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள ஆரம்பித்தவருக்கு, மெள்ள மெள்ள சினிமா ஆசை துளிர்விட்டது. 1996-ல் முதல் சினிமா வாய்ப்பு 'த சப்ஸ்டன்ஸ் ஆஃப் ஃபயர்' மூலம் கிடைக்க, உற்சாகமானார். முதல் படம், ஒரே நாள்தான் ஷூட், மிகச்சிறிய வேடம். ரத்த பாட்டிலை ஹீரோவிடம் கொடுக்கும் சின்ன வேலை. முதல் வாய்ப்பை விட்டுவிடக் கூடாது என்கிற எண்ணத்தால் ஆர்வமாக நடித்தார் வயோலா.

சோர்ந்துவிடாமல் அடுத்தடுத்த வாய்ப்புகளைத் தேடி அலைந்தவருக்கு வரிசையாகப் பட வாய்ப்புகள் கிடைக்க ஆரம்பித்தன. சில படங்கள் ஆஸ்கர், கோல்டன் க்ளோப் விருதுகளுக்கும் பரிந்துரைக்கப்பட்டன. விருது பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் பயணித்துக்கொண்டிருந்தார். வயோலாவின் பெயர் இதற்கு முன் 167 முறை பல்வேறு விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. அதில் 79 விருதுகளை வென்றிருக்கிறார். இப்போது 'ஃபென்சஸ்' படத்துக்காகக் கிடைத்த ஆஸ்கரையும் சேர்த்து மொத்தம் 80 விருதுகள். இத்தனைக்குப் பிறகும் அவர் பெரிய விருதாக நினைப்பது முதல் முதலாக வாங்கிய சம்பளமான 528 டாலர்கள்தானாம். லவ்லி வயோலா!



www.vikatan.com

OLA

# ஆட்டோ சவாரியை எளிதாக்கும் வகையில்

# 4 km - க்கு ₹29 மட்டுமே




குறுகிய கால சலுகை.

Download



# 68 வயதிலும் சவாலே சமாளி!

### காலின் அட்வுட் (ஃபென்டாஸ்டிக் பீஸ்ட்ஸ் அண்ட் வேர் டு ஃபைண்ட் தெம்) சிறந்த ஆடை வடிவமைப்பு

2002-ல் 'சிகாகோ', 2005-ல் 'மெமரீஸ் ஆஃப் கிஷா', 2012-ல் 'ஆலிஸ் இன் த வொண்டர்லேண்ட்' என முன்பே மூன்று முறை ஆஸ்கர் விருது வென்றவர் காலின் அட்வுட். நான்காவது முறையாக 'ஃபென்டாஸ்டிக் பீஸ்ட்ஸ் அண்ட் வேர் டு ஃபைண்ட் தெம்' படத்துக்காக விருது பெற்றிருக்கிறார்.

பெயின்ட்டிங் பயின்ற காலினுக்கு அப்போது உடை வடிவமைப்பு பற்றி எல்லாம் எண்ணம் இல்லை. அதைத்தான் பிற்காலத்தில் வேலையாக செய்யப் போகிறோம் என்றும் தெரியாது.

17 வயதிலேயே கர்ப்பமடைகிறார்... படிப்பைத் தொடர முடியாத சூழல். குழந்தையையும், கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த கணவரையும் கவனிப்பதற்காக, கிடைக்கும் வேலைகளை எல்லாம் செய்யத் தொடங்குகிறார். அதில் பொட்டீக் ஷாப் வேலையும் உண்டு. பின்பு ஸ்காலர்ஷிப் கிடைத்து படிப்பையும் தொடர்கிறார்.

அப்போது அவரின் அம்மா செட் டிசைனராகப் பணிபுரிந்த 'ரேக்டைம்' படத்தின் மூலம் புரொடக்ஷன் டிசைனராக வாய்ப்பு கிடைக்கிறது. பிறகு துணை ஆடை வடிவமைப்பாளராக ஒரு படத்தில் பணி. நாடகங்களுக்கும் படங்களுக்கும் ஆடை வடிவமைப்பது என காலினின் பாதை சினிமாவை நோக்கி முழுதாகத் திரும்புகிறது. அந்தப் பாதை நான்கு ஆஸ்கர்களைத் தாண்டியும் நீண்டு கொண்டிருக்கிறது.

சில படங்களுக்கு எதுபோன்ற ஆடைகளை வடிவமைப்பது என முடிவுசெய்வது மிக சிரமமாக இருக்கும். காரணம் காலினின் பல படங்கள் நாவலைத் தழுவியவையே. அது நிஜ சம்பவங்களைத் தழுவியதாக இருந்தால் பிரச்னை இல்லை. கற்பனையான ஃபேன்டசி படங்களாக இருந்தாலோ, ஆடை எப்படி என்பதையும் கற்பனை மூலமே தீர்மானிக்க வேண்டியிருக்கும். 'இன் டு த வுட்ஸ்', 'ஆலிஸ் த்ரூ த லுக்கிங் க்ளாஸ்', 'ஃபென்டாஸ்டிக் பீஸ்ட்ஸ் அண்ட் வேர் டு ஃபைண்ட் தெம்' எனப் பல படங்கள் அப்படியானவை தாம். இந்தச் சவால்களைத் தன் கலைத் திறமையால் சாதாரணமாகக் கடந்து ஜெயித்துக் கொண்டிருக்கிறார் இந்த 68 வயது யுவதி!

A Property of Hello 106.4 fm

Presented by AASHIRVAAD

# AASHIRVAAD

Presents

HELLO FM

# அம்மாவும் நானும்

இது உறவுகளின் சங்கமம்...

Powered by Preethi Rangoli Electric Cooker

## « அம்மா மகள் அற்புத உறவை கொண்டாட ஒரு தினம். »

அனுமதி இலவசம்

- கூடு விட்டு கூடு
- செந்தமிழ் பேசும் தமிழச்சி
- சினிமா சினிமா
- யோசி கண்ணா யோசி
- முதல் முதலாய்
- அன்பென்றாலே அம்மா

**பாச உறவுகள் பரிசுகளை அள்ள ஒரு களம்**




ஆசிர்வாத் கோதுமை மாவு ஸ்டாலுக்கு வாங்க, கோதுமையில் புதுமையுடன் இந்த நாளை கொண்டாடுங்க.



PREETHI - HEALTH JUICER
Women's Wellness Camp
பெண்களுக்காக பிரத்யேக மருத்துவ முகாம்

மேலும் விவரங்களுக்கு Hello 106.4 fm கேளுங்கள்

பம்பர் பரிசு



இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழையுங்கள் : 91760 99699

மார்ச் 11 ஆம் தேதி முதல் ஏப்ரல் 1ம் தேதி வரை கீழ்கண்ட நகரங்களில் இந்நிகழ்ச்சி நடைபெறும்

| இடம் | நாள் | நகரம் | நேரம் |
|---|---|---|---|
| மதுரை | 11 மார்ச் 2017 சனிக்கிழமை | லட்சுமி சுந்தரம் ஹால், தல்லாகுளம் | காலை 9.00 மணி முதல் |
| சென்னை | 18 மார்ச் 2017 சனிக்கிழமை | வித்யோதயா பள்ளி, தி.நகர் | |
| புதுச்சேரி | 25 மார்ச் 2017 சனிக்கிழமை | St. அந்தோணி மஹால், கடலூர் ரோடு | |
| கோவை | 1 ஏப்ரல் 2017 சனிக்கிழமை | பத்மாவதி அம்மாள் கல்ச்சுரல் சென்டர், பீளமேடு | |

*Conditions apply

Presented by AASHIRVAAD | Powered by Preethi Rangoli Electric Cooker | A Property of Hello 106.4 fm

Associated Sponsors

IDHAYAM மந்த்ரா | SATHYA | NEST ACADEMY | GIRI For Indian Culture & Tradition

• பியூட்டி இந்துலேகா.சி படங்கள்: மீ.நிவேதன்

# பேஸிக் மேக்கப் முதல் பிரைடல் மேக்கப் வரை!

7

கனவுகளோடு காத்திருந்த நாள் நிஜமாகும் தருணமான முகூர்த்த தினத்தில், மணமகளின் வெட்கம் பூசிய கன்னங்களையும் புன்னகை தவழும் முகத்தையும் மேலும் பொலிவாக்கிடும் ‘பிரைடல் மேக்கப்’ எப்படி செய்வது என்று பார்ப்போமா?






CELEBRATING 550 SALONS
naturals
India's No.1 hair and beauty salon
BOOK YOUR
BRIDAL MAKEUP
& GET A FREE
3D/2N HONEYMOON PACKAGE
WORTH ₹15,000
AT CLUB MAHINDRA
*T&C apply
TO BOOK YOUR BRIDAL SERVICE, CALL:
9092626262
ClubMahindra




















### பிரைடல் மேக்கப் செய்யத் தேவையானவை:

1. மாய்ஸ்ச்சரைஸர்
2. பிரைமர்
3. கன்சீலர்
4. ஃபவுண்டேஷன் (லோஷன்)
5. ட்ரான்ஸ்லுசன்ட் பவுடர்
6. ஐ ஷேடோ
7. க்ரீம் ஐ லைனர்
8. காஜல்
9. ஐப்ரோ பவுடர்
10. ஹைலைட்டர்
11. மஸ்காரா
12. பிளஷர்
13. பேஸ் லிப்ஸ்டிக்
14. லிப் லைனர் பென்சில்
15. லிப்ஸ்டிக்

### மேக்கப் வழிமுறை:

1. சிறிதளவு மாய்ஸ்ச்சரைஸரை எடுத்துக்கொள்ளவும்.
2. முகம் முழுவதும் பிரஷ்ஷினால் அப்ளை செய்யவும்.
3. பிரைமரை எடுத்துக்கொள்ளவும்.
4. பிரஷ்ஷினால் தொட்டு முகத்தில் அப்ளை செய்யவும். இது சருமத்தில் உள்ள சுருக்கங்களை மறைத்து சருமத்தைச் சீராக்கும்.
5. கன்சீலரை எடுத்துக்கொள்ளவும்.
6. கன்சீலரை பிரஷ்ஷினால் தொட்டு கருவளையம் மற்றும் தழும்புகளின் மீது பூசி மறைக்கவும்.
7. சரும நிறத்துக்குப் பொருத்தமான ஃபவுண்டேஷன் லோஷனை எடுத்துக்கொள்ளவும்.
8. ஸ்பான்ச் மூலம் முகம், காது மற்றும் கழுத்து என அனைத்துப் பகுதிகளிலும் அப்ளை செய்யவும்.
9. ட்ரான்ஸ்லுசன்ட் பவுடரை எடுத்துக்கொள்ளவும்.
10. பிரஷ்ஷினால் சிறிதளவு பவுடரைத் தொட்டு முகம், காது மற்றும் கழுத்து என அனைத்துப் பகுதிகளிலும் ஒரே சீராக அப்ளை செய்யவும்.
11. நியூட் கலர் ஐ ஷேடோவை எடுத்துக்கொள்ளவும்.
12. கண் இமைகளின் மேற்பகுதியில் அப்ளை செய்யவும்.
13. ஆடைக்குப் பொருத்தமான நிறத்தில் ஐ ஷேடோவை எடுத்துக்கொள்ளவும்.
14. பிரஷ்ஷினால் தொட்டு கண் இமைகளின் மேல் வலது ஓரத்தில் அப்ளை செய்யவும்.
15. க்ரீம் ஐ லைனரை பிரஷ்ஷினால் அளவாக எடுத்துக்கொள்ளவும்.
16. ஐ லைனரை கண் இமைகளின் மேற்பகுதி இமை முடிகளையொட்டி விருப்பத்துக்கு ஏற்ற வடிவில் வரைந்து கொள்ளவும்.





































## எக்ஸ்பர்ட் டிப்ஸ்...



▲ வீணா

பிரைடல் மேக்கப் குறித்து நேச்சுரல்ஸ் உரிமையாளர் வீணா வழங்கும் டிப்ஸ்...

**1. முகூர்த்த நாளுக்கான மேக்கப்பில் ஐ ஷேடோ மற்றும் லிப்ஸ்டிக்குக்கு சரியான நிறங்கள் என்ன?**

உடைக்குப் பொருத்தமான ஐ ஷேடோ மற்றும் லிப்ஸ்டிக்கைத்தான் பெரும்பாலானவர்கள் தேர்வு செய்கின்றனர். ஆனால், உங்கள் சரும நிறம் மற்றும் நீங்கள் தேர்வு செய்யும் மேக்கப்புக்கு ஏற்றவாறு நிறங்களைத் தேர்ந்தெடுங்கள். முகத்தில் எல்லா மேக்கப்பும் ஹெவியாக இருக்க வேண்டாம். ஐ ஷேடோ ஹெவியாக இருந்தால் உதடுகளுக்கு நியூட், பீச் போன்ற மிதமான நிறங்கள்தான் அழகு.

**2. திருமணத்துக்கு முன்பு என்ன மாதிரியான ஸ்கின் கேர் அவசியம்?**

முறையாகப் பராமரிக்கப்பட்ட சருமம்தான் மேக்கப்பில் கூடுதலாக ஜொலிக்கும். மணநாளுக்கு முன்பு நிறைய தண்ணீர் மற்றும் ஜூஸ் குடியுங்கள். சத்தான, ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிடுங்கள். ஜங்க் ஃபுட், எண்ணெய் பலகாரங்களைத் தவிருங்கள். இவற்றைக் கடைப்பிடித்தாலே முகம் பளபளப்பாகி மேக்கப் செய்வதற்கும் கைகொடுக்கும்.

**3. ரிசப்ஷனுக்காக என்னுடைய முடியை எப்படி தயார்செய்வது, என்ன மாதிரியான ஹேர் ஸ்டைல் செய்வது?**

உங்களுக்கு என்ன ஹேர் ஸ்டைல் செய்யப்போகிறார்களோ அதற்கு முன்பு ஹேர் வாஷ் செய்ய வேண்டுமா, தேவைப்படாதா என்பதை உங்கள் பியூட்டிஷியனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். இப்போதைய ட்ரெண்டின்படி மெஸ்ஸி பன், பிஷ்/ஃபிரெஞ்ச் பிரைய்ட், லோ பன்ஸ், ஓபன் லெட் டவுன் கர்ள்ஸ் போன்ற ஹேர் ஸ்டைல்கள் ரிசப்ஷனுக்குப் பொருத்தமாக இருக்கும்.
























17. காஜல் பென்சிலை எடுத்துக்கொள்ளவும்.
18. கண்களுக்கு மை இடவும்.
19. ஐப்ரோ பவுடரை எடுத்துக்கொள்ளவும்.
20. பிரஷ்ஷினால் தொட்டு புருவங்களுக்கு அப்ளை செய்யவும்.
21. ஹைலைட்டரை எடுத்துக்கொள்ளவும்.
22. பிரஷ்ஷினால் ஹைலைட்டரைத் தொட்டு புருவங்களுக்குக் கீழே அப்ளை செய்து கொள்ளவும். இது புருவங்களை எடுப்பாகக் காட்டும்.
23. மஸ்காரா எடுத்துக்கொள்ளவும்.
24. மஸ்காராவைக் கண்களின் மேல் மற்றும் கீழ்ப்பகுதி இமை முடிகளுக்கு அப்ளை செய்யவும்.
25. தேவையான நிறத்தில் பிளஷரை எடுத்துக்கொள்ளவும்.
26. பிளஷரை பிரஷ்ஷினால் எடுத்துக் கன்னங்களுக்கு அப்ளை செய்யவும்.
27. பேஸ் லிப்ஸ்டிக்கை எடுத்துக்கொள்ளவும்.
28. உதடுகளுக்கு அப்ளை செய்யவும். இது உதடுகளில் உள்ள வரிகள் தெரியாமல் மறைத்து உதடுகளை வழவழப்பாக்கும்.
29. லிப் லைனர் பென்சிலை எடுத்துக்கொள்ளவும்.
30. உதட்டு ஓரங்களில் தேவையான வடிவத்தில் வரைந்து கொள்ளவும்.
31. லிப்ஸ்டிக்கை எடுத்துக்கொள்ளவும்.
32. பிரஷ்ஷினால் எடுத்து, உதடுகளில் வரைந்த கோட்டுக்குள் அப்ளை செய்யவும். முகூர்த்தத்துக்கு மணமகள் ரெடி!

**உதவி:** நேச்சுரல்ஸ்

**நகைகள் உதவி:** 'ஜாஸ் கலெக்‌ஷன்ஸ்' **மாடல்:** பாயல்

இந்த இதழில் வெளிவந்திருக்கும் 'பேசிக் மேக்கப்' பகுதியை வீடியோவாக http://bit.ly/avalmakeup6-ல் காணலாம் அல்லது இந்த க்யூ ஆர் கோடை ஸ்கேன் செய்யுங்கள்.




• **சென்னை** - ஃபோரம் விஜயா மால், வடபழனி | ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்
• **திருநெல்வேலி:** வண்ணார்பேட்டை | வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண்
• **கோயம்புத்தூர்** - ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு • **பெங்களூரு** - ஓரையன் மால்.

toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com write us at: bonus@rmkv.com follow us on /rmkvsilks



# ஆயுர்வேத இரகசியம்

## பொன்னாகப் பளபளக்கும் சருமத்திற்காக

பெண்கள் தமது சருமத்திற்காக தொன்றுதொட்டு இயற்கை கலவைகளை பயன்படுத்தி வருகிறார்கள். ஏன்னென்றால் இயற்கை பாதுகாப்பாக ஆனால் மெதுவாக செயல்படும் என்று அவர்களுக்குத் தெரியும். 5000 ஆண்டுகளுக்கு முன்பு, ஆயுர்வேதா இந்த நம்பிக்கையை வைத்து விஞ்ஞானத்தையும் இயற்கையையும் ஒன்றாக இணைத்து பளபளப்பான சருமத்தைப் பெறுவதற்காக ஒரு சக்தி வாய்ந்த தீர்வை உருவாக்கியுள்ளது.



# Fair & Lovely | ayurvedic care™

ஃபேர் அண்டு லவ்லி பளபளப்பான சருமத்திற்காக ஆயுர்வேத தீர்வை மீண்டும் கண்டறிந்துள்ளது. இதிலுள்ளது கும்குமாதி தைலத்தின் சக்தி

கும்குமாதி தைலத்தின் நற்குணம் சேர்க்கப்பட்ட ஃபேர் அண்டு லவ்லி ஆயுர்வேதிக் கேரில் 16 இயற்கை மூலப் பொருள்களின் ஒப்பற்ற ஆயுர்வேத கலவை இருக்கிறது. இவை அனைத்தும் ஒன்றாக செயல்பட்டு மாசுமருக்களை நீக்கி, லேசாக்கி சரும நிறத்தை பிரகாசமாக்கி, சருமத்தின் டெக்ஸ்சரை மேம்படுத்துகிறது. நிரூபணமான இதன் ஃபார்முலாஉங்கள் சருமத்திற்கு தருகிறது ஆயுர்வேத ட்ரீட்மெண்ட் போன்ற பொன்னான பளபளப்பு.




1. சீரான சரும நிறத்தைப் பெறுவதற்காக சருமத்திற்கு புத்துயிர் அளித்து சருமத்தை லேசாக்கும் பொருள்
2. அடையாளங்களை நீக்கி, நிறத்தை ஒளிவீசச் செய்வதற்காக இயற்கையான ஆண்டியாக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளது.
3. இயற்கையான ஆஸ்ட்ரிஜென்ட். இது சருமத்திற்கு அமைதியளித்து இதமளிக்கும்.



இதன் பலன்கள் க்ளினிகல்/இன்வேஸிவ் ட்ரீட்மெண்ட்டிற்கு ஈடாகாது. காஸ்மெடிக் வகையினுள் ட்ரீட்மெண்டைக் குறிக்கும்.

ஒவ்வொன்றுக்கும் பரிசு: ₹ 100

# டிப்ஸ்... டிப்ஸ்...



**வெ**ங்காய வடகம் செய்யும்போது நார்த்தங்காய் இலைகளைப் பொடி செய்து சேர்த்தால், வடகம் தாளித்த சாம்பார் மேலும் சுவையாகவும் மணமாகவும் இருக்கும்.

– ***சு.கண்ணகி,*** *மிட்டூர்*



**கே**ரட், பீட்ரூட் போன்றவை வாடிப்போனால் நறுக்குவது கடினம். அதை உப்பு கலந்த நீரில் சிறிது நேரம் போட்டு வைத்தால் புதியதுபோல ஆகிவிடும். நறுக்குவதும் எளிதாகும்.

– ***எஸ்.மேரி ரஞ்சிதம்,*** *நாட்டரசன்கோட்டை*



**பு**டலங்காயின் விதைகளை எடுத்து வதக்கி, உளுத்தம்பருப்பு, மிளகாய் சேர்த்து வறுத்து, புளி, உப்பு சேர்த்து துவையலாக அரைத்தால், சுவையாக இருக்கும்.

– ***அலமேலு ராகவன்,*** *கோவை - 46*



**மு**ற்றின தேங்காயைப் பல்லுப்பல்லாக நறுக்கி நெய்யில் சிவக்க வறுத்துப் பாயசத்தில் போட்டால் மிகவும் ருசியாக இருக்கும்.

– ***ஜி.விஜயலட்சுமி,*** *கும்பகோணம்*



**கா**ய்ந்த மிளகாயை வறுக்கும்போது சிறிது கல் உப்புப் போட்டு வறுத்தால் கமறல் ஏற்படாது. வீடு சின்னதாக இருந்தாலோ, வீட்டில் கைக் குழந்தைகள் இருந்தாலோ, நெடியில்லாமல் காய்ந்த மிளகாய் வறுக்க இந்த முறையைப் பின்பற்றலாம்.

– ***மீனா சாதிக்,*** *நெய்வேலி*

https://t.me/SKLINKS

அறிவோம்

நிவேதிதா லூயிஸ் படங்கள்: அனீஸ் தீனதயாளன், கரின் ஹார்ட்

# நம் கிராமம்... நம் கதைகள்!

## ஊரூர் ஆல்காட் குப்பம்

கோயில்களும் புராதனக் கட்டடங்களும் நிறைந்த நகரமாக நம் கண்களுக்குத் தோன்றும் சென்னை, ஒரு பெரும் சமூக, மானுடவியல் நாற்றங்காலாக, ஒரு நாகரிகத்தின் தொட்டிலாக கண்முன் விரிந்த தினம் அன்று..! பிப்ரவரி மாத ஞாயிறு ஒன்றில் 'ஊரூர் ஆல்காட் குப்பத்தின் வாழும் வரலாற்றுப் பயணம்' நிகழ்ந்தது. 'வெட்டிவேர் கலெக்டிவ்' மற்றும் 'அர்பன் டிசைன் கலெக்டிவ்' ஆகிய அமைப்புகள் இணைந்து நிகழ்த்திய பயணம் குறித்த தகவல் கிடைத்ததும் வழக்கம்போல ஆர்வம் தொற்றிக்கொள்ள, செல்ல மகளுடன் கிளம்பியாயிற்று!





▲ ஊரூர் ஆல்காட் குப்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் எடுத்த புகைப்படங்கள்...

நம்பர் 1, எலியட்ஸ் பீச், பெசன்ட் நகர்... இதுதான் பயணம் தொடங்கும் இடம். பயணத்தை வழிநடத்திச் சென்றவர் சமூக ஆர்வலர் நித்தியானந்த் ஜெயராமன். 1880-களில் தியோசபிகல் சொஸைட்டிக்கான இடம் தேடும் முயற்சியில் மேடம் பிளவாட்ஸ்கி இறங்கியபோதே ஊரூர் குப்பம் இருந்திருக்கிறது. அதன் மூத்த குடிகள் இருந்திருக்கிறார்கள். ஆடியோ விவரணையிலேயே பனை மரங்களும் தாழையும் மணல் மேடுகளும்





நிறைந்த ஒரு சிறிய கடற்கரை கிராமத்தை கண்முன் நிறுத்தி விடுகிறார்கள் பயணக் குழுவினர். நடைபாதையில் ஆங்காங்கே சிறிய அட்டைகளில் அந்த இடங்கள் குறித்த குறிப்பு, 'வா', 'நெ', 'தே' என்ற எழுத்துகளுடன் வரவேற்றன. கடல்சார் வாடைக் காற்று, நெய்தல் நிலம், தெய்வமான தேசம்மா என்பதை அவை குறித்தன.

முதலில் சென்றது 'கன்னி கோயில்' இருந்த இடம். கடலில் மரித்த வெள்ளைக்காரர்களின்

▼ 1960-களில் ஊரூர் ஆல்காட் குப்பம் இப்படித்தான் இருந்தது!



▼ சரவணன்

▼ நித்தியானந்த்



▼ அர்ச்சனா சேகர்

▲ ஊரூர் ஆல்காட் குப்பத்தின் திருமண உறவுகள் பற்றிய 'கம்பி மாதிரி' விளக்கம்...

ஆவிகள் நடமாடிய இடம் என்றும், ஊர் எல்லையில் பேய் பிசாசுகளை விரட்டிக் கொண்டுவந்து சேர்க்கும் இடம் அது என்றும் சொல்லவும், கொஞ்சம் பீதியுடனும், கிராமத்து மக்களின் வெள்ளந்தி மனதை நினைத்து ஒரு சிறு புன்னகையுடனும் நடந்தோம். 1965-ல் பெசன்ட் நகர் நிறுவப்பட்ட காலத்தில், இங்கே அரசால் கட்டித் தரப்பட்ட குவிந்த (Doom) கூரை கொண்ட கூண்டு வீடுகள் இரண்டு, கான்கிரீட் குவியலுக்கு நடுவே, இன்றும் கம்பீரமாக நிற்கின்றன.

▼ எல்லையம்மன் கோயில் சிம்ம வாகனம்





▲ கடலடி அடையாளங்கள்

அடுத்துச் சென்றது எல்லையம்மன் கோயில். இந்த அம்மனின் கதை சுவாரஸ்யமானது. கடலுக்கு மீன்பிடிக்க சென்ற ஒரு மீனவர் வலையில் ஒருநாள் சிக்கியது பெரிய கல் மட்டுமே. கோபம் அடைந்த மீனவர், அதை கடலில் தள்ளிவிட்டு மீண்டும் வலையை வீச, இம்முறையும் அதே கல் சிக்கியது. பலமுறை வலை வீசியும், அதே கல் மீண்டும் மீண்டும் சிக்கியதால் வியப்படைந்த மீனவர், அதை படகின் மூலையிலேயே வைத்தார். சூரிய

ஒளி பட்டு பிரகாசமாக ஜொலித்தது அந்தக் கல். இப்போது மீண்டும் வலையை வீச, வலை நிறைய மீன்கள். கரைக்கு வந்த அந்தக் கல் எல்லையம்மனாக உருவெடுத்தது. அதைச் சுற்றிய கோயில் கொஞ்சம் கொஞ்சமாக உருப்பெற்றது. இப்போது ஊரூரின் அடையாளமாகவே மாறிப்போனது எல்லையம்மன் கோயில். உள்ளே சிம்ம வாகனம், மூஞ்சுறு வாகனம், குதிரை வாகனங்கள் அணிவகுத்து நிற்க, ஒரு குறும்படம் திரையிடப்படுகிறது. ஊரூரின் சுந்தரமூர்த்தி ஐயா, பாளையம் ஐயா - இவர்களின் கிராமம் குறித்த குறிப்புகளும், 'ஏலேலோ ஐலேசா' பாடலும் ஊரின் மீதான நம் ஈர்ப்பை அதிகப்படுத்துகின்றன.

கிணறுகளை நிறுவிய வேகத்தால், ஊரூரின் நிலத்தடி நீர், கடல் நீரைப் போலவே உவர்ப்பாக இருக்கிறது. சமுதாயக்கிணறு இன்று இல்லை, குளங்கள் இல்லை, கடல் நீரை உள்வாங்காமல் தடுக்கும் இயற்கை மணல் மேடுகள் இல்லை. ஊர்கூட்டம் போட்ட திறந்தவெளி குப்பை மேடாகவே காட்சி தருகிறது.

ஊரூர் வீடுகளின் வாயில்களில் நாம் காணும் முதல் காட்சி - அவர்கள் வணங்கும் தெய்வமான தேசம்மா, தேசப்பா. மஞ்சளும் குங்குமமும் பூசி, பூஜை செய்த செங்கற்கள் இரண்டு வீடுகளின் முன் அழகாகக் காட்சி தருகின்றன. அவை இல்லாத வீடுகளில், சுவரில் வட்டமாக மஞ்சள் பூசி, குங்குமம் வைத்து வழிபடுகிறார்கள்.





▲ ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்!

கோயில் வளாகத்தில், 1965-ல் கிராமத்தின் வடிவமைப்பை தத்ரூபமாகக் காட்டும் மாதிரி ஒன்று அசரடிக்கிறது. ஊரூர் கிராமவாசியும், மீனவர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகியும், ஊரூர் ஆல்காட் குப்ப விழாவின் தன்னார்வலர்களில் ஒருவருமான சரவணன், 1960-களில் ஊரூரின் நீர்நிலைகள், வீடுகள், கோயில்கள் குறித்து விளக்கினார். அவற்றில் எதுவும் இன்று இல்லை என்பதே பெருஞ்சோகம். அவர்கள் வணங்கும் முனி கோயில் மட்டும் இன்னமும் பெசன்ட்நகரின் இறுக்கத்தில் மறைந்திருக்கிறது. அருணாசலச் செட்டியாரின் மாளிகை இருந்த இடம் இன்றைய சான்சலர் அப்பார்ட்மென்ட்டாக மாறியிருக்கிறது.

நகரமயமாதலின் பேய்க்கரங்கள் ஆழ்துளைக் குப்பத்துப் பெண்களின் காவல் தெய்வமான தேசம்மாவை, இங்கு குழந்தை பிறந்த மூன்று, ஐந்து மற்றும் ஒன்பதாம் மாதங்களில் சிறப்புப் பூஜை செய்து வணங்குகிறார்கள்.

தன்னார்வலர் வழிகாட்டு தலால், மூன்று மாதங்கள் புகைப்படக்கலை பயிற்சி பெற்ற ஊரூரின் சிறுவர், சிறுமியரின் கைவண்ணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஒரு தெரு வெங்கும் அணிவகுத்து அழகூட்டுகின்றன. விழிகள் விரிய பார்த்தபடி நகர்கிறோம். குழந்தைகளின் உலகம்தான் எத்தனை அழகானது!

கடலை ஒட்டிய அடுத்தத் தெருவுக்குள் நுழையும்போதுதான் நம்மைத் தாக்குகிறது வடிகாலற்ற தெருக்களின் கழிவுநீர் வாடை.


www.vikatan.com

# பாரகன்® Solea

WOMEN'S FOOTWEAR

www.paragonfootwear.com /paragonfootwear



Model No. 7953
MRP: ₹159.00



Model No. 7081
MRP: ₹229.00



Model No. 77030
MRP: ₹249.00



Model No. 7116
MRP: ₹279.00



Model No. 7097
MRP: ₹269.00



Model No. 7510
MRP: ₹499.00



Model No. 7018
MRP: ₹229.00



Model No. 7083
MRP: ₹249.00





Model No. 77005
MRP: ₹299.00



Model No. 7039
MRP: ₹239.00

OVER 140 MILLION (14) CRORE PAIRS PER YEAR

★★★ INDIA'S LARGEST ★★★
FOOTWEAR MANUFACTURER

Rates mentioned are MRP per pair (2N) inclusive of all taxes. Data subject to change.

இதுவரை வெறும் அழகியலோடு, வாழ்வுமுறை நடையாக இருந்த பயணம் சட்டென ஒரு விழிப்பு உணர்வுப் பயணமாக பரிமாணம் மாறுகிறது. கூப்பிடு தொலைவில் பளபளக்கும் பெசன்ட் நகர் இருந்தும், ஊரூரின் வீதிகளில் சாக்கடை பெருக்கெடுத்து ஓடுகிறது. அரசு இயந்திரத்தின் மெத்தனம் அயர்வையே நமக்குத் தருகிறது. ஊரூரின் 50 சதவிகிதத்துக்கும் அதிகமான பெண்களுக்குக் கழிவறை வசதி இல்லை.

தெருக்களில் மகிழ்ச்சியுடன் பெண்கள் அமர்ந்து பணம் வைத்து சிறு பிளாஸ்டிக் பந்துகளை உருட்டி விளையாடுகிறார்கள். தாயம் விளையாடுகிறார்கள் சில பெண்கள். 'போட்டோ எடுத்துக்கோ...வா' என்ற கனிவான அழைப்பு வேறு. கொஞ்சம் காலாற பின்தங்கிய நம்மை வளைத்தது ஒரு போலீஸ் ஜீப். 'இங்கெல்லாம் ரொம்ப நேரம் நிற்கக்கூடாது... மோசமான இடம்' என்ற எச்சரிக்கையுடன் நகர்கிறார் ஓர் உயர் அதிகாரி. 'மோசமான இடம்' என்கிற வர்ணனைக்கு அங்கே எதுவுமே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மீனவக் குப்பங்களின் மீதான இந்த பொதுப்புத்தி மாறவே இந்தப் பயணம், இந்த ஊரூர் ஆல்காட் குப்பம் விழா!

அடுத்து, கடலை ஒட்டிய ஒரு வீட்டின் மொட்டை மாடி. ஊர்த் தலைவர் பாளையம் உதவியுடன் வடிவமைக்கப்பட்ட கடலடி அடையாளங்கள் அழகாக ஸ்லைடுகளில் காட்சியமைக்கப்பட்டிருக்கின்றன. மணல் மண்டிய கடலடிப் பிரதேசங்கள் 'சேர்' எனவும், பாறைகள் நிறைந்த பகுதி 'பார்' எனவும் இவர்களால் குறிப்பிடப்படுகிறது. வண்டிப்பார், ஈர்க்குழிசேர், கொடுமாச்சேர் என கடலடி அடையாளங்களை அழகாகப் படமாக்கியிருக்கிறார்கள். நம் கண்முன் நீலமாக ஒரே சீராக விரியும் கடலுக்கடியில் எங்கெங்கு, என்னென்ன மீன்கள் கிடைக்கும் என்பது முதற்கொண்டு துல்லியமாகக் குறித்திருக்கிறார்கள். அதிலும், கடலுக்கடியில் நொறுங்கி விழுந்த விமானம், காந்தவிசைப் பொருள் ஒன்று, நீருக்கடியில் கிணறு என்று செவி வழியாக இவர்கள் மூதாதையரிடம் கேட்டு, கற்ற கடல் பாகங்களை தத்ரூபமாகக் காட்சிப்படுத்தியிருப்பது சிறப்பு.

▼ வாயில் வழிபாடு



கடலூர் முதல் திருவொற்றியூர் வரை நூற்றுக்கும் மேற்பட்ட கடற்கரை கிராமங்கள் ஊரூருடன் தொடர்புகொண்டுள்ளன. திருமண பந்தத்தின் மூலம் பெண்கள் இடம்பெயர்வது போல, இங்கே ஆண்களும் இடம்பெயர்ந்து இருக்கிறார்கள். ஆனால், மீன் பிடிப்பதில் மட்டும் இவர்களுக்குச் சில கட்டுப்பாடுகள் உண்டு. கம்பிகளால் வடிவமைக்கப்பட்ட ஒரு மாதிரியைக் கொண்டு அவர்களது திருமண உறவுகளை விளக்கினார் அர்ச்சனா சேகர்.

கடற்கரையில் இறுதி நிகழ்வு... மீன்பிடி உபகரணங்கள் விளக்கம். நாற்பது பேர் இருந்தால் மட்டுமே உபயோகிக்கக்கூடிய பெரிய மோடா வலை, கடமான் வலை, வஞ்சிரம், வாவல், சீலா வலை மற்றும் நண்டு வலை என்று வலைகள் குறித்தும் கொஞ்சம் கற்றுக் கொண்டோம்.

பயணம் முடிந்து தளர்நடையாக வெளி வருகிறோம். ஒருபுறம் அசுரத்தனமாக ஆக்டோபஸ் கரங்கள்கொண்டு ஊரைத் தின்னும் நகரம். மறுபுறம் ஆக்ரோஷமாக குப்பைகளையும் கழிவுகளையும் விழுங்க முடியாமல் துப்பும் கடல். இவை இரண்டுக்கும் நடுவே தனித் தீவாக ஊரூர். ஊரூரின் கலை விழா மூலமாக மூன்று ஆண்டுகளாக கர்னாடக இசையை ஊரூருக்குள் கொண்டு சேர்த்து, அதன்மூலம் உயர் வகுப்பினரது இசையாக மட்டுமே அறியப்பட்ட கர்னாடக இசையையும், பாமரனின் பறையிசையையும் ஒன்றிணைத்து ஒரே மேடை ஏற்றிய டி.எம். கிருஷ்ணாவின் பாடல் வரிகள் நெஞ்சுக்குள் நிழலாடுகின்றன...

**'வளர்ச்சி, வேலைவாய்ப்பு எல்லாம் வெட்டி சாக்கு, ஏரி வித்தவனுக்கு ஏரி வெறும் பொறம்போக்கு... அப்போ நீயும் நானும் என்ன கணக்கு... அட நீயும் நானும் பொறம்போக்கு!'**

*(பாடலைக் காண: http://bit.ly/2iV0i9x)* ●



www.vikatan.com







இந்த COLD TEST-டை நீங்கள் வீட்டிலேயே செய்யலாம். பெட் பாட்டிலை ஃபிரிட்ஜில் 24 மணி நேரம் வைத்துப்பாருங்கள், WAX மிகவும் குறைவாக இருப்பதால் பாட்டில் பின்னால் உள்ள எழுத்துகள் தெளிவாக தெரியும். கிச்சன் முழுவதும் பிசுபிசுப்பு* தொல்லை இல்லை.

*சன்லேண்டில் 60-80 PPM WAX மட்டுமே உள்ளதால் பிசுபிசுப்பை உணரமுடியாது.

**FREE. FREE.. FREE...**

இப்பொது சன்லேண்ட் Sunland TRIO (3 Ltr.) Mini Jar வாங்கினால், ₹ 23/- மதிப்புள்ள 200 ml Pouch முற்றிலும் இலவசம். முந்துங்கள், சலுகை ஸ்டாக் உள்ளவரை மட்டுமே.




*RSP = Recommended Selling Price (No responsibility shall attach to KTV as it is upto retailers to price within MRP )*

**பிசுபிசுப்பில்லாத**

**SunLand®**

Toll Free No.: 1800 4250 789 | e-mail: marketing@kogktv.com


• டயட் டூர் இளங்கோ கிருஷ்ணன்

# எடை குறைக்க இனிய பழங்கள்!

பல நூற்றாண்டு காலம் பழைமை வாய்ந்த ஃப்ரூட்டேரியன் டயட் பற்றி சென்ற இதழில் பார்த்தோம். இந்த டயட்டில் என்னென்ன பழங்கள் சாப்பிடலாம்? பட்டியல் தருகிறார் டயட்டீஷியன் குந்தளா ரவி.



▲ குந்தளா ரவி

| | |
|---|---|
| **அமிலச்சத்துள்ள பழங்கள் (Acid fruits)**<br>ஆரஞ்சு, சாத்துக்குடி, கமலா ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற சிட்ரஸ் பழங்கள், ஆப்பிள், அன்னாசி, ஸ்ட்ராபெர்ரி, மாதுளை, கிவி, பேரிக்காய், தக்காளி. |  |
| **துணை அமிலச்சத்துள்ள பழங்கள் (Subacid fruits)**<br>செர்ரி, ரேஸ்பெர்ரி, நெல்லிக்காய், பிளாக்பெர்ரி, ப்ளூபெர்ரி, பீச், பியர்ஸ், நாவல் பழம், பப்பாளி, அத்தி, ஆப்ரிகாட்ஸ், மாம்பழம், வெள்ளரிக்காய், கொய்யா, லிச்சி. |  |
| **இனிப்புப் பழங்கள் (Sweet fruits)**<br>வாழைப்பழம், திராட்சை, முலாம் பழம், கிர்ணிப்பழம், தர்பூசணி, பலாப்பழம், சப்போட்டா.<br>**நட்ஸ்கள்:** முந்திரி, பாதாம், வால்நட், வாதாங்கொட்டை, பிஸ்தா, பைன் நட், ஹிக்கரி.<br>**விதைகள்:** சூரியகாந்தி விதைகள், எள்ளு, பூசணி விதைகள், பருத்தி விதைகள், பலாப்பழக் கொட்டைகள், ஆளி விதைகள், வெள்ளரி விதைகள்.<br>**உலர்பழங்கள்:** பேரீச்சை, அத்தி, ஆப்ரிகாட், செர்ரி, கிரேன் பெர்ரி, உலர் திராட்சை.<br>**எண்ணெய்ப் பழங்கள்:** அவகாடோ, தேங்காய், ஆலிவ். |  |

(உங்களால் முடியும்!)




# ORGANIC INDIA

**Healthy Conscious Living**

### நாங்கள் அளிக்கும் பெண்களுக்கான
### சிறப்பு கலவைகளுடன்

# ஆரோக்கியத்துடனும்
# சுறுசுறுப்புடனும் இருங்கள்!

## WHEAT GRASS

Wheat Grass, நச்சுத்தன்மையை அகற்றும் பண்புக்குப் பெயர் போன ஒரு சிறந்த உணவாகும். இதில் A, B1, B2, B3, B6, C, E, K வைட்டமின்கள், ஃபோலிக் அமிலம், கால்சியம், இரும்புச்சத்து மற்றும் க்ளோரோஃபில் ஆகியவை இயற்கையாகவே இருப்பதால், அவை உடலில் உள்ள நச்சுத்தன்மையை எந்தவித தடையுமின்றி அகற்றுகிறது. இதை உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கும் அன்றாட நடவடிக்கையாக மாற்றி அதன் மூலம் ரத்த நாளங்களை ஆரோக்கியமாகவும், ஹீமோக்ளோபின் அளவை சீராகவும் வைக்கிறது. இதன் மூலம் கிடைக்கும் சக்தியினால் நீண்ட காலம் வாழ உதவிபுரிகிறது.

## WT-BALANCE

சீரான கொழுப்பு பகிர்ந்தளிப்பை அளிக்கவும், சோர்வை அகற்றி வளர்சிதை மாற்றத்தை அதிகப்படுத்தும் சீந்தல் கொடி, சிறு கீழாநெல்லி மற்றும் நெல்லிக்காய் இதில் உள்ளது. Wt-Balance உடல் எடையைப் படிப்படியாகக் குறைத்து ஆழமான திசுக்களின் மீது செயல்படுவதால் இது மிகவும் பாதுகாப்பானது. மேலும் உங்கள் உடலை உறுதியுடன் வைக்கிறது. இதனுடன் உடற்பயிற்சியும், உணவுக் கட்டுப்பாடும் சேரும்போது இன்னமும் சிறப்பான பயன்கள் அளிக்கிறது.

## OSTEOSEAL

வயதாவதால் உண்டாகும் தசை தளர்வு, எலும்பு வலு இழப்பு போன்றவற்றைத் தவிர்த்திட கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின்கள் A, B, & C, மற்றும் அமினோ அமிலங்கள் கொண்ட இந்த மூலிகை சூத்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தத் தாதுகள் எலும்புத்துளை நோயை குணப்படுத்த இன்றியமையாத ஒன்றாகும். மேலும் முறிவுகளை குணப்படுத்தவும் பயன்படுகிறது. வலுவான எலும்புகள் மற்றும் தசைகள் வேண்டுமெனில் இதை நிச்சயம் எடுத்துக் கொள்ளலாம். மேலும் மூட்டு வலிகளைக் குறைப்பதுடன் வராமல் காக்கிறது.

## WWB

கீழ்வாரி, வெள்ளி லோத்திரம், சீந்தல் கொடி, பெருந்துளசி கொண்டு தயாரிக்கப்பட்ட WWB பெண்களின் பல்வேறு நிலைகளிலும் அவர்கள் ஆரோக்கியத்தைப் பேணி காக்கிறது. ஈஸ்ட்ரோஜன் அளவை சமநிலையில் வைக்கவும், அழற்சியைக் குறைக்கவும், நீர்ச்சத்தை தக்கவைத்துக் கொள்ள உதவவும், மற்றும் பல உதவிகளை செய்கிறது WWB.

## TULSIGREEN TEA

ஒரு கோப்பை துளசி க்ரீன் டீ அருந்துவதால் கொழுப்பைக் கட்டுப்படுத்தி புத்துணர்வையும் பெறுங்கள். இந்த க்ரீன் டீ வளர்சிதை மாற்றத்தை அதிகப்படுத்துவதுடன், உடலில் உள்ள கொழுப்பைக் கரைக்கவும் உதவுகிறது. துளசியில் உள்ள அதிகப்படியான எதிர் ஆக்ஸிஜனேற்றிகள் உங்கள் உடலில் உள்ள அழுத்தத்தை குறைப்பதில் பெரும்பங்காற்றுகிறது. ஒவ்வொரு முறை அருந்தும்போதும் உங்கள் உடலும் மனதும் புத்துணர்வுடனும், புதிய சக்தியுடனும் இருப்பதை உணர்வீர்கள்.










Only for the use of Doctors, Hospitals and Laboratories

**FOR PRODUCT INFORMATION** SURESH SRINIVASAN @ 9940327053

**EMAIL** care@organicindia.com **SHOPONLINE** www.organicindiashop.com

சுத்தமானது ❖ இயற்கையானது ❖ தாக்குப்பிடிக்கக் கூடியது ❖ ஒழுங்கானது ❖ பொதுநலன் கொண்டது

All our herbs are tested for heavy metals in compliance with international safety standards

● ரோல் மாடல் சாஹா

# "போராடிப் பார்த்துடணும்!"

'லேக்மே ஃபேஷன் வீக்'கில் பங்கேற்பது என்பது பிரபல மாடல்களின் பிரதான இலக்காக இருக்கும். பெரிய பின்னணியும் நிறைய பயிற்சியும் உள்ள மாடல்களுக்கே அது பெருங்கனவு. இருப்பினும், அது அஞ்சலி லாமா என்கிற திருநங்கைக்கு நனவாகியிருக்கிறது!

நேபாளம், காத்மண்டுவில் விவசாயக் குடும்பத்தில் பிறந்து விளம்பர வெளிச்சத்துக்கு வந்திருக்கிற அஞ்சலியின் வாழ்க்கை நெகிழ்ச்சியானது.

"அம்மா - அப்பாவுக்கு நான் அஞ்சாவதாகப் பிறந்தேன். எனக்கு முன்னாடி நாலு ஆம்பிளைப் பிள்ளைங்க. அஞ்சாவதாவது பெண்ணா இருக்கணும்னு அப்பா ஆசைப்பட்டார். ஆனா, நானும் பையனா பிறந்தேன்.

8 வயசுலயே எனக்குள்ள நடந்த மாற்றங்களை உணர முடிஞ்சது. அண்ணன்களைத் தவிர்த்து என் தங்கை பக்கத்துல இருக்கிறதையே அதிகம் விரும்புவேன். பெண்கள் உடைகளைப் போட்டுக்கிட்டு ரசிப்பேன். 'நான் ஒரு பையன் தானே... அப்புறம் ஏன் இப்படியெல்லாம் தோணுது'னு மனசுக்குள்ள போராட்டமே நடக்கும். 'கடவுளே, என்னைப் பெண்ணா படைச்சிருக்கக்கூடாதா'னு பல நாள்கள் மனசுக்குள்ள அழுதிருக்கேன்..." - ஆண்மை கலந்திருந்தாலும், பெண்மைக்குரிய மென்மையுடன் பேசுகிறார் அஞ்சலி.

"என் உடம்புலயும் மனசுலயும் உருவான மாற்றம் என் படிப்புக்குப் பெரிய தடையா இருந்தது. எல்லா இடங்களிலும் என்னைக் கேலிப் பொருளா பார்த்தாங்க. காலேஜ்ல மூணாவது வருஷப் படிப்பை முடிக்க முடியலை. என்னோட 20-வது வயசுல முதன்முறையா ஒரு திருநங்கையைத் தெருவுல சந்திச்சேன். திருநங்கைகளின் பிரச்னைகளுக்காகப் போராடுகிற அமைப்புக்கு என்னைக் கூட்டிட்டுப் போய், இன்னொரு உலகத்தைக் காட்டினாங்க. என் மனசு விரும்பினபடி உடை அணியவும் வாழவும் ஆரம்பிச்சேன். என்னோட திருநங்கை தோழர்தான் எனக்கு அஞ்சலிங்கிற பெயரைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தாங்க. 'நபின் வய்பா லாமா' என்கிற நான், 'அஞ்சலி லாமா'வா மாறினேன். ஒருநாள் என் அண்ணனுக்கு விஷயம் தெரிஞ்சு எனக்கு போன் பண்ணி, 'உண்மையா?'னு கேட்டான். 'ஆமாம்'னு சொன்னதும், போனை மட்டுமல்ல... என் உறவையும் துண்டிச்சுக்கிட்டான். அம்மாவுக்கும் தங்கச்சிக்கும் தெரிஞ்சபோது, 'உன் விருப்பம்போல வாழு... ஆனா, தவறான பாதைக்குப் போயிடாதே'னு சொன்னாங்க. அதுதான் அவங்க எனக்குக் கொடுத்த அதிகபட்ச அங்கீகாரம்...'' - உறவுகளின் அங்கீகாரத்துக்கு ஏங்குகிற சராசரி திருநங்கை மனநிலையைப் பிரதிபலிக்கிறார் அஞ்சலி.

"காலேஜ் படிக்கிறபோது நான் பொண்ணுங்க மாதிரி டிரெஸ் பண்ணிக்கறதைப் பார்த்த சிலர், 'நீ மாடலிங் பண்ணலாமே'னு கிண்டலா சொல்வாங்க. ஆபரேஷன் பண்ணிக்கிட்டு நான் முழுமையான பெண்ணா மாறினதும், என்னோட உயரத்தையும், ஸ்லிம்மான உடல் வாகையும் பார்த்தபோது அவங்க சொன்ன விஷயம் ஞாபகம் வந்தது. வாய்ப்பு கேட்டு மாடலிங் ஏஜென்சிகளை அணுகியபோது, என்னைப் பார்த்து சிரிச்சவங்களும், என்னை விரட்டினவங்களும்தான் அதிகம். நல்ல உள்ளம் படைச்ச சிலர், எனக்கு ஆதரவாகவும் பேசினாங்க. ஆரம்ப காலத்துல ஃபேஷன் ஷோக்களிலும், போட்டோ ஷூட்டுலயும் பணம் எதுவும் எதிர்பார்க்காம கலந்துகிட்டேன். அப்படியும் எனக்கான வாய்ப்புகள் அதிகரிக்கலை. இருந்தாலும், நம்பிக்கையை இழக்காமல், என் திறமையை நம்பினேன். விடாமல் முயற்சி செய்ததுல சில வருஷங்கள் கழிச்சு எனக்கான கதவுகள்




திறந்தன. திருநங்கையா மட்டுமே பார்த்து என் திறமையை அலட்சியம் செய்தவங்க, ஒரு கட்டத்துல என் திறமையைக் கவனிக்க ஆரம்பிச்சாங்க.

2010-ல் 'தி மான்சூன் ஃபேஷன் ஷோ'வுல ராம்ப் வாக் பண்ணினேன். அந்த ஷோ பரவலான கவனத்தை ஈர்த்தது. 'வாய்ஸ் ஆஃப் விமன்' நேபாள பத்திரிகை அட்டையில என் போட்டோ வந்தது. ஆனாலும், அடுத்தடுத்த வாய்ப்புகள் அத்தனை சுலபத்துல கிடைக்கலை.

லேக்மே ஃபேஷன் வீக்ல கலந்துக்கிறதுதான் என்னோட லட்சியமா இருந்தது. இரண்டு முறை நிராகரிக்கப்பட்டேன். மூணாவது முறை தான் வாய்ப்பு கிடைச்சது. ஒரு காலத்துல 'பணமே வேண்டாம்... வாய்ப்பு கிடைச்சா போதும்'னு நினைச்சவ நான். இன்னிக்கு நான் கேட்கற பணத்தைக் கொடுத்து, ஃபேஷன் ஷோவுல கலந்துக்கச் சொல்றாங்க. பேரும் புகழும் ஒருத்தரைப் பத்தின பார்வையைத் தலைகீழா மாத்திடும்னு புரிஞ்சுக்கிட்டேன்..." - அஞ்சலியின் வார்த்தைகளில் வெற்றிக் களிப்பு!

"நேபாளத்துலேருந்து ஒரு பெண்ணா வாய்ப்பு தேடி வந்திருந்தாகூட நான் ஜெயிச்சிருப்பேனாங்கிறது தெரியலை. திருநங்கையா இருக்கிறதாலதான் போராடிப் பார்த்துடணும்கிற வெறி எனக்கும் வந்தது. நேபாளத்துல என்னை மாதிரியே உடல், மனக் குழப்பங்களோடு நிறையபேர் இருக்காங்க. அவங்களை எல்லாம் வெளியில கொண்டு வரணும். ரெட்டை வாழ்க்கை வாழ வேண்டிய அவசியமில்லைன்னு புரியவைக்கணும். நான் ஒரு ரோல்மாடலா இருக்கணும். 'உங்களை நம்புங்க... உங்க திறமை உங்களை உயரத்துக்குக் கொண்டுபோகும்'னு சொல்லணும்.

'மூன்றாம் பாலினம்'னு ஒண்ணு இருக்குங்கிற விழிப்பு உணர்வைப் பள்ளிக் குழந்தைங்களுக்கு சொல்லிக் கொடுக்கணும்னு கேட்டுக்கறேன். என்னை மாதிரி தன்னிலை புரியாத எத்தனையோ குழந்தைங்களுக்கு அது ஒரு புரிதலைத் தரும்..."

- அக்கறையுடன் முடிக்கிறார் அஞ்சலி.

www.vikatan.com

● ஸ்ரீ போஸ்ட்

# மரம்... அது வரம்!







**மா**ற்றுத்திறனாளிகளுக்கான உடைகளை வடிவமைக்கும் ஷாலினியின் முயற்சி உண்மையிலேயே ஒரு மகத்தான சேவை!

*- ஏ.எஸ்.நடராஜன்,* சிதம்பரம்

**இ**ருபது ஆண்டுகளாகப் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களின் மேம்பாட்டுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட சேத்னாவின் பணி பாராட்டுக்குரியது.

*- எஸ்.அகிலாண்டேஷ்வரி,* ஸ்ரீரங்கம்

**பு**துப்புது பகுதிகளை 'அவள் விகடன்' அறிமுகம் செய்து, சுவாரஸ்யமான செய்திகளை வெளியிட்டு, பொலிவுடன் மிளிருவதைப் பார்க்க மனம் சிலிர்க்கிறது.

*- காமாக்ஷி பிரசன்னா,* பெங்களூரு - 76

**'அ**வள் சேலஞ்ச்' பகுதியில் வெளியான வாசகிகளின் 'தினம் ஒரு மரம்' அருமையான வரம். இயற்கையைப் போற்றும் உன்னத தவம். வாழ்க்கை இயற்கையோடு ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. அதில் தாவரங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. எனவே, அதற்கான முயற்சியை ஆக்கபூர்வமாகச் செய்யும் அமிர்த மீனா, ஷைலஜா ராம்ஜிக்கு மனமார்ந்த வாழ்த்துகள்!

*- எஸ்.வளர்மதி,* கன்னியாகுமரி

**வி**வசாய நிலத்தில் பெண்கள்படும் வேதனை தொடர்பான கட்டுரையைப் படித்து மனம் நெகிழ்ந்தேன். இந்தப் பெண்களைக் காப்பாற்றப்போவது யார்? நகரங்களில் பணத்தைத் தந்து சுகமாக பொருள்களை பெற்று வாழும் என் போன்றவர்களுக்கு இந்தச் செய்தி அதிர்ச்சியைத் தருகிறது.

*- ஆர்.சியாமளா,* சென்னை - 28

## வாட்ஸ்அப் கமென்ட்ஸ்

**அ**வள் விகடனின் சிந்திக்கவைத்த 'நமக்குள்ளே' பகுதி அருமை. 'தவறுகளுக்கும் சலுகைகளை எதிர்பார்ப்பது சரியில்லை...' என்று சொன்னது நக்கீரனின் தீர்ப்பினை மெய்ப்பிப்பதாய் இருந்தது. நல்லவற்றைப் பாராட்டும் அதே நேரத்தில் தவறுகளையும் சுட்டி, குட்டு வைப்பதும் அருமை.

*- ம.ஜெயமேரி,* தாயில்பட்டி,

**பிரகதா நவநீதன்.** மதுரை-6

**'ம**னுஷி' பகுதியில், 'மெனோபாஸ் ஆண்களுக்கும் உண்டு' கட்டுரை படித்தேன். நான் இதுவரை அறியாத உண்மை இது. இந்த நிலையே ஆணை சிடுசிடுக்க வைத்து 'நாற்பது வயதில் நாய்க்குணம்' என்ற கெட்ட பெயரையும் வாங்கித் தருகிறது என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

*- ச.வள்ளுவன்,* வேம்பார்

இந்த இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை 90035 55441 என்ற நம்பருக்கு வாட்ஸ்அப் அல்லது மெசேஜ் பண்ணுங்க.

**அன்பு வாசகர்களே... எங்களுடன் தொடர்பு கொள்ளும்போது உங்கள் செல்போன் எண்/இ-மெயில் முகவரி குறிப்பிட மறக்காதீர்கள். உங்கள் படைப்புகள் எதுவானாலும் ஒரு பிரதி எடுத்து வைத்துக்கொண்டு அனுப்புங்கள். தபால் தலை மற்றும் சுயவிலாசமிட்ட உறை இணைக்க வேண்டாம். படைப்பு தேர்வாகாத பட்சத்தில் திருப்பி அனுப்ப இயலாது. இரண்டு மாதங்களுக்குள் எங்களிடம் இருந்து தகவல் கிடைக்காவிட்டால், உங்கள் படைப்பு தேர்வு பெறவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுகிறோம்.**

 தீபா ராம்

# ஜீன்ஸும் லெகின்ஸும் சேர்ந்தால்?



இன்றைய நவீன உலகில் பல portmanteau வார்த்தைகள் காணக்கிடைக்கின்றன. இரண்டு வெவ்வேறான வார்த்தைகளை ஒன்றாக்கி புது வார்த்தை உருவாக்குவதுதான் Portmanteau. உடுத்தும் உடை முதல் வாசிக்கிற வலைத்தளம் வரை எங்கும் இந்த வார்த்தைகள் நிறைந்து காணப்படுகின்றன. சமூக வலைத் தளங்களின் ஆட்சியால் இத்தகைய வார்த்தைகள் பத்திரிகைகளில் மட்டுமன்றி அன்றாட பயன்பாட்டிலும் பரவலாகிவிட்டன. அத்தகைய வார்த்தைகளை அறிவோம் வாருங்கள்!

### காலையும் மாலையும் கலந்து...

காலை உணவான break fast-ல் பரிமாறப்படும் உணவுகளான முட்டை, இறைச்சி மற்றும் கேக் போன்ற இனிப்பு வகைகளை இரவில் பரிமாறினால், அதற்குப் பெயர் Brinner ('breakfast' and 'dinner') கடத்தல்.

மனிதர்களைப் பிணையகைதியாக்கி கடத்தல் நிகழ்த்தினால் அது hijacking. இந்த hijacking ஒருவர் காரில் பயணம் செய்யும்போது நிகழ்ந்தால் அதுதான் Carjacking ('car' and 'hijacking'). கார், மனிதர் இருவரையும் சேர்ந்து கடத்தினால்தான் இந்தச் சொல் பொருந்தும்.

இன்னொன்றும் இருக்கிறது... பனிக்காலத்தில் காரை நிறுத்திவிட்டு இன்ஜினை அணைக்காமல் காரின் உரிமையாளர் வெளியே செல்லும்போது கண நேரத்தில் காரை கடத்திக்கொண்டு போவது Frostjacking ('frost' and 'hijack).

### உங்களுக்கு 'Jeggings' தெரியுமா..?

இன்றைக்குப் பெரும்பாலான யுவதிகள் விரும்பி அணியும் ஓர் உடை leggings. ஜீன்ஸ் துணியை போலவே உருவாக்கப்பட்ட லெகின்ஸ் தான் Jeggings. பார்ப்பதற்கு ஜீன்ஸ் போலவே இருந்தாலும், லெகின்ஸ் போலவே stretch fit உடையது இது.



### ஓ... பிரிட்டன்!

ஐரோப்பிய நாடுகளின் குழுமத்தில் இருந்து பிரிட்டன் (United Kingdom) வெளியேறியதைக் குறிக்கும் சுருக்கம்தான் brexit ('Britain' and 'exit').

• வீடு Vs வேலை யாழ் ஸ்ரீதேவி ஓவியங்கள்: ராமமூர்த்தி

# வீண் பேச்சுகளை கண்டுகொள்ளாமல் விடுங்கள்!

அனைவரையும் சிநேகமாக்கிடும் மந்திரப் புன்னகைக்குச் சொந்தக்காரர் லதா. எவ்வளவு பிஸியான தருணத்திலும் பளிச் தோற்றம்... டென்ஷன் பொழுதுகளிலும் நிதானம் என வியக்கவைக்கிறார். பத்தாம் வகுப்புப் படிப்பு, நெருங்கிய உறவில் திருமணம், குழந்தைகள் என வாழ்க்கை அமைந்த பிறகும், மிகுந்த நம்பிக்கையோடு ஆசிரியர் பயிற்சி முடித்து வாழ்க்கையில் உயர்ந்திருக்கிறார் லதா. இப்போது சேலம் சிந்தி இந்து உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர். கணவர் அண்ணாதுரை மெக்கானிக்கல் ஷாப் நடத்துகிறார். முதல் மகன் விக்னேஷ் பி.டெக் படித்து விட்டுப் பணிபுரிகிறார். இரண்டாவது மகன் லிங்கேஷ் நாராயண் பத்தாம் வகுப்பு படிக்கிறார்.



▲ லதா

வீட்டில் எல்லோரும் விரும்பும் பெண், வேலையிடத்தில் 'சூப்பர் ஹெச்.எம்' என கால்பதிக்கும் இடங்களில் எல்லாம் சிக்ஸர் அடித்து விளாசும் லதாவின் சக்சஸ் டெக்னிக்தான் என்ன?

❖ நிறையப் படிக்க ஆசைப்பட்டேன். ஆனால், நதியின் போக்கு போலத்தான் என் வாழ்க்கைப் பயணம் அமைந்தது. படிக்க முடியாத ஏமாற்றம் என்னைத் தூங்கவே விடவில்லை; என்னைப் 'படி படி' எனப் புரட்டியது. நெருக்கடிகளே என்னை முயற்சியை நோக்கித் தள்ளின.



❖ படித்ததோடு, பணிக்கும் சென்றுவிடும் வேகம் எனக்குள். குழந்தை பிறந்த பின் பல சிரமங்களைச் சந்தித்தேன். ஆதரவு இல்லை என்றாலும், முயற்சிகளைத் தீவிரப்படுத்தினேன். எதிர்ப்புகளே என் வெற்றிக்கு வழி வகுத்தன.





❖ கைக்குழந்தையை வைத்துக்கொண்டே ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்து படிக்கத் தொடங்கினேன். வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, இரவு 10 மணியிலிருந்து நள்ளிரவு 1 மணி வரை படிப்பேன். இப்படி எனக்கான நேரத்தை நானே உருவாக்கிக் கொண்டேன்.



❖ படிக்கும் சுவாரஸ்யமான விஷயங்களைக் குழந்தைகளுடன் பகிர்ந்துகொள்வது அவர்களையும் எனர்ஜிட்டிக்காக மாற்றும்.



www.vikatan.com

❖ கூட்டுக் குடும்பத்தில் பல சிரமங்கள் இருந்தாலும் கூட, வேலை, வீடு இரண்டையும் சமாளிக்கும் பெண்களின் குழந்தை வளர்ப்புச் சுமையை அது ஓரளவு குறைக்கிறது. உறவுகளோடு கொஞ்சம் அனுசரித்துப் போனதால், குழந்தையை விட்டுவிட்டு வேலைக்கும் சென்று சமாளிக்க முடிந்தது.



❖ காலை நேர அவசரங்களைத் தவிர்க்க, இரவே சமையலுக்கான முன்தயாரிப்புகளை முடித்துவிடுவேன். அன்றாடம் முடிக்கக்கூடிய வீட்டு வேலைகளை வார விடுமுறை நாளுக்காகச் சேர்த்து வைப்பதில்லை.





❖ நம் வீட்டிலோ, வேலை பார்க்கும் இடத்திலோ நமக்குப் பிடித்த மாதிரி எல்லாமே அமையாது. எப்போதும் நமக்கு எதிராகச் செயல்படுபவர்களே நம்மை அடுத்த கட்டத்துக்கு உயர்த்துவதாக உணர்கிறேன்.



❖ விடுமுறைகளின் போது சொந்தபந்தங்களோடு ஏற்காடு, ஊட்டி, திருப்பதி என ஏதேனும் ஓர் இடத்தில் இரண்டு நாள்கள் தங்கி ரிலாக்ஸ் செய்துவிட்டு மனம் லேசாகி திரும்புவேன்.

❖ எனக்குப் புத்தகம் வாசிப்பது பிடிக்கும். ரெஸ்ட் ரூமில் கூட செய்தித்தாள், பத்திரிகை படிக்கும் ஆள் நான்! இரவு தூங்குவதற்கு முன்பு 2 மணி நேரம் புத்தகம் படிப்பதற்காக ஒதுக்குகிறேன்.




❖ பணியிடங்களில் ஆண்களின் விமர்சனங்களுக்கு நான் ஒரு போதும் சோர்ந்து போவதில்லை. பெண்கள் தங்களின் பணிகளைக் குறையின்றிச் செய்வதில் கவனம் செலுத்தினாலே போதும்என்பதுஎன் அனுபவப் பாடம். எனக்கு எதிரான எந்த அரசியலைப் பற்றியும் கவலைப்படுவதில்லை.





❖ விடுமுறை நாளில் வீட்டைச் சுத்தம் செய்வது போன்ற வேலைகள் இருக்கும். அவற்றை வீட்டில் இருப்பவர்களுக்கும் பிரித்துக் கொடுத்து வேலையை எளிதாக்கிக் கொள்வேன்.



❖ வீடு, வேலை இரண்டையும் சமாளிப்பதில் உள்ள பிரச்னைகளை ஸ்மார்ட்டாகக் கையாண்டுவிட்டால் பெண்ணால் பொருளாதாரச் சுதந்திரத்தை எட்ட முடியும்.

❖ வேலையும் வீடும் எதிர் எதிர் திசைகளில் பயணிக்கும் இரட்டைக் குதிரைகள். அலுவலக டென்ஷனை ஒருநாளும் வீட்டில் வெளிப்படுத்தியதில்லை. பள்ளிக்கு வந்துவிட்டால் வீட்டை மறந்துவிடுவேன். எங்கு இருக்கிறேனோ, அங்குள்ள வேலைக்கே முக்கியத்துவம் தருவேன்.



❖ வேலை முடிந்து வீடு திரும்பியவுடன், குழந்தைகளோடு முழுமையாக ஒரு மணி நேரம் செலவழிப்பதை வழக்கப்படுத்திக்கொண்டேன். காலை முதல் என்னைக் காணாத ஏக்கம் போகும் வரை குழந்தையைப் பேசவைத்துக் கேட்பேன்... விளையாடுவேன்.

❖ 'வேலைக்குச் செல்வதால் வீட்டைக் கவனிப்பதில்லை' என்பது போன்ற ஏச்சும் பேச்சும் அவ்வப்போது கிளம்பும். அவற்றைப் பெரிது படுத்தாமல் என் வேலைகளைச் செய்து முடிப்பேன். இதுபோன்ற பேச்சுகளைக் கண்டுகொள்ளாமல் விட்டால்தான் உறவினர்களிடம் பிரச்னை வளராமல் தடுக்கலாம்.



❖ 'பணியில் சேர்ந்தோம்; வேலையைப் பார்த்தோம்' என்று இல்லாமல், படிக்கச் சிரமப்படும் குழந்தைகளிடம் கூடுதல் கவனம் செலுத்தினேன். அறிவொளி இயக்கப் பணிகளிலும் ஈடுபட்டேன். கூடுதல் உழைப்பு எனக்குத் தலைமை ஆசிரியர் பதவியைப் பெற்றுக் கொடுத்தது.

❖ வீடு, பணியிடம் என இரண்டிலும் பல்வேறு பொறுப்புகளைக் கவனிப்பதால், குடும்பத்தினரிடம் மனம்விட்டுப் பேச நேரம் இருக்காது. வார விடுமுறை நாள்களில் சேர்த்துவைத்துப் பேசிவிடுவேன்.



❖ பள்ளியில் இருக்கும்போது, வீட்டில் நடந்த எந்த விஷயமும் என் முகத்தில் தெரியாது. பல விமர்சனங்களைத் தாண்டியும் மற்றவர்கள் முன்பு நான் எப்போதும் ஸ்பெஷலாகத் தெரியும்படி உடுத்துவேன். இதுவே எனது அடையாளமாகவும் மாறிவிட்டது. தோற்றம்தான் நம்மைப் பற்றிய எண்ணத்தை மற்றவர்கள் மனதில் உருவாக்குகிறது.

## டிப்ஸ்... டிப்ஸ்...

ஒவ்வொன்றுக்கும் பரிசு: ₹ 100



**ப**ஜ்ஜி செய்யும்போது ஒரு கரண்டி இட்லி மாவை, அதில் கலந்து செய்தால், பஜ்ஜி உப்பி, சுவையாக இருக்கும்.

*– அ.ரூபினா,*
*நெய்வேலி*

**ஃ**ப்ரைடு ரைஸ், தேங்காய் சாதம் செய்யும்போது முதலில் எண்ணெயில் ஒரு டீஸ்பூன் கசகசாவைப் போட்டுத் தாளித்து, பிறகு மற்ற மசாலாப் பொருள்களைச் சேர்த்தால், சுவை கூடும்.

*– பகவதி பிரவின்,*
*சென்னை - 91*



# 12

# பூ வாசம் புறப்படும் பெண்ணே!

• மனுஷி சுபா கண்ணன் ஓவியம்: ஸ்யாம்

**எங்கே பெண்கள் வாழ்த்தப்படுகிறார்களோ, அங்கே இறைவன்மகிழ்கிறான். எங்கே பெண்கள் போற்றப்படவில்லையோ, அங்கே செய்யக்கூடிய புண்ணிய காரியங்கள்கூட பலனளிக்காமல் போய்விடும்.**

*(மனு 3—56)*

அனிதாவின் அப்பா மத்திய அரசு ஊழியர். தொடர்ந்து மாற்றல் வந்துகொண்டே இருக்கும் வேலை. ஒவ்வொரு மாநிலமாகப் பார்த்துக்கொண்டே வந்தவளின் மேல்நிலைப் பள்ளிப் படிப்பு முடித்த நிலையில், அப்பாவுக்கு டெல்லிக்கு மாற்றல் கிடைத்தது. அப்போதிலிருந்து டெல்லியிலேயே தங்கி, கல்லூரிப் படிப்பை முடித்தவள், அங்கேயே வேலையும் பார்த்துக்கொண்டு, படேல் இனத்தைச் சேர்ந்த ஜெய்யேஷைத் திருமணம் செய்துகொண்டாள். பெண் குழந்தை அஜியும் பிறந்து வளர்ந்துவிட்டாள்.

ஆசை மகள் அஜி ப்ளஸ் டூ முடித்து, அவளுக்கு மருத்துவக் கல்லூரியில் இடமும் கிடைத்துவிட்டது. கல்லூரி தொடக்க நாளுக்காகக் காத்திருந்தாள். அஜியின் நுழைவுத்தேர்வு, கவுன்சலிங் போன்ற ஃபார்மாலிட்டிகளால் இந்த விடுமுறையில் ஒரு சுற்றுலாவுக்கு முன்னதாகவே திட்டமிட முடியவில்லை. இந்நிலையில்தான் டெல்லி தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு டூர் ஏற்பாடு செய்திருந்தார்கள். அனிதாவின் தோழி மீனலோசனிதான் சங்கத்தின் செயலர்.

அனிதாவை போனில் அழைத்த மீனலோசனி, ''இரண்டு டிக்கெட்டுகள் கேன்சலாகிவிட்டன. நீயும் அஜியும் வர்றீங்களா? இரண்டு மணி நேரத்துல சொல்லிடு, ஜெய்யேஷ் என்ன சொல்வார்னு பார்த்துக்கோ" என்று சொல்லியபடியே பதிலைக்கூட எதிர்பார்க்காமல் போனை வைத்துவிட்டாள்.

குழந்தைப் பருவ நினைவுகளும், தமிழ்நாட்டைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையும் இருந்ததால், கணவரிடம் அனுமதி கேட்டாள். அவரும் பச்சைக்கொடி காட்டிவிட்டார்.

இதோ... அனிதாவும் அஜியும் டெல்லி தமிழ்ச் சங்க மக்களும் வந்து திருச்சி ஏர்போர்ட்டில் இறங்கியிருக்கிறார்கள். 45-50 வயதில் இருப்பவர்களே இந்தக் குழுவில் நிறைய பேர். அதனால், தேர்ந்தெடுத்த கிராமங்களில் தங்கியிருந்து, இயற்கையையும் இறைத்தலங்களையும் ரசிக்கும் ஹெரிட்டேஜ் டூராகவே இந்தப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இந்தப் பயணத்தின்போது அஜிக்கு மிகுந்த ஆச்சர்யம் அளித்தது... கிராமங்களில் உள்ள பெண்கள் தங்கள் தலையில் வைத்திருந்த பூச்சரம்தான். காரணம், டெல்லியிலேயே வளர்ந்ததால், அஜியும் சரி, அந்தக் குழுவில் வந்த மற்ற பெண்களும் சரி... எல்லோரும் ஃபெதர் கட்டிங், பாய் கட்டிங் என்றே பழகி யிருந்ததுதான்.

"இங்க இருக்கற பெண்கள் தலையில பூ வைப்பது கட்டாயமாம்மா?'' என்று கேட்டாள் அஜி.

அவ்வளவுதான்... அனிதாவுக்குப் பழைய நினைவுகள் எல்லாம் மனதில் நிழற்படங்களாக விரிய, அந்த

## வாசனை!

**ச**மையல் செய்யும்போது, கொதிக்கும் சத்தம் காதுக்குக் கேட்கிறது. கொதிக்கும்போது உண்டாகும் வாசனையை நாசி உணர்கிறது. அந்த வாசனை வாயில் உமிழ்நீரைச் சுரக்கச் செய்கிறது. அந்த உமிழ்நீரே நாம் உண்ணும் உணவை நன்றாக மென்று உண்ணும்படிச் செய்கிறது. ஆக, உணவை வாய்க்கும் வயிற்றுக்குமாக மட்டுமல்லாமல் ஐம்புலன்களாலும் அனுபவிக்கச் சொல்கிறது ஆயுர்வேதம்.

நினைவுகளை மகளிடம் பகிர்ந்துகொண்டாள்...

"அப்போல்லாம் பெண் குழந்தைகளுக்குத் தலையில் முடி வளர்ந்ததுமே, குட்டி ரப்பர் வளையலை ரிப்பனில் கட்டிச் சுற்றி பூ வைத்து 'கிருஷ்ணர் கொண்டை' போட்டுவிடுவார்கள். கொஞ்சம் நீளமாக முடி வளர்ந்துவிட்டால் போதும்... இரண்டு ஜடை பின்னி, இரண்டு ஜடைகளையும் இணைக்கும் பாலமாக, பூக்களை சரமாகத் தொடுத்துச் சூட்டுவார்கள். பத்து வயதுக்குப் பிறகு, மல்லி, முல்லை, சாமந்தி, சம்பங்கி, பாரிஜாதம், தாழம்பூ என்று பல பூக்களைக்கொண்டு ஜடை தைப்பார்கள். முழுக்க பூக்களால் தலைமுடியை கவர் செய்து, தொங்கும் குஞ்சலத்துடன் கழுத்து வலிக்க ஒரு தினுசாக வீட்டில் உலவுவதைப் பார்ப்பதற்கே பேரழகாக இருக்கும். ஒரு வாரத்துக்கு தலை வாசனையாக இருக்கும். ஹூம்... நம்ம ஊர் பரபரப்பில் தலை சீவுவதற்கே நேரம் இல்லை" என்று அங்கலாய்ப்புடன் முடித்தாள் அனிதா.

தொடர்ந்து, ''அந்தக் காலத்துல மருதாணி, மஞ்சள், சந்தனம், வீட்டில் அரைத்த நலங்கு மாவு, சீயக்காய்ப்பொடி என்று எல்லாமே இயற்கையாகவும் ஃப்ரெஷ்ஷாகவும் இருந்தன. 'நம்ம கைப்பக்குவத்தில் உருவான வாசனை!' என்று பெரியவர்களோட மனமெல்லாம் குதூகலிக்கும்" என்று ஊர்ப் பக்கமுள்ள பெண்களுக்கும் வாசனைக் கும் இருக்கும் தொடர்பை விவரித்தாள்.

ஆனால், அஜி இளைய தலைமுறை என்பதாலும், படித்தவள் என்பதாலும், 'பெண்களிடம் வாசனைக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம்?' என்று அவளுடைய மனம் கேள்வியை எழுப்பியது. கம்ப்யூட்டர் யுகமல்லவா... உடனே அஜி கூகுளாண்டவரை சரணடைந்தாள். இரவு நீண்டநேரம் கூகுளாண்டவரிடம் பேசியதில் பல தகவல்களைத் தெரிந்துகொண்டாள். தான் தெரிந்து கொண்டதை உடனே அம்மாவிடமும் பகிர்ந்துகொள்ள ஆசைப்பட்டாள். விடிந்ததுமே தான் சேகரித்த விஷயங்களை அம்மாவிடம் பகிர்ந்து கொண்டாள்....

"அம்மா, பெண்களுக்குச் சுரக்கும் ஈஸ்ட்ரோஜன் சுரப்பிக்கும் வாசனைக்கும் நிறைய தொடர்பு இருக்காம். ஆதிகாலத்தில் ஒரு பெண், ஓர் ஆணிடம் இருந்து வெளிப்படும் வாசனையில் இருந்தே குழந்தை பாக்கியம் தரக்கூடிய தகுதி அவனுக்கு உள்ளதா என்பதுவரை புரிந்துகொள்ளும் சூட்சுமச் சக்தி கொண்டிருந்தாளாம். அந்த வாசனை அறியும் உணர்ச்சியைத் தக்க வைக்கவும், வாசனைகளுக்கு இடையில் உள்ள வேறுபாட்டை உணரவைக்கவும்தான், பெண்களுக்கான பல சடங்குகளிலும் பூக்கள் மற்றும் மருத்துவ குணம் நிறைந்த வாசனைப் பொருள்கள் நிறைய இடம் பெறும்படி பார்த்துக்கொண்டார்கள்.



குறிப்பாக, பெண்களின் பீரியாடிக் சைக்கிள் என்று சொல்லப்படும் மாதாந்திரச் சுழற்சியின் முதல் பாதியில் (அதாவது, 28 நாள்கள் கொண்ட ஒரு சுழற்சியில் முதல் 14 நாள்கள்) வாசனை உணரும் தன்மை அதிகமாக இருக்கிறது. கரு முட்டை உடையும் நிலையில் கொஞ்சம் கொஞ்சமாக வாசனை உணரும் தன்மை குறைகிறது. ஆனால், கரு விந்தணுவுடன் சேர்ந்து கருத்தரித்துவிட்ட பிறகு, ஈஸ்ட்ரோஜன் அளவு அதிகரிப்பதன் மூலம் மெல்லிய வாசனையைக்கூட துல்லியமாக


www.vikatan.com



https://t.me/SKLINKS

உணர்வதாலேயே வாந்தி எடுக்கும்படி நேர்கிறது.

வாசனை என்கிற உணர்வு பெண்களுடன் இணைந்த ஒன்று... ஆண்களைவிட பெண்களால் அதிகமான வாசனைகளைப் பிரித்தறிய முடியும்" என்று கூகுளாண்டவர் அருளால் தான் தெரிந்து கொண்ட அத்தனை தகவல்களையும் அம்மாவிடம் பகிர்ந்துகொண்டாள்.

'ஏன், எதற்கு' என்று கேள்வியே கேட்காமல், பெரியவர்களிடம் இருந்த மரியாதை கலந்த பக்தியுடன் பின்பற்றிய தனக்கும், எதையுமே ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கூகுளில் தேடித்தேடி தகவல்களைச் சேகரித்துச் சொல்லும் தன்னுடைய மகளுக்கும் உள்ள இடைவெளியை நினைத்து அனிதா வியந்து நின்றபோது, "இந்தா... சந்தனத்தை எடுத்துக்கோ" என்று அரைத்த சந்தனத்தைக் கொடுத்த மீனலோசனி, "இதுதான் ஆத்மா வரை சென்று குளிர்விக்குமாம். நேற்றுதான் ஒரு செய்தித் துணுக்கில் படித்தேன்" என்றாள்.

சந்தனத்தை எடுத்துக்கொண்டபடியே அனிதாவும் மகள் அஜியும் ஒருவரை ஒருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்து சிரித்துக் கொண்டனர்!

(இன்னும் உணர்வோம்)

 எம்.மரிய பெல்சின்



# ரத்தப்போக்கை நிறுத்தும் மாதுளை!

**மா**துளை... இது மாதுளங்கம், பீசபுரம், தாடிமக்கனி என வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. பூ, பிஞ்சு, பழம், விதை, பட்டை, வேர் என மாதுளம் மரத்தின் அனைத்துப் பாகங்களுமே மருத்துவக் குணமுடையவை. மாதுளம்பூ மொக்கை காயவைத்துப் பொடியாக்கி சாப்பிட்டுவந்தால் இருமல் நிற்கும். மாதுளம்பூவின் சாற்றுடன் அறுகம்புல்லின் சாற்றையும் சேர்த்துக் குடித்துவந்தால் மூக்கிலிருந்து ரத்தம் வடிதல் நிற்கும். மாதுளம் பிஞ்சை நறுக்கி, நீர்விட்டுக் கொதிக்கவைத்து குடித்துவந்தால் சீதபேதி நிற்கும். பிஞ்சுக்காய்களை மையாக அரைத்து பாலில் கலந்து, காலை – மாலை என குடித்துவந்தால் மாதவிடாயின்போது வரக்கூடிய அதிக ரத்தப்போக்கு சரியாகும். மாதுளம் பழச்சாற்றில் கற்கண்டு சேர்த்து மணப்பாகு செய்து குடித்துவந்தால் காய்ச்சல், தாகம், அழலை போன்றவை குணமாகும். பழத்தோலை உலர்த்திப் பொடி செய்து சாப்பிட்டுவந்தால் இளைப்பு நோய் குணமாகும். வேர்ப்பட்டையுடன் லவங்கம் சேர்த்து நீர்விட்டுக் காய்ச்சிக் குடித்து வந்தால் தட்டைப்புழு மலத்துடன் வெளியேறும்.

மாதுளம்பழத்தை ஆண்கள் தினமும் சாப்பிட்டு வந்தால் ஆண்மைக்கோளாறுகள் நீங்கும். பெண்கள் சாப்பிடுவதனால் கருப்பையில் வரக்கூடிய நோய்கள் விலகும். மேலும், மாதுளம் பழத்தை சாப்பிடுவதன்மூலம் இருபாலருக்கும் வெப்பத்தால் வரக்கூடிய காய்ச்சல், நெஞ்செரிச்சல், காதடைப்பு, மயக்கம் போன்றவை சரியாவதோடு உடல் குளிர்ச்சியடையும். மரத்தில் தானாகப் பழுத்து வெடித்த பழங்களை எடுத்து துணியில் வைத்துப் பிசைந்து சாறெடுத்து கற்கண்டு சேர்த்துக் குடித்தால் முழுமையான பலன் கிடைக்கும். மாதுளை இதயத்துக்கு பலத்தையும், மூளைக்கு வலிமையையும் சேர்ப்பதோடு பித்த நோய்களையும் குணப்படுத்தும். மாதுளம்பழச் சாறு குடிப்பதால் உடம்பில் வரக்கூடிய கட்டிகள் குணமாவதோடு, புற்றுநோய்க் கட்டிகளும் குணமாகின்றன.

மாதுளம்பழச் சாற்றுடன் கற்கண்டு அல்லது சர்க்கரை சேர்த்து காலையும் மாலையும் குடித்து வந்தால் மகப்பேறு நேரங்களில் வரக்கூடிய ரத்தச்சோகை சரியாகும்.

A Sure Product of
Shri Lakshmi
Agro Foods Pvt Ltd

# Udhaiyam®

உதயம் பருப்பு வகைகளின்

## சர்வதேச மகளிர் தின நல்வாழ்த்துக்கள்




## PURE DHALL IS WORLDWIDE

We invite expansion ventures from

**Distributors & Franchisors Worldwide**

For trade enquiries contact:

P: +91 94440 77155, +91 98406 43223 | E: onlinesales@udhaiyamdhall.com

www.udhaiyamdhall.com

India
USA
UK
France
Australia
New Zealand
Singapore
Srilanka
Malaysia
Zambia
Canada
Dubai

vinisha vision

• இது புதுசு யாழ் ஸ்ரீதேவி

## ட்ரெண்டி...

# வெஸ்டர்ன் பாணியில் நம்ம ஊர் நைட்டிகள்!

பெண்களின் மனதுக்கு மிகவும் நெருக்கமான உடை நைட்டி. ரிலாக்ஸ்டாக உணரச்செய்கிற வசதியான உடையும் இதுதான். பல ஆண்டுகளாக ஒரே பாணியிலேயே தயாரிக்கப்பட்டு வந்த நைட்டிகள், இப்போது புதிய வடிவங்களுக்கு மாறி, ஃபேஷன் உலகிலும் இடம்பிடித்துவிட்டன. ஆம்... தோள் தொட்டு, கால் பட்டு தொடரும் நைட்டியின் ஸ்டைல் அவ்வப்போது மாறினால்தானே பெண்களின் விருப்பமும் தொடரும்..? திருப்பூர் நிஃப்ட்-டி காலேஜ் ஆஃப் நிட்வேர் ஃபேஷன் மாணவிகளின் சிந்தனையில் உதித்த இந்த மாற்றம் மார்க்கெட்டுக்கும் வரப்போகிறது!

'எம்.பி.ஏ அப்பாரல் பிசினஸ்' முதலாம் ஆண்டு மாணவிகளின் கைவண்ணத்தால் உருவான நைட்டி ஃபியூஷனில் வெஸ்டர்ன் ஸ்டைல் வசீகரிக்கிறது. அனுப்பிரியா, சந்தியா, வாசுகி, தனுஸ்ரீ, கிர்த்தனா, வைஷ்ணவி... இந்த ஆறு பெண்களும் சேர்ந்து உருவாக்கிய நைட்டிகளுக்கு 'ட்ரெண்டி' எனப் பெயர் சூட்டியுள்ளனர். இந்த ட்ரெண்டி நைட்டிகளுக்கு உயிர்கொடுத்த மாடங்களையும் ஸ்டைலாக க்ளிக் செய்து நமக்கு அளித்திருக்கிறார், 'காஸ்ட்யூம் டிசைனிங்' முதலாம் ஆண்டு மாணவி சௌமியா.

"காட்டன் ஃபேப்ரிக் அல்லது பனியன் கிளாத், சிங்கிள் பீஸ் உடை... அப்படியே உள்ளே புகுந்து உடலை மூடிக்கொள்கிற மாதிரி ஒரு ஸ்டைல்... இப்படி ஒரே மாதிரி நைட்டியை வெறுக்கும் பெண்கள் பலரும் கனவில் வந்து எங்களைத் திட்டித் தீர்க்கிற மாதிரி ஒரு ஃபீல். வீட்டுக்கு விருந்தாளி வந்துட்டா ஷால் தேடி ஓட வேண்டிய சங்கடம். வீட்டுவேலைகளுக்கு இடையில் பக்கத்துக் கடைக்குக்கூட டக்குன்னு கிளம்ப முடியாது. அதனால, எல்லாப் பிரச்னைகளையும் ஒரே மாத்திரையில் குணமாக்கிற மாதிரி ஸ்டைல மாத்திட்டோம்" என்று அறிமுகம் தருகின்றனர் இந்த ஸ்டைலிஷ் மாணவிகள்.

'ட்ரெண்டி நைட்டியில் அப்படி என்ன ஸ்பெஷலோ?' சொல்கிறார் தனுஸ்ரீ...

"நைட்டியோட கான்செப்டை மாற்றுவதற்காக ஃபேப்ரிக்கையே மாற்றினோம். காட்டனுக்குப் பதிலா டெனிம். இது ஜீன் லுக் தரும்.





**"ட்ராவல், டிரைவிங் பண்ணும் போதும் இது ஸ்டைலாகவே இருக்கும். டெனிம் ஃபேப்ரிக் நைட்டியைக் கொஞ்சம் ஷார்ட்டாகத் தைத்து லெகின்ஸுடன் மேட்ச் செய்தும் போடலாம்!"**

ஷாஃப்ட் டெனிம் ஃபேப்ரிக்ல நிறைய கலர்ஸ் தேடினோம். டெனிம்ல டிசைன் பண்றதே ரொம்ப ஸ்பெஷல். வெஸ்டர்ன் ஸ்டைல் காலர், கட்டிங்... இப்படி அடுத்தடுத்த விஷயங்கள் அழகாவே அமைஞ்சது.

இதில் சுருக்கம் விழாது. எத்தனை முறை துவைத்தாலும் கலர் போகாது. விரைவில் உலர்ந்துவிடும். டெனிம் கிளாத் நைட்டியைப் பராமரிக்கிறதும் ஈஸி. மெல்லிய டெனிம் கிளாத் நைட்டி போட்டுக்கிட்டா, உடலோடு மேகத்தைக் கட்டிக்கிட்டாற்போல உணரலாம்!"

வெஸ்டர்ன் ஸ்டைலையும் டெனிமையும் மிக்ஸ் செய்த கலாட்டாவைப் பகிர்ந்து கொள்கிறார் அனுப்பிரியா... "வெஸ்டர்ன் ஸ்டைல் உடைகள் ஹெவியா இருப்பதில்லை. வழக்கமான உடைகளுக்கு நேரெதிர் அனுபவங்களைத் தரும். உடலில் சிக்கெனப் பொருந்தும். பருமனான பெண்களையும் ஸ்லிம் தோற்றத்தில் காட்டும். அடிப்படையில், இதுபோன்ற நைட்டிக்கு ஒன்றரை மீட்டர் டெனிம் துணிதான் தேவை. காலர், கழுத்து, கை, பாட்டம்னு அங்கங்க எக்ஸ்ட்ரா பிட் வொர்க் சேர்த்து வெஸ்டர்ன் ஸ்டைலை மிளிர வெச்சிருக்கோம். தாய்மைக் காலத்தில் பால் புகட்ட வசதியா ஓப்பனிங் வெச்சிருக்கோம்.

காட்டன் நைட்டில இருக்கும் பிரச்னைகள் எதுவும் டெனிம்ல இல்ல. டிரான்ஸ்பரன்டா தெரியாது. முன் கழுத்து பகுதிக்கான டிசைனில், குனிந்து, நிமிர்ந்து வேலை பார்த்தாலும் சங்கடப்பட வேண்டிய அவசியமில்லாம பார்த்துக்கிட்டோம். உட்கார்ந்து, எழுந்து செய்ய வேண்டிய வேலைகளின்போதும் டெனிம் கிளாத் வளைந்து கொடுக்கும். வீட்டில் தடபுடல் சமையலுக்கு இடையில் வெளியில் ஷாப்பிங் செல்ல நேரிடலாம். அதற்காக புதிதாக உடுத்திக் கொண்டிருக்கத் தேவையில்லை. ட்ராவல், டிரைவிங் பண்ணும்போதும் இது ஸ்டைலாகவே இருக்கும். டெனிம் ஃபேப்ரிக் நைட்டியைக் கொஞ்சம் ஷார்ட்டாகத் தைத்து லெகின்ஸுடன் மேட்ச் செய்தும் போடலாம். பெண்கள் ஆசைப்படும் அத்தனை ஸ்டைலும் இதில் சாத்தியம்!"

அட... இனி ஆசை ஆசையாக நைட்டியும் அணியலாம்! ●





● ஹோம் தியேட்டர் பா.விஜயலட்சுமி

# 18 ஆண்டுகளாக பட்டையைக் கிளப்பும் 'சிஐடி' சீரியல்!



▼ ஸ்ரிதிகா

## ஸ்மைல் ப்ளீஸ்!

"வில்லி ரோலில் என்னை நினைச்சுப் பாருங்களேன்... உங்களுக்கே சிரிப்பு வருதுல்ல! அந்த அளவுக்கு பால்வடியற ஃபேஸ் என்னோடது. ஆனா, வாழ்க்கையில் ஒரே ஒரு முறையாவது பயங்கர வில்லத்தனமான ரோலில் நடிச்சுடணும்" என்கிறார் ஸ்ரிதிகா!

சன் டி.வி 'குலதெய்வம்' தொடரில் அலமேலுவாகக் கலக்கிக் கொண்டிருப்பவரிடம், 'அழகின் ரகசியம்..?' என்றதும் வெட்கத்துடன் புன்னகைக்கிறார். "நிறைய தண்ணீர், நிறைய பழங்கள்... இதுதான் என் அழகின் சீக்ரெட். நேரம் தவறாமல் சாப்பிடுவேன். அதுக்கும் மேல ஸ்மைல் பண்ணிக்கிட்டே இருப்பேன். எந்தப் பிரச்னையையும் என் தலைக்குள்ள ஏத்திக்கவே மாட்டேன்" என்று குயில் குரலில் சொல்லுகிறார் ஸ்ரிதிகா!

## வாவ்... சிஐடி!

புத்தகம் போய் ஐபேட், கிண்டில் வந்துவிட்ட இந்த ஹைடெக் காலத்திலும், துப்பறியும் கதைகளுக்கும், மாயாஜாலக் கதைகளுக்கும் செம கிரேஸ் இருந்துகொண்டுதான் இருக்கிறது. படிப்பது தாண்டி, அதையே சின்னத்திரையில் பார்த்தால் இன்னும் ஜோர்! அந்த வகையில் ஜீ தமிழ் சேனலில் தினந்தோறும் இரவு 11 மணிக்கு ஒளிப்பரப்பாகும் 'சிஐடி' சீரியலுக்குச் சுட்டிகள் முதல் பெரியவர்கள் வரை ரசிகர்



▲ 'சிஐடி' டீம்

பட்டாளம் ஏராளம்!

வித்தியாசமான கொலை, கொள்ளைச் சம்பவங்களைச் சுவாரஸ்யம் சற்றும் குறையாமல் துப்பறியும் சிஐடி டீம்தான் இந்த சீரியலின் அடித்தளம். ஹிந்தியில் இந்த சீரியல் ஆரம்பித்து, இது 19-வது வருடத்தின் தொடக்கம் என்பதுதான் ஸ்பெஷல்!

கடந்த 2013-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 'சிஐடி' தொடர் அதன் ஆயிரமாவது எபிசோடை எட்டியது. ஹிந்தியில் சோனி டி.வி-யில் சனி மற்றும் ஞாயிறன்று மட்டும் ஒளிபரப்பாகும் இத்தொடர், தமிழில் டப் செய்யப்பட்டு ஜீ தமிழ் தொலைக்காட்சியில் திங்கள் முதல் வெள்ளி வரை ஒளிபரப்பாகிறது.

'ஏசிபி' பிரத்யுமன், இன்ஸ்பெக்டர்கள் தயா, அபிஜித் (தமிழில்... பார்த்திபன், தயா, அபிஷேக்) ஆகிய மூவரும் இதில் மெயின் கேரக்டர்கள். இதில் பிரத்யுமன் என்னும் சிவாஜி சத்யம் மற்றும் தயா என்னும் தயானந்த் ஷெட்டி ஆகிய இருவரும் 1998-ம் ஆண்டிலிருந்து இந்த சீரியலில் நடிக்கிறார்கள். அபிஷேக் என்னும் ஆதித்யா ஸ்ரீவத்ஸவா (தமிழில் அஜித் படமான ஆழ்வாரில் காவல்துறை அதிகாரியாக நடித்தவர்) 1999-ம் ஆண்டிலிருந்து இந்த சீரியலில் இருக்கிறார்.

இவர்களோடு, குற்றவியல் ஆய்வாளர் மற்றும் மருத்துவர் சலோங்கி, அவர் உதவியாளர் மருத்துவர் தாரிகா, சப் இன்ஸ்பெக்டர்கள் ஸ்ரேயா, பூர்வி, ஃப்ரெட்ரிக்ஸ், டி.எஸ்.பி சித்ரவ்லி ஆகியோரும் இன்றுவரை மாறாமல் தொடரும் கேரக்டர்கள்!

இந்த சீரியலில் இதுவரை ஃபாரன்சிக் லேப் மருத்துவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் உள்பட 53 பேர் மாறிமாறி நடித்துள்ளனர். குற்றங்களில் மாட்டிக்கொள்ளும் நபர்கள், கொலையாகும் நடிகர்கள், சிஐடி அதிகாரிகளின் உறவினர்கள் என்று கணக்கிட்டால், இரண்டாயிரம் பேரைத் தாண்டும்!

சிறப்புத் தோற்றங்களில் சல்மான் கான், ஷாரூக் கான், வித்யா பாலன், அமீர் கான், சோனாக்ஷி சின்ஹா, பிபாஷா பாசு என்று முக்கால்வாசி பாலிவுட் நடிகர்கள் இதில் ஏதாவது ஓர் எபிசோடில் தலைகாட்டியிருக்கிறார்கள்!

இதுவரை இந்த சீரியலை 21 இயக்குநர்களுக்கும் மேல் இயக்கியுள்ளனர். 100-க்கும் அதிகமான கதாசிரியர்கள் த்ரில் கொஞ்சமும் குறையாமல், ரத்தம் சொட்டச் சொட்ட எபிசோடுகளை எழுதியுள்ளனர். மனதை நடுநடுங்க வைக்கும் இசையுடன் தமிழ் ரசிகர்கள் மனதிலும் சிம்மாசனம் போட்டு அமர்ந்துள்ளது இந்த சீரியல்.

இவ்வளவு பெருமைகளுக்கும் சொந்தமான சீரியலில் நடிக்கும் பிரபலங்களிடம் இதுபற்றிக் கேட்காமல் இருந்தால் எப்படி?

" 'சிஐடி' சீரியல் என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு வாய்ப்பு. எவ்வளவோ





▲ 'சிஐடி' சீரியலில்...

வருடங்களாகக் கலைத்துறையில் இருந்தாலும் கூட, இன்று பலருக்கும் என் நிஜப்பெயரைவிட 'டாக்டர் சலோங்கி' என்கிற பெயர்தான் உடனடியாக நினைவுக்கு வருகிறது. அந்தளவுக்கு இந்த நரேந்திர குப்தாவை, சலோங்கியாக மாற்றிய பெருமை 'சிஐடி' சீரியலையே சேரும். அதற்கும் மேலாக, ரத்த உறவுகள் தாண்டிய ஒரு குடும்பத்தையும், நண்பர்களையும் எனக்கு பெற்றுக் கொடுத்தது 'சிஐடி'!" என்று மகிழ்கிறார் நரேந்திர குப்தா.

டாக்டர் தாரிகாவாக நடிக்கும் ஸ்ரதாவோ, "மாடலிங், சினிமா தாண்டி எனக்கு ஓர் அழுத்தமான அறிமுகத்தை ரசிகர்களிடையே உருவாக்கிக் கொடுத்துள்ளது 'சிஐடி' தொடர். பலபேர் என்னை உண்மையான மருத்துவர் என்றெல்லாம் நினைத்துப் பேசியிருக்கிறார்கள். தொடரில் எனக்கும் அபிஷேக்குக்குமான காதல் நிறைவேற வேண்டும் என்றெல்லாம் ரசிகர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அந்தளவுக்கு லட்சக்கணக்கான மக்கள் மனதில் என்னை சிம்மாசனம் போட்டு அமரச் செய்துவிட்டது இந்த வாய்ப்பு" என்றார்.

'சிஐடி' சீரியலில் நடப்பதுபோலவே பல கட்டத் தேடல்களுக்குப் பிறகு இத்தொடரின் ஹீரோக்களும் நம்மிடம் சிக்கிக்கொண்டனர். சிஐடி இன்ஸ்பெக்டர் அபிஷேக்காகப் பட்டையைக் கிளப்பும் ஆதித்யா ஸ்ரீவத்ஸவா, "நான் நாடக உலகம் மூலமாகத்தான் இந்தத் தொடருக்குள் நுழைந்தேன். தமிழில்கூட ஒரு படத்தில் நடித்திருக்கிறேன். ஹிந்தியிலும் நிறைய படங்களில் நடித்திருக்கிறேன். ஆனாலும், 'சிஐடி' தொடர் கொடுத்த ஒரு கிரேஸ், வேறு எதிலும் இதுவரை கிடைத்ததில்லை. தமிழகத்திலும் இந்த சீரியலுக்கு ரசிகர்கள் இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது" என்கிறார்.

தயாவாக நடிக்கும் தயானந்த் ஷெட்டி, "1998-லிருந்து நான் இந்த சீரியலுக்குள் இருக்கிறேன். விளையாட்டுத் துறையில் இருந்து நடிப்புக்குள் நுழைந்தபோது ஒரு சிறு வருத்தம் இருந்தது... பிடித்த விளையாட்டை விட்டுவிட்டு வருகிறோமே என்று. ஆனால், சிஐடி-யில் நடிக்க ஆரம்பித்ததும், என்னை சிறுகுழந்தைகள்கூட அடையாளம் கண்டுவிடுகிறார்கள். அதனால் அப்படி ஒரு சந்தோஷம் எனக்கு. என்ன... இதுவரை தோராயமாக 1000 கதவை நொறுக்கியிருக்கிறேன் என்பதுதான் கொஞ்சம் ஜெர்க் ஆக வைக்கிறது" என்று சிரிக்கிறார்.

சீரியல் என்பதைத் தாண்டி, அழுகாச்சி காட்சிகள் இல்லாமல், தமிழில் கலக்கும் க்ரைம் கதை மன்னர்களுக்குச் சமமான கதையோட்டத்துடன், சின்னத்திரையில் ஆயிரக்கணக்கான நடிகர்களுக்கும், பின்புல ஊழியர்களுக்கும் ஏதோ ஒரு வகையில் இத்தனை வருடங்களாக வருமானத்துக்கு வழியமைத்துக் கொடுத்துள்ள இந்த சீரியலுக்கு ஒரு ராயல் சல்யூட்!

POND'S

# அப்பழுக்கற்ற சருமம்.
# இனிமேலும் ஒரு கனவல்ல!

நீங்கள் எப்போதுமே தொடர்ந்து உங்கள் சருமப் பராமரிப்பை செய்கிறீர்கள். எனினும், கரும் புள்ளிகள் மீண்டும் மீண்டும் தோன்றுகிறதா? உண்மையை சொல்லப்போனால், கரும் புள்ளிகள் உண்மையிலேயே எரிச்சல் ஏற்படுத்துபவை. ஏனெனில் அவை சருமத்தின் பொலிவை பாதிக்கின்றன. எனவே நமக்கு மிக கவலை ஏற்படுகிறது. கரும்புள்ளிகள் இத்தகைய பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

இதற்கான பதில் நாம் கரும் புள்ளிகள் எவ்வாறு உருவாகின்றன என்பதை புரிந்து கொள்வதில் இருக்கிறது. கரும்புள்ளிகள், நமது வாழ்க்கை முறை, சருமத்தில் வெயில் படுதல், ஆரோக்கியமற்ற உணவு, மன அழுத்தம் மற்றும் தூக்கம் இன்மை போன்ற பலவித காரணங்களால் ஏற்படுகின்றன. இந்த காரணங்களால் சருமத்தின் உள்ளே குவிந்திருக்கும் மெலனின் மையம் மெலனின் உற்பத்தியை விரைவுபடுத்தி அதை சருமத்தின் ஆழமான பகுதியிலிருந்து சருமத்தின் மேற்பகுதிக்கு கொண்டு வந்துவிடுகிறது. இதனால் சருமம் கருத்து விடுவதோடு நாளடைவில் கரும்புள்ளிகள் தோன்றவும் காரணமாகி விடுகிறது!

சரி அவ்வாறெனில், நீங்கள் எவ்வாறு கரும் புள்ளிகளை போக்க முடியும்? இந்த பிரச்சினையை அடிப்படையிலேயே சமாளிக்க என்ன வழி? இதற்கான ஒரே தீர்வு பாண்ட்ஸ் இன்ஸ்டிடியூட் வழங்கும் பாண்ட்ஸ் ஒயிட் பியூட்டி க்ரீம். ப்ரோ வைட்டமின் பி3 நிறைந்த இது, சருமத்தின் மேல் அடுக்கினுள் ஆழமாக ஊடுருவி சருமத்தின் மேல் பகுதிக்கு மெலனின் வராமல் தடுத்து, கரும் புள்ளிகளை ஆற்றலுடன் குறைக்கிறது. அதுமட்டுமல்ல இதன் SPF 15 PA ++ வெயிலின் தீங்கான க்ஙஅ மற்றும் UVB கதிர்கள் தாக்காமல் சருமத்தை பாதுகாத்து, மேலும் கரும்புள்ளிகள் தொடர்ந்து தோன்றாமல் கட்டுப்படுத்துகிறது.

இப்போது இரகசியம் வெளியாகி விட்டதல்லவா? எனவே நீங்கள் ஒவ்வொரு முறை வெளியில் செல்லும்போதும் பொலிவாகத் தோன்றுவீர்கள் என்பது நிச்சயம்.

## தெளிவான அழகு பெறும் செயல் முறை

**செயல் 1** உங்கள் முகத்தை சுத்தம் செய்ய பாண்ட்ஸ் ஒயிட் பியூட்டி ஃபேஷியல் ஃபோம் மூலம் தினசரி உங்களை அழகாக்கும் செயல் முறையை துவங்குங்கள்.

**செயல் 2** பாண்ட்ஸ் ஒயிட் பியூட்டி டே கிரீமில் ஒரு துளியை பிதுக்கி உங்கள் சருமத்தை மாய்சரைஸ் செய்து கொண்டு அதன்பின் உங்கள் நெற்றி, கன்னங்கள், கழுத்து போன்ற பகுதிகளில் தாராளமாக தடவிக் கொள்ளுங்கள்.



**ராஷ்மி ஷெட்டி**
Celebrity skin expert & aesthetic physician

கரும்புள்ளிகள் மங்கிடவும், உங்கள் மாசு மருவற்ற அழகை மீண்டும் பெறவும் ப்ரோ வைட்டமின் பி3 மிக்க தயாரிப்புக்களை ஸ்டாக் செய்யுங்கள். இது வைட்டமின் ஈ மற்றும் சி போன்ற இதர முக்கிய பகுதிப்பொருட்களோடு செயல்பட்டு, சருமத்தின் களையிழந்த தன்மையை குறைப்பதோடு கரும் புள்ளிகளையும் விரட்டி விடும்.



**இலியானா டி குரூஸ்**
Bollywood Actress

ஒரு நடிகையாக படப்பிடிப்பில் கடினமான சூழல்கள் மற்றும் பலமணி நேர தொடர்ச்சியான வேலை. உண்மையிலேயே என் சருமத்தை மிகவும் பாதிக்கிறது. எனது கரும்புள்ளிகள் மற்றும் கரு வளயங்கள் என் சருமத்தை டல்லாக்கி விடுகின்றன. எனவே நான் பாண்ட்ஸ் ஒயிட் பியூட்டி பயன்படுத்த ஆரம்பித்தேன். பின்பு நான் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டேன்! எனது கரும்புள்ளிகள் குறைந்து போவதையும் கண்ணுக்கு கீழ் உள்ள பகுதி பளிச்சென்று தோன்றுவதையும் நான் நன்கு கண்டறிந்தேன்.

Edelman/OPC0027

**தி பாண்ட்ஸ் இன்ஸ்டிடியூட்**

தற்போதைய நவீனகால சரும பிரச்சினைகளுக்கு உதவிட மிகச் சிறந்த விஞ்ஞானப்பூர்வ தகவலறிவை தி பாண்ட்ஸ் இன்ஸ்டிடியூட் வழங்குகிறது. இது பல ஆண்டுகளின் சரும பராமரிப்பு விஞ்ஞானத்தை ஒருங்கிணைக்கவும் மற்றும் முதன் முதலில் புதுமையான தயாரிப்பு ஃபார்முலாக்களை வழங்கிடவும் உருவாக்கப்பட்டது. 700க்கும் அதிகமான விஞ்ஞானிகள் கொண்ட உலகளாவிய நெட்வொர்க் மூலம், தி பாண்ட்ஸ் இன்ஸ்டிடியூட், வேறு எவரையும்விட சிறப்பாக, வருங்கால சருமப் பிரச்சினைகளை சீர் செய்ய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சாதனைகளை உருவாக்கிட ஒவ்வொரு நாளும் தொடர்ந்து செயல்படுகிறது. தி பாண்ட்ஸ் இன்ஸ்டிடியூட்; உங்கள் சருமத்தின் வருங்கால சிறப்புக்கு ஆதாரம்.


POND'S
டார்க் ஸ்பாட்ஸை லேசாக்கும்.
புதிய^ ஒயிட் பியூட்டி™
ஃபேர்னஸ் க்ரீம்.
POND'S
WHITE BEAUTY
AN ANTI-SPOT SOLUTION BY THE POND'S INSTITUTE | PONDS.IN
O&M 5761 TAM

• முதல் படம்  எஸ்.கிருபாகரன்

## ஜெ.ஜெயலலிதா என்னும் நான்...

# அம்மாவின் கதை



குழந்தை நட்சத்திரமாக முதன்முறையாக ஜெயலலிதா கேமரா முன் நின்ற அந்தப் படத்தின் பெயர் 'ஸ்ரீசைல மகாத்மியம்'. கன்னடப் படம்.

தாயார் பிரபல நடிகைதான். எனினும் ஜெயலலிதாவுக்கு சினிமா பற்றிய பெரிய ஈர்ப்பு அந்த வயதில் இருந்ததில்லை. நடிகர் நடிகைகளைப் பார்ப்பதிலோ, படப்பிடிப்புக்குச் செல்வதிலோ ஆர்வம் காட்டியதில்லை.

ஒருமுறை பெங்களூரில் இருந்து பிள்ளைகள் சென்னை வந்தபோது, சந்தியா விடியவிடிய படப்பிடிப்பில் கலந்துகொள்ளவேண்டிய சூழல். அதேநேரம், அரிதான இந்தச் சந்தர்ப்பத்தில் குழந்தைகளைப் பிரிந்திருக்கவும் விருப்பமில்லை சந்தியாவுக்கு. "தனியாக இருக்க வேண்டாம். என்னுடன் ஸ்டூடியோவுக்கு வாங்க" என்று அன்றைய தினம் படப்பிடிப்புக்கு அழைத்துச்சென்றார் அம்முவையும் ஜெயக்குமாரையும்.

அன்றைய படப்பிடிப்பில் சந்தியாவுடன் சிறுவயது பார்வதியாக ஒரு குழந்தை நடிக்க வேண்டியிருந்தது. படப்பிடிப்பு தொடங்கிய சில நிமிடங்களில், 'அந்தச் சிறுமிக்குக் கடும் காய்ச்சல், இன்று அவள் படப்பிடிப்புக்கு வரமாட்டாள்' என்று தகவல் வந்து சேர்ந்தது. தயாரிப்பாளர்களுக்கு அதிர்ச்சி. முக்கியமான பாத்திரம் அது. அவள் இல்லையென்றால் அன்று படப்பிடிப்புக்கான ஏற்பாடுகள் அத்தனையும் வீண். அதன்பிறகு என்ன நடந்தது? ஜெயலலிதாவே விவரிக்கிறார்...

"விடுமுறைக்காக ஒருமுறை சென்னை வந்திருந்தபோது, நான் என் தாயாருடன் இரவு படப்பிடிப்புக்குப் போயிருந்தேன். அன்று அவருடன் நடிக்கவேண்டிய சிறுமி எதிர்பாராதவிதமாக வரவில்லை. இரவு நேரம்... மறுநாள் செட்டைப் பிரிக்க வேண்டும். தயாரிப்பாளர்களுக்கும்,


7

## கலைக் குடும்பம்!

பொதுவாக சினிமாத் துறையில் ஒரே குடும்பத்தில் பலரும் திரைக்கலைஞர்களாக இருந்தால், அவர்களை 'கலைக்குடும்பம்' என்பார்கள். விஜயகுமார், டி.ராஜேந்தர், ராதாரவி போன்றோரை இப்படிக் குறிப்பிடுவதுண்டு. உண்மையில் திரையுலகில் முதல் கலைக்குடும்பம் சந்தியாவினுடையதுதான்.

ஜெயலலிதா, சந்தியா, சித்தி வித்யாவதி - இவர்கள்தாம் இதுவரை சினிமாவில் நடித்திருப்பவர்கள் என கருதிக்கொண்டிருக்கிறோம். ஆனால், ஜெயலலிதாவின் சகோதரர் ஜெயக்குமாரும் இரண்டு படங்களில் நடித்திருக்கிறார் என்பது பலரும் அறியாத தகவல்!

ஆம்... சந்தியா முதன்முதலாக நடித்த 'கற்கோட்டை' தான் அவரது முதற்படம். பின்னாளில் சந்தியா பிரபல நடிகையான பிறகே இப்படம் வெளியானது. தனது ஆறு வயதில் ஜெயக்குமார் அப்படத்தில் நடித்திருக்கிறார். சந்தியாவுடன் இந்தப் படத்தின் படப்பிடிப்புக்கு சென்றிருந்தபோதுதான், படத்தில் மாஜிஸ்திரேட் சேகரின் மகனாக வரும் சுட்டிப்பையன் கண்ணன் கதாபாத்திரத்துக்கு இயக்குநர், ஜெயக்குமாரை தேர்வு செய்தார்.

கண்ணனின் தாய் மங்களம், கணவனின் முதல்தாரத்துப் பிள்ளைக்கு சூழ்ச்சி செய்து விஷம் கொடுக்க முயற்சிக்கிறாள். இதை அறிந்த கணவன் அங்கு வர, தான் அகப்பட்டுக்கொண்டதை அறிந்து அதிர்ச்சியான மங்களம், தானே அந்த விஷத்தைக் குடிப்பதோடு, மகன் கண்ணனுக்கும் கொடுத்துவிடுகிறாள். தாயின் சதித்திட்டத்துக்குத் தானே பலியாகிறான் கண்ணன்.

படம் முழுக்க சுட்டிப்பையனாக நடித்து ஜமாய்த் திருக்கும் ஜெயக்குமார் இறுதியில் பரிதாபமாகப் பலியாகும் காட்சி ரசிகர்களை நெகிழவைத்துவிடும். செண்டிமெண்ட் விரவிக்கிடக்கும் சினிமாத் துறையில், முதல் படத்திலேயே இறந்துவிடும் காட்சியில் தன் ஆசை மகனை நடிக்கவைத்த சந்தியாவின் முயற்சியைப் பாராட்டத்தான் வேண்டும்.

ஜெயக்குமார் நடித்த மற்றொரு படம் பற்றிய தகவல் கிடைக்கவில்லை.



▲ ஜெயக்குமார்

டைரக்டருக்கும் ஒன்றும் புரியவில்லை. கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. அப்போது அவர்கள் கண்களுக்கு அம்மாவின் அருகில் அமர்ந்திருந்த நான் தென்பட்டேன். உடனே அவர்கள் அம்மாவிடம் வந்து, 'உங்கள் மகள் அழகாக இருக்கிறாள். அவள் வேண்டுமானால் இந்த வேடத்தில் நடிக்கட்டுமே!' என்றார்கள்.

இதற்குமுன் என் அம்மாவைப் பார்க்க வீட்டுக்கு வரும் தயாரிப்பாளர்கள், என்னைப் பார்த்துவிட்டு, 'உங்கள் குழந்தைகூட சினிமாவில் நடிக்கலாமே!' என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் குறிப்பிடத்தக்கவர் காலஞ்சென்ற சாணக்யா. என் தாயார் அப்போதெல்லாம், 'நான் படும்பாடு போதும்... என் மகளுக்கு அந்தக் கஷ்டங்கள் வேண்டாம்' என்று மறுத்துவிடுவார். ஓரிரு முறை அவர் என்னிடம் இதுபற்றிக் கேட்டபோது, நானும், 'எனக்கு சினிமாவே வேண்டாம்!' என்று சொல்லியிருக்கிறேன்.

அதனால், செட்டில் என் அம்மாவிடம் அந்தக் கன்னடப் படத்தின் தயாரிப்பாளர்கள் இதுபற்றி கேட்ட போதும், 'அதற்கெல்லாம் அவள் ஒப்புக்கொள்ள மாட்டாள்!' என்றேசொல்லிவிட்டார். அவர்களோ விடுவதாக இல்லை!

'எதற்கும் ஒருமுறை கேட்டுப் பாருங்களேன்' என்று அவர்கள் மீண்டும் வலியுறுத்தவே, அம்மாவும் என்னிடம், 'என்ன நடிக்கிறியா?' என்று கேட்டார். அன்று எனக்கு ஏதோ நல்ல 'மூட்' போலிருக்கிறது. 'சரி' என்று சொல்லிவிட்டேன். அம்மாவுக்கு, நான் இப்படிச் சொன்னது வியப்பாக இருந்தது. மறுநிமிஷமே அந்த வேஷத்துக்கு நான் தயார் செய்யப்பட்டு, கேமரா முன் நிறுத்தப்பட்டேன்.

## 'ஜெய' குடும்பம்!

ஜெயலலிதாவின் குடும்பத்தினருக்குப் பெரும்பாலும் 'ஜெய' என்ற வார்த்தைகளிலேயே பெயர்கள் தொடங்கும். ஜெயராம், ஜெயக்குமார், ஜெயலலிதா... இப்படி! இவை தற்செயலாக வைக்கப்பட்ட பெயர்கள் அல்ல. இதற்குப் பின்னணிக் காரணமும் உண்டு.

ஜெயலலிதாவின் தந்தைவழிப் பாட்டனார் டாக்டர் ரங்காச்சாரி அன்றைய மைசூர் மகாராஜா கிருஷ்ண ராஜேந்திர உடையாரின் அரண்மனையில் மூத்த மருத்துவராகப் பணியாற்றியவர். தனியே ஒரு மருத்துவமனையும் நடத்தியவர். மைசூரில் டாக்டர் ரங்காச்சாரி குடும்பம் மிகப் பிரபலமானது. அந்தக் காலத்திலேயே ஆபரேஷனுக்கு 100 ரூபாய் கட்டணம் வாங்கியவர் என்றால், இவரது திறமை விளங்கும். தன் மருத்துவச் சாதனைகளுக்காக ஆங்கிலேயரிடம் 'சிப்பர் ஃபீல்ட்' விருது பெற்றவரும்கூட!

அன்றைய காலத்தில் மைசூர் மகாராஜா குடும்ப உறுப்பினர்களின் பெயர் 'ஜெய' என்றே தொடங்கும். மரியாதை காரணமாக மகாராஜா வழிவந்தவர்கள் தவிர, பிறர் அந்தப் பெயரை சூட்டிக்கொள்ள மாட்டார்கள். ஜெயலலிதாவின் தாத்தா ரங்காச்சாரி, மகாராஜா குடும்பத்தினருக்கு செய்த சேவையின் காரணமாக பெயரில் 'ஜெய' சேர்த்துக்கொள்ளும் சிறப்பு அனுமதியை வழங்கியிருந்தார் மன்னர். இப்படிதான் 'ஜெய'லலிதா பிறந்தார்.

என்ன காரணத்தாலோ, ஜெயலலிதாவின் அண்ணன் குடும்பத்தினர் இந்த வழக்கத்தைப் பின்பற்றவில்லை.

ஜெயலலிதா எனப் பெயர் சூட்டப்பட்டாலும், அவரை வீட்டில் 'அம்மு' என்றே அழைத்தனர். பள்ளியில் படித்த காலத்தில் தோழிகள் அவரை 'ஜெயா' என்றும் 'லலிதா' என்றும் இருவிதங்களில் அழைத்தனர்.

ஜெயலலிதாவின் இறுதிக்காலம் வரை, சோ போன்ற அந்நாளைய குடும்ப நண்பர்கள் சிலர் மட்டுமே 'அம்மு' என்று அழைத்தனர்.

எம்.ஜி.ஆரும் 'அம்மு' என்றே அழைப்பார். தனது நெருங்கிய வட்டம் அல்லாத நபர்கள் தன்னை இப்படி அழைப்பதை ஒருபோதும் விரும்ப மாட்டார் ஜெயலலிதா!

எந்தவிதக் கூச்சமோ, பயமோ இல்லாமல், ஒரே தடவையிலேயே திருப்தி கரமாக எடுத்து முடிக்கும்படியாக நான் நடித்தேன். என் திறமையைக் கண்டு, படத்தில் என் வேஷத்தை இன்னும் கொஞ்சம் வளர்த்து, ஒரு தனிப் பாடலிலும் நடிக்க வைத்தார்கள்.



என் சினிமா உலகப் பிரவேசம், நட்ட நடு நிசியில், யாரும் எதிர்பாராத வகையில் நடந்து விட்டது!"

- தன் முதல்பட வாய்ப்பு குறித்த நினைவுகளை இப்படி சொல்லி முடித்திருந்தார் ஜெயலலிதா.

பெங்களூரு திரும்பிவந்தபோது ஜெயலலிதாவை கொண்டாடினர் சக தோழிகள் - "ஏய்... நம்ம ஜெயா சினிமாவில் நடிச்சுட்டாடீ... படம் வந்தா அவ செலவில் நம்மையும் அழைச்சிட்டுப்போவா..."

வீட்டிலோ நேர் எதிரான நிலை. "இதுங்கதான் சினிமா பித்து பிடிச்சு அலையுதுன்னா, இப்போ அம்முவையும் அப்படி ஆக்கப் பார்க்கிறாளே வேதா... இனி சென்னைக்கு அழைச்சிட்டுப்போக விடக்கூடாது..."

- கறார் உத்தரவு பிறந்தது அம்முவின் தாத்தா பாட்டியிடமிருந்து!

(அம்மு கதை அறிவோம்!)

www.vikatan.com

● 'ஜோதிட ரத்னா' **கே.பி.வித்யாதரன்**

மார்ச் 8-ம் தேதி முதல் மார்ச் 21-ம் தேதி வரை

## நினைத்தது நிறைவேறும்!



**மேஷம்:** எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றிகொள்ளும் உங்களுக்கு, செவ்வாய் வலுவாக ராசியிலேயே அமர்ந்திருப்பதால், நினைத்தது நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்பட்டாலும் சக ஊழியர்களால் மதிக்கப்படுவீர்கள்.

## ஆடை, ஆபரணம் சேரும்!



**ரிஷபம்:** தவறுகளைத் திருத்திக்கொள்ளும் உங்களுக்கு, 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி 5-ல் அமர்வதால், புதிய திட்டங்கள் நிறைவேறும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வருமானத்தை அதிகப்படுத்தக் கூடுதலாக உழைப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். ஆடை, ஆபரணம் சேரும். அரசாங்க விஷயம் சாதகமாக முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களுக்கு எதிராகச் செயல்பட்ட அதிகாரி வேறு இடத்துக்கு மாற்றப்படுவார்.

## தடைப்பட்ட காரியங்கள் முடிவடையும்!



**மிதுனம்:** மற்றவர்களைக் காயப்படுத்தாத உங்களுக்கு, ராகுவும் சனியும் வலுவாக இருப்பதால், தடைப்பட்ட காரியங்கள் முடிவடையும். பெரிய பதவிகள் தேடி வரும். மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்துவீர்கள். வீடு கட்டும் பணியை மறுபடியும் தொடங்க, பணம் கிடைக்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

## எதிர்பார்த்த பணம் கிடைக்கும்!



**கடகம்:** கலாசாரத்தை விட்டுக்கொடுக்காத உங்களுக்கு, யோகாதிபதியான செவ்வாய் சொந்த வீட்டிலேயே வலிமையாக அமர்ந்திருப்பதால், வீடு, மனை வாங்குவது விற்பது லாபகரமாக முடியும். எதிர்பார்த்த பணம் வரும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். அரசு காரியங்கள் தாமதமாகி முடியும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும்.

## வழக்கில் தீர்ப்பு சாதகமாகும்!



**சிம்மம்:** பிறர் சொத்துக்கு ஆசைப்படாத உங்களுக்கு, 10-ம் தேதி முதல் குரு வக்கிரமாகி 2-ல் அமர்வதால், வராது என்று நினைத்த பணம் கைக்கு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். தள்ளிப்போன வழக்கில் தீர்ப்பு சாதகமாகும். புதிதாக சொத்து வாங்கும் யோகம் உண்டாகும். வியாபாரத்தில் விளம்பர யுக்திகளைக் கையாண்டு லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரியின் ஆதரவால் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

## பணவரவு அதிகரிக்கும்!



**கன்னி:** ரசனையான உள்ளம்கொண்ட உங்களுக்கு, ராசிநாதன் புதன் சாதகமாக இருப்பதால், பணவரவு அதிகரிக்கும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். பழைய இடத்தை விற்று புது வீடு வாங்குவீர்கள். செவ்வாய் 8-ல் நிற்பதால், முன்கோபத்தை தவிர்க்கவும். சகோதரர்களால் சங்கடம் உண்டாகும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபம் குறையாது. உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் நம்பிக்கையைப் பெற போராட வேண்டி வரும்.

# ராசி பலன்கள்

## வங்கிக் கடன் கிடைக்கும்!



**துலாம்:** மற்றவர்களை உற்சாகத்துடன் வைத்திருக்கும் உங்களுக்கு, ராகு வலுவாக நிற்பதால், எதிர்த்தவர்களும் நண்பர்களாவார்கள். வீடு கட்ட எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்கும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் குறையும். வெளிநாட்டில் இருப்பவர்களின் நட்பு கிட்டும். 14-ம் தேதி முதல் சூரியன் 6-ல் அமர்வதால், அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உதவிகள் கிடைக்கும்.

## புது வீடு கட்டுவீர்கள்!



**விருச்சிகம்:** பொதுநலனைப் பற்றி சிந்திக்கும் உங்களுக்கு, 10-ம் தேதி முதல் குரு லாப வீட்டில் வலுவாக அமர்வதால், உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். புது வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்வீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு வரும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். நிலம், வீடு வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் தலைமையுடனான மோதல்கள் விலகும்.

## வாகன வசதி பெருகும்!



**தனுசு:** ஏழை எளியவர்களுக்காகப் போராடும் உங்களுக்கு, சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால், எதிர்பார்ப்புகள் தடையின்றி நிறைவேறும். வாகன வசதி பெருகும். சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். வருமானம் உயரும். பிள்ளைகளால் புகழ், கௌரவம் கூடும். தந்தைவழி சொத்து கைக்கு வரும். அரசால் ஆதாயம் உண்டு. ஷேர் மூலம் பணம் வரும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

## கடன் பிரச்னை நீங்கும்!



**மகரம்:** எப்போதும் ஆடம்பரத்தை விரும்பாத உங்களுக்கு, செவ்வாய் வலுவாக அமர்ந்திருப்பதால், கடன் பிரச்னை நீங்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்திகள் வரும். தாய்வழி உறவினர்கள் உதவியாக இருப்பார்கள். ராசிநாதன் சனி வலுவாக இருப்பதால், வேற்று இனத்தினரால் ஆதாயம் உண்டு. விசேஷங்களால் வீடு களைகட்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும்.

## தைரியம் கூடும்!



**கும்பம்:** எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் உங்களுக்கு, செவ்வாய் வலுவாக இருப்பதால், தைரியம் கூடும். அரசாங்கத்தாலும், அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் உதவிகள் உண்டு. யோகாதிபதி சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பணம் வரும். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். புது நகை வாங்குவீர்கள். வியாபாரத்தில் சந்தை நிலவரம் அறிந்து புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

## திறமைகள் வெளிப்படும்!



**மீனம்:** துன்பப்பட்டு வருபவர்களுக்கு உதவி செய்யும் உங்களுக்கு, குரு 10-ம் தேதி முதல் வக்கிரமாகி 7-ல் அமர்வதால், உங்களுடைய திறமைகள் வெளிப்படும். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். புதனும், சுக்கிரனும் சாதகமாக இருப்பதால், கடனாகக் கொடுத்த பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் அதிரடி முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களை மதிப்பார்கள்.

# ‘சபாஷ்’ போடவைக்கும் சர்க்கரைவள்ளி சேவ்!


## சர்க்கரை வள்ளி சேவ்

**தேவையானவை:** சர்க்கரை வள்ளிக் கிழங்கு கூழ் - ஒரு கப் (கிழங்கை வேகவைத்து தோல் நீக்கி மிக்ஸியில் ஒரு சுற்று சுற்றவும்), பொட்டுக்கடலை மாவு - ஒரு கப், அரிசி மாவு - கால் கப், கரம் மசாலாத்தூள் - 2 டீஸ்பூன், மிளகாய்த்தூள் - ஒரு டீஸ்பூன், எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:** பொட்டுக்கடலை மாவு, மிளகாய்த்தூள், அரிசி மாவு, கரம் மசாலாத்தூள், உப்பு ஆகியவற்றை நன்கு கலந்து சர்க்கரைவள்ளிக் கிழங்கு கூழ் சேர்த்துப் பிசையவும் (தேவைப்பட்டால் தண்ணீர் சேர்த்துப் பிசையவும்). வாணலியில் எண்ணெயைக் காயவைத்து, தேங்குழல் பிடியில் ஓமப்பொடி அச்சு போட்டு, மாவை உருட்டி அதில் போட்டு ஓமப்பொடியாக எண்ணெயில் பிழிந்து பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.

சிறிது இனிப்பும், காரமும், கரம் மசாலாவின் வித்தியாசமான சுவையும் சேர்ந்து இந்த சேவ் ருசியில் அசத்தும்.

- என்.உஷா,
சென்னை - 4



வாசகிகளின் குறிப்புகளைத் தேர்ந்தெடுத்து, சமைத்து வழங்கியிருப்பவர் 'சுவையரசி' **சாந்தி விஜயகிருஷ்ணன்**



## வெந்தயக்கீரை உசிலி

**தேவையானவை:** வெந்தயக்கீரை (சிறிய கட்டு) - 12, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு - தலா ஒரு கப், காய்ந்த மிளகாய் - 5, பெருங்காயத்தூள், கடுகு, உளுத்தம்பருப்பு - சிறிதளவு, எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:** வெந்தயக்கீரையை சுத்தம் செய்து, பொடியாக நறுக்கிக்கொள்ளவும். துவரம்பருப்பு, கடலைப்பருப்பை ஊறவைக்கவும். ஊறியதும் காய்ந்த மிளகாய், உப்பு சேர்த்து கொரகொரப்பாக அரைத்துக்கொள்ளவும். வாணலியில் எண்ணெய்விட்டு, காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு, பெருங்காயத்தூள் தாளித்து, நறுக்கிய கீரை சேர்த்து வதக்கி, அரைத்த பருப்பு விழுதைப் போட்டு நன்றாகக் கிளறவும். நன்றாக வெந்து உதிரி உதிரியானவுடன் இறக்கவும்.

ருசியான இந்த உசிலி, நீரிழிவு உள்ளவர்களுக்கு மிகவும் உகந்தது.

*- சியாமளா ராஜகோபால், சிட்லபாக்கம்*



## பனீர் வெஜ் ஆம்லெட்

**தேவையானவை:** பாசிப்பருப்பு - ஒரு கப், பனீர் - 100 கிராம், பச்சை மிளகாய் - 2, கடலை மாவு - அரை கப், இஞ்சித் துருவல் - ஒரு டீஸ்பூன், எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:** பாசிப்பருப்பை வேகவைக்கவும். பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கவும். பனீரைத் துருவவும். வேகவைத்த பாசிப்பருப்புடன், நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சித் துருவல், கடலை மாவு, உப்பு கொஞ்சம் நீர் விட்டு கலந்து பனீர் துருவலை சேர்த்துக் கலக்கவும். தோசைக்கல்லைச் சூடாக்கி, மாவை சிறு தோசைகளாக வார்த்து, சுற்றிலும் எண்ணெய்விட்டு, இருபுறமும் வேகவிட்டு எடுக்கவும். சுவையான பனீர் வெஜ் ஆம்லெட் தயார்.

*- செ.கலைவாணி, மேட்டூர்*

### எக்ஸ்பெர்ட் கமெண்ட்ஸ்

**சர்க்கரைவள்ளி சேவ்:** பொட்டுக்கடலை மாவுக்குப் பதில் கடலைமாவு சேர்த்து செய்தால், கூடுதல் ருசியாக இருக்கும்.

**வெந்தயக்கீரை உசிலி:** முருங்கைக்கீரையிலும் செய்யலாம். அதில் இரும்புச்சத்து அதிகம் உள்ளது.

**பனீர் வெஜ் ஆம்லெட்:** பாசிப்பருப்புக்குப் பதில் முழு பச்சைப் பயறை ஊறவைத்து அரைத்து செய்யலாம்.

● ஆச்சர்யம் பாலு சத்யா படங்கள்: பா.காளிமுத்து

# கல்விச் சேவையில் காவல் துறை!



ட்யூஷன்... பள்ளிச் சேர்க்கைக்கு அடுத்தபடியாக, பிள்ளைகளுக்காகப் பெற்றோரைப் பெரிதும் கவலைப்படுத்துகிற உளவியல் பிரச்னை இதுதான். 'சயின்ஸுக்கு எங்கே சேர்க்கலாம்?', 'யார் நல்லா மேத்ஸ் சொல்லிக் கொடுக்குறாங்க?' என அலைகிறவர்களை மிரளச்செய்வது, அதற்கான கட்டணம்தான். 'டென்த்துக்குத்தான் எடுப்போம். அதுலயும் மேத்ஸ் சப்ஜெக்ட் மட்டும்தான். டென் தௌசண்ட் பெர் இயர்...' எனப் பேரம் பேசுபவர்களும் இருக்கிறார்கள். மாதம் ஒரு சப்ஜெக்ட்டுக்கு ஐந்நூறு தொடங்கி, ஆயிரம் ரூபாய் வரை வகுப்புக்கேற்ப வசூலிக்கிறவர்களும் உண்டு. இவர்களுக்கு மத்தியில், வித்தியாசமான ட்யூஷன் சென்டர்களும் இருக்கத்தான் செய்கின்றன. அப்படித்தான், சென்னையின் ஓர் இடத்தில் 6-ம் வகுப்பு தொடங்கி, ப்ளஸ் டூ வரை படிக்கும் மாணவர்களுக்கு ட்யூஷன் எடுக்கிறார்கள்... அதுவும் இலவசமாக! முக்கியமான ஒரு தகவல்... இதை நடத்துவது காவல் துறை!


சென்னை அரும்பாக்கம் K-8 காவல் நிலையத்துக்கு எதிரிலேயே இருக்கிறது 'காவல் சிறார் மற்றும் மகளிர் மன்றம்'. மாலை 6 மணிக்கு உள்ளே நுழைகிறார்கள் மாணவர்கள். 9, 10, 11, மற்றும் ப்ளஸ் டூ படிக்கும் மாணவர்களுக்குத் தனித்தனி அறைகள். சுத்தமான மார்பிள் தரை, அமைதியான சூழல், கண்காணிக்கவும் கற்றுத்தரவும் ஆசிரியர்கள்... அத்தனை மாணவர்களும் கண்காணிப்பு வளையத்துக்குள் இருக்கிறார்கள் என்பதால் பாதுகாப்புக்கு உத்தரவாதம்.

"உமா, அங்கே என்ன பேச்சு...


பாடத்தைப் படிக்காம?" - ஒரு தனி அறையில் மானிட்டரில் மாணவர்களைக் கண் காணித்துக்கொண்டிருக்கும் கிருஷ்ணமூர்த்தி குரல் கொடுக்கிறார். அடுத்த நிமிடம் 'கப்சிப்'.

"குற்றப்பின்னணி உள்ள பெற்றோரின் குழந்தைகளின் படிப்பு கெட்டுப் போயிடக் கூடாதுங்கற நல்ல நோக்கத்துல 15 வருஷத்துக்கு முன்னாடி ஆரம்பிக்கப்பட்டது காவல் சிறார் மற்றும் மகளிர் மன்றம். ஆனா, அந்த மாதிரி இருக்குற மாணவர்கள் இங்கே 10 சதவிகிதம் தான் இருப்பாங்க. மத்தபடி 90 சதவிகிதம் பேர் அரசுப் பள்ளி மாணவர்கள், ஏழை மாணவர்கள்தான். தனியார் பள்ளியில் படிக்கிற மாணவர்களும் உள்ளனர். சென்னையில் மொத்தம் 67 போலீஸ் ஸ்டேஷன்களில் இந்த மன்றம். ஆரம்பிக்கப்பட்டது. இப்போ சென்னையில் 115 இடங்கள்ல ட்யூஷன் நடக்குது...'' - இப்படி கிருஷ்ணமூர்த்தி கூறினாலும், 'சென்னையிலேயே மிகவும்

▼ தீபா



**"இங்கே படிச்சுட்டுப் போய் சாஃப்ட்வேர் நிறுவனங்கள்ல, அரசு நிறுவனங்கள்ல வேலை பார்க்கிறவங்க இருக்காங்க. அவங்க எல்லாம் விருப்பப்பட்டு வந்து பாடம் எடுக்கறாங்க."**



ஒழுங்கோடும் கட்டுப்பாட்டோடும் தொடர்ந்து செயல்படுவது அரும்பாக்கத்தில் உள்ள காவல் சிறார் மற்றும் மகளிர் மன்றம்தான்' என்று இப்பகுதி மக்கள் பாராட்டுகிறார்கள்!


6, 7, 8 மற்றும் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு மாலையில் மட்டும்தான் ட்யூஷன். 10, ப்ளஸ் டூ என அரசு பொதுத் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு வார நாள்களில் காலை 6 முதல் 7 மணி வரை, மாலையில் 6 மணி முதல் 8.30 மணி வரை வகுப்புகள். ஞாயிற்றுக்கிழமைகளில் காலையில் 6 மணி முதல் 7.30 மணி வரை; பிறகு 10 மணி முதல் ஒரு மணி வரை; மதியம் 3 மணி முதல் 5 மணி வரை.

''ஆரம்பத்துல காலையில 7 மணிக்கு ஆரம்பிச்சு 7.30 வரை ட்யூஷன் நடந்துகிட்டு இருந்துச்சு. சிலருக்கு அதுக்கப்புறம் வீட்டுக்குப் போய், சரியான நேரத்துக்கு ஸ்கூலுக்குப் போக முடியலை. அதனாலதான் வார நாள்கள்ல 7 மணிக்குள்ள ட்யூஷனை முடிச்சுடுறோம். சில குழந்தைகளுக்கு வீட்ல படிக்கிற சூழ்நிலை இருக்காது. அப்படியே இருந்தாலும், படிக்க முடியாம கவனம் சிதறும். சொல்லிக் கொடுக்க ஆட்கள் இருக்க மாட்டாங்க. இது எல்லாத்துக்கும் மாற்றாக இந்த ட்யூஷன் இருக்கு'' என்கிறார் அரும்பாக்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் தீபா.

காவல் துறையின் சார்பாகவே இந்த மன்றம் நடத்தப்பட்டாலும், காவல் துறையின் நேரடி கண்காணிப்பில் இருந்தாலும், இதற்குப் பொறுப்பாளராக இருப்பவர் காவல் துறையைச் சேர்ந்தவர் அல்ல. இந்த மன்றத்தின் பொறுப்பாளர், 'சாரண ஆசிரியர்' என அழைக்கப்படும் கிருஷ்ணமூர்த்தி... இவர் அச்சகம் நடத்திவருகிறார். இவருக்கு அடுத்து ஓர் உதவி சாரண ஆசிரியர் இருக்கிறார். பிறகு, ஆசிரியர்கள்... இவர்கள் அனைவருமே தன்னார்வலர்கள். மாணவர்களுக்கு ட்யூஷன் எடுப்பவர்களில் இங்கிருந்து படித்துச் சென்ற மாணவர்களும் உண்டு. அறிவியல், கணக்குப் பாடங்களுக்கு சிறப்பு கவனம் தேவைப்படும்போது, பள்ளிகளில் இருந்து ஆசிரியர்களை அழைத்து வந்தும் பாடம் எடுக்கிறார்கள்.

"இங்கே படிச்சுட்டுப் போய் சாஃப்ட்வேர் நிறுவனங்கள்ல, அரசு நிறுவனங்கள்ல வேலை பார்க்கிறவங்க இருக்காங்க. அந்தப் பிள்ளைகள் எல்லாம் விருப்பப்பட்டு வந்து பாடம் எடுக்கறாங்க. எம்.பி.பி.எஸ் படிக்கிற பொண்ணு ஒருத்தங்க, தினம் இந்தப் பக்கம்

நடந்து போவாங்க. எங்க ளோட ட்யூஷனைப் பார்த்துட்டு ஒருநாள் வந்தாங்க. 'சார்... ரொம்ப நல்ல காரியம் பண்றீங்க. நான் வேணா, சொல்லித் தரவா'ன்னு கேட்டாங்க. இப்போ 10-வது, ப்ளஸ் டூ பிள்ளைங்களுக்கு சயின்ஸ் சொல்லித் தர்றாங்க. பாடம் மட்டும் இல்லை... இங்கே படிக்கிற மாணவர்களுக்கு விளையாட்டு, கலைன்னு எதுல ஆர்வம் இருக்கோ, அதுல ஈடுபடுத்து றோம். இங்கே படிச்ச ஒரு மாணவன் செஸ் புலி. கூடிய சீக்கிரமே 'கிராண்ட் மாஸ்டர்' ஆகிடுவான்!



▲ கிருஷ்ணமூர்த்தி

பிள்ளைகளுக்கு 'குட் டச்... பேட் டச்'னு தொடுதலைப் பத்தி, வல்லுநர்களைக் கூட்டிட்டு வந்து வகுப்பெடுக்கிறோம்; வருஷத்துக்கு ஒருதடவை மெடிக்கல் கேம்ப் நடத்துறோம். ரத்த தானத்துக்குப் பிள்ளைகளை ஊக்கப்படுத்துறோம். எங்க டீம்ல எப்பவுமே 60 பேர் ரத்த தானம் கொடுக்கத் தயாரா இருப்பாங்க.

நோட்டு, புத்தகம் வாங்க வசதி இல்லாத பிள்ளைகளுக்கு நாங்களே அதை வாங்கிக் கொடுக்கறோம். இங்கே வந்து ட்யூஷன் படிக்கிற பிள்ளைங்க, வீட்டுல போய் படிக்க வேண்டியதே இல்லை. ரிலாக்ஸ்டா அவங்க வேலையைச் செய்யலாம்'' என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

சரி... இந்த மன்றம் இயங்குவதற்கான நிதி?



"நன்கொடைதான். ஹெச்.சி.எல் நிறுவனம் எங்களுக்கு உதவி செய்யுது. மாதா மாதம் பராமரிப்புக்கும் ட்யூஷனுக்கும்னு ஒரு தொகை கொடுக்குறாங்க. வேற சில நிறுவனங்களும் நன்கொடை கொடுக்குறாங்க. ஆனா, இங்கே இருக்கிற சாரண ஆசிரியர்ல இருந்து, மத்த ஆசிரியர்கள் வரைக்கும் யாரும் ஒரு பைசாகூட வாங்கறதில்லை. ட்யூஷன் மட்டும் இல்லாம, வேற சில நல்ல வேலைகளையும் இந்த மன்றம் செய்யுது" என்கிற தீபா, ஓர் அறையில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் கம்ப்யூட்டர்களைக் காட்டுகிறார்.

"இந்தப் பகுதியில் உள்ள பெண்களுக்கு இலவசமா கம்ப்யூட்டர் கிளாஸ் நடத்துறோம். தினமும் காலையில 10 மணியில இருந்து 4 மணி வரைக்கும் பெண்களுக்கான கம்ப்யூட்டர் வகுப்பு. படிச்சு முடிச்சதும், அவங்களுக்குப் பொருத்தமான வேலை கிடைக்கவும் ஏற்பாடு செய்யறோம்" என்று வியக்கவைக்கிறார் தீபா.

ட்யூஷனில் மட்டும் என்று இல்லாமல், இங்கு பயிலும் மாணவிகளின் மேல் எப்போதும் தன் கண்காணிப்பைத் தீவிரமாக்கி வைத்திருக்கிறது இந்த மன்றம். காரணம் இல்லாமல் ட்யூஷனுக்கு ஆப்சென்ட்டா... பெற்றோரை வரவழைத்து விசாரிக்கிறார்கள். இரவு 8:30 மணிக்கு மேல் சற்று தூரத்தில் இருந்து ட்யூஷனுக்கு வரும் மாணவிகளை, அவர்களுக்கே தெரியாமல் சில தன்னார்வலர்கள் பாதுகாப்புக்காக ஆங்காங்கே இருந்து கண்காணிக்கிறார்கள். இப்படி முழுப் பாதுகாப்போடு செயல்படுகிறது இந்த காவல் சிறார் மற்றும் மகளிர் மன்றம்.

வருடத்துக்கு ஒருமுறை காவல் துறை உயர் அதிகாரிகளை வரவழைத்து விழா நடத்துகிறார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளோடு களைகட்டும் விழாவில், சிறப்பாக பயின்ற, தன் ஆர்வத்தை வெவ்வேறு துறைகளில் வெளிப்படுத்திய மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்குகிறார்கள்.

மாணவர்களின் கல்விக் கண்ணைத் திறக்க, பள்ளிகள் மட்டுமே போதாது. நல்ல மனநிலையோடு படிக்க அமைதியான சூழலும், கற்றுக்கொடுக்கவும் உதவவும் ஆசிரியர்களும் தேவை. அதற்கு அருமையான உதாரணமாகத் திகழ்கிறது, அரும்பாக்கம் காவல் சிறார் மகளிர் மன்றம்! ●

ஒவ்வொன்றுக்கும் பரிசு: ₹ 200   ஓவியங்கள்: ராமமூர்த்தி





# அனுபவங்கள் பேசுகின்றன!

## வாயில்லா ஜீவனுக்கு...

எங்கள் தெருவில் பிச்சை எடுப்பவரை நாய்கள் குரைத்துக்கொண்டே விரட்டுவதுண்டு. ஒரே ஒரு நாய் மட்டும் அவரிடம் வாலை ஆட்டிக்கொண்டு, அவர் பின்னாலேயே நட்புடன் சென்றது. பிச்சைக்காரரிடம் கேட்டேன். அவர் சொன்னார்... ''தாயி, இது வீட்டு நாய் இல்ல... தெரு நாய். அதனால இதுக்கு யாரும் சாப்பாடு வைக்க மாட்டார்கள். என் சாப்பாட்டில் சிறிது வைத்தேன்; பசியோடு சாப்பிட்டது. அதன்பிறகு தினமும் அதற்கு சாப்பாடு வைக்கிறேன். அதான் அந்த நாயி, இந்த நாயி மீது பாசம் காட்டுது'' என்றார். எடுப்பது பிச்சைதான் என்றாலும்கூட வாயில்லா ஜீவனுக்கும் தர்மம் செய்யும் அவரது எண்ணம் என்னை ஆச்சர்யத்தில் ஆழ்த்திவிட்டது!

*- அமுதா அசோக்ராஜா,* திருச்சி

## சத்தம் என்பது நமக்கு...

**நா**ங்கள் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளரின் மகன் வெளிநாட்டில் இருக்கிறார். அவருக்கு நல்ல சம்பளம் என்பதால் வீட்டில் கம்ப்யூட்டர், வெப்-கேமரா என்று சகல டெக்னாலஜி வசதிகளும் உள்ளன. ஆகவே, தினமும் நெட் மூலம் தன் மகன், மருமகளுடன் உரையாடுவார். அதுவும் இரவு 12 மணிக்கு. அப்போது அவர் மகன் இருக்கும் ஊரில் பகல் வேளையாம். அது வெகுதொலைவில் உள்ள நாடு என்பதாலோ என்னவோ, அடுத்தத் தெருவுக்கு கேட்கும் அளவுக்கு சத்தமாகப் பேசுவார்! 'இதனால், மற்றவர்களின் தூக்கம் கெடுமே...' என்றெல்லாம் அவர் நினைத்துப்பார்த்ததாக தெரியவில்லை! இதுபற்றி அவரிடம் முறையிட்டபோது, "இஷ்டம் இருந்தா குடி இருங்க... இல்லேன்னா காலி பண்ணிட்டு போங்க" என்றார். என்னதான் வீட்டு 'ஓனர்' என்றாலும், நள்ளிரவில் இப்படிக் கத்திப் பேசி அடுத்தவர் தூக்கத்தைக் கெடுக்கக்கூடாது என்று அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இவர் மட்டுமல்ல... சில வீடுகளில் இரவு நேரங்களில் டி.வி-யை உரக்க வைத்து, அருகில் குடியிருப்பவர்களை இம்சிப்பவர்களும் உண்டு. இவர்களெல்லாம் தங்கள் போக்கை மாற்றிகொள்ள வேண்டும்!

*- சம்பத்குமாரி,* திருச்சி-4



## விவசாயத்திலும் பெருவாழ்வு பெறலாம்!

**ச**மீபத்தில் திருமண நிகழ்ச்சி ஒன்றில், என் கல்லூரி நண்பனைச் சந்தித்தேன். டிப்-டாப்பாக உடையணிந்து சொகுசு காரில் வந்திருந்தான். அவனை நலம் விசாரித்து, "நல்ல வசதிதான் போல... எந்த ஐ.டி கம்பெனியில வேலை பார்க்கறே..?" என்று கேட்டேன். "ஐ.டி. கம்பெனியில வேலை பார்த்தால்தான் சம்பாதிக்க முடியுமா... விவசாயம் செய்தால் சம்பாதிக்க முடியாதா..?" என்றான். "உயர் படிப்பு படித்து பட்டம் வாங்கிய உன்னால எப்படி சேற்றில் இறங்கி கஷ்டப்பட்டு வேலை செய்ய முடியும்..?" என்றேன், ஆச்சர்யத்துடன்!

"இப்படித்தான் எல்லோரும் படிக்கிறதே ஏதோ ஆபீஸ் வேலை பார்க்கத்தான்கிற மாதிரி நினைக்கிறாங்க. ஆனால், நான் படிப்பு கொடுத்த அறிவை விவசாயத்தில் புகுத்தி, 'என்ன பயிர் விளைவிக்கலாம்; எவ்வாறு சாகுபடி செய்யலாம்; சிறு தானியங்களில் அதிக மகசூல் பெறுவது எப்படி?'ன்னு சிந்திச்சு, அதன்படி செய்து நல்லா சம்பாதிக்கிறேன். நான்கு சுவர்களுக்குள் அடைபட்டு, அடுத்தவர்களுக்கு அடிமையாக வேலை செய்யாமல், சுத்தமான காற்றை சுவாசித்து, இயற்கை அழகை ரசித்தபடி விவசாயம் செய்கிறேன். அதோட இதுவரை எங்களைத் தாங்கிப்பிடித்த, எங்கள் பரம்பரைத் தொழிலான விவசாயத்தை அழியாமல் பாதுகாக்கிறேன் என்கிற மன திருப்தியும் கிடைக்கிறது" என்றான்.

அவன் எண்ணத்தையும் முன்னேற்றத்தையும் பாராட்டி வாழ்த்தினேன்.

*- எஸ்.பிரியா, திருப்பூர்*



## அனுபவம் அளிக்கும் பாடம்!

**எ**ன் நண்பர் இல்லத்துக்கு ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று சென்றிருந்தேன். அப்போது அவரும் குழந்தைகளும் வீட்டில் இல்லை. 'எங்கே..?' என்று அவர் மனைவியிடம் கேட்டதற்கு, அவர் கூறிய பதில் என்னை வியப்பில் ஆழ்த்தியது. ஞாயிறுதோறும் கடைக்குப் பொருள்கள் வாங்கச்செல்லும் என் நண்பர், தன் குழந்தைகளையும் உடன் அழைத்துச் செல்வாராம். பொருள்களை எப்படி வாங்குவது, விலை விவரம், எந்தெந்த கடைகளில் என்னென்ன வாங்க வேண்டும், பணத்தை எப்படிக் கையாள்வது என்பது போன்ற விவரங்களை அவர்களுக்கு அனுபவபூர்வமாக உணர்த்துவாராம். "குழந்தைகளை இப்படிப் பழக்கினால், விலை விவரம் தெரிந்து, அநாவசியமான செலவுகளைச் செய்யாமல், சிக்கனத்தைக் கற்றுக் கொள்வார்களே..." என்றார் அவர். அருமையான விஷயம்தானே!

*- கே.சீதாலட்சுமி,*
*மதுரை - 16*

www.vikatan.com

 ஆர்.வைதேகி படம்: ப.சரவணகுமார்

# உழைப்பே அழகு!

“என் வாழ்க்கையில் புத்தகங்களுக்கு மிகப்பெரிய இடம் உண்டு. வாழ்க்கையின் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு புத்தகத்தின் பங்கு இருந்திருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லும்படியான ஒரு புத்தகம் என்றால், அது ‘வால்காவிலிருந்து கங்கை வரை’. உலகப்புகழ் பெற்ற நூல். வரலாற்று ஆசிரியரான ராகுல் சாங்கிரித்யாயன் (ராகுல்ஜி) எழுதியது. சமுதாய வரலாறு பற்றி எனக்குச் சொல்லிக்கொடுத்த முதல் நூலாகவே இதைப் பார்க்கிறேன்.

திராவிட இயக்கக் குடும்பத்தில் வந்தவள் என்பதால், எனக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. பெரியாரின் கருத்துகள் எனக்கு வாழ்க்கையாகவே உட்புகுந்தவை. 16 வயதில் இப்படியொரு நூலை மிகச்சரியாக புரிந்துகொள்வதற்கான களம் அமைத்துக்கொடுத்ததும் அந்த பெரியார் சிந்தனைதான்.

குடும்ப அமைப்பிலும் மத அமைப்பிலும்தான் குழந்தைகள் வளர்கிறார்கள். பள்ளிக்கூடம் உள்பட அப்படி ஓர் அமைப்புதான் குழந்தையின் சிந்தனையைச் செதுக்குகிறது. இப்படித்தான், நம்மை அறியாமலேயே சில விஷயங்களை உள்வாங்கிக்கொள்கிறோம். குடும்பத்தில் இருந்து தொடங்கியே சமுதாயத்தைப் பார்க்கிறோம். ‘என் குடும்பம், என் ஊர்’ என்றுதான் குழந்தையின் பார்வை கட்டமைக்கப்படுகிறது. இந்தப் புத்தகமோ, சமுதாயத்தில் இருந்து குடும்பம் எப்படி உருவானது என்பதை மிக எளிமையான நடையில் சிறுசிறு கதைகள் மூலம், ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலகட்டத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் சொல்கிறது.

நூலின் தொடக்கத்தில், நமது சமூகம் தாய்வழி சமூகமாக இருந்து தந்தைவழி சமூகமாக எப்படி உருமாறியது என்கிற விஷயம் பல்வேறு கதைகள் மூலம் காட்சிகளாக விரிகின்றன. பின்னர், பெண்ணின் தலைமையில் இருந்த ஆதிமனித சமூகம் ஆணின் தலைமைக்கு மாறியிருக்கிறது.

இந்தப் புத்தகத்தைப் படித்த அதே வயதில்தான், ‘குடும்பம் தனிச்சொத்து அரசு’ என்கிற புத்தகத்தைப் படிக்க முயற்சி செய்து தோற்றுப் போயிருக்கிறேன். பத்து பக்கங்களுக்கு மேல் படிக்க முடியவில்லை. அவ்வளவு கடினமான மொழிநடை. அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்ட அதே விஷயங்களைத்தான், ‘வால்காவிலிருந்துகங்கைவரை’யில் கதைகளாக மாற்றிக்கொடுத்திருக்கிறார் ராகுல்ஜி.



**ஓவியா**

**பெண்ணியச் சிந்தனையாளர்**

இந்நூலைப் படித்த பிறகு சமூகம், குடும்பம், ஆண்/பெண், காதல், போர் பற்றிய பிம்பங்கள் எல்லாம் அழகான மாற்றங்களுக்கு உள்ளாயின. அதன்பிறகு சமுதாயத்தை நான் வேறொரு விதமாகப் புரிந்துகொள்ளத் தொடங்கினேன். 'எதையும் மாற்ற முடியும்' என்கிற நம்பிக்கையை இந்த நூல் தருகிறது. 'சமூகம் என்பது படைக்கப்பட்டது அல்ல... பரிணாமம் பெற்றது' என்பது புரிந்தது. வாழ்க்கையில் நான் நன்றிக்கடன் பட்ட விஷயங்கள் என்கிற பட்டியலில் 'வால்காவிலிருந்து கங்கை வரை' புத்தகத்துக்கு முக்கிய இடம் உண்டு.

புத்தகத்தில் என்னை ஈர்த்த பகுதிகள் எனச் சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். கதையின் தொடக்கம் பிரமாதமானதாக இருக்கும். கூட்டத்தின் தலைமையை ஏற்பது யார் என தாய்க்கும் மகளுக்கும் இடையே ஒரு போராட்டத்துடன்தான் கதையே தொடங்கும். அதில் தாயை, மகள் கொன்றுவிட்டுத் தலைமையைப் பிடிப்பாள். பெண்ணின் தலைமை என்கிறபோது அநியாயங்களே நடப்பதில்லை எனச் சொல்வதாகப் பலரும் புரிந்துகொள்கிறார்கள். அப்படியெல்லாம் கிடையாது. எந்தப் பாலினத்தின் கையில் இருந்தாலும் ஆதிக்கம் என்பது தவறாகத்தான் பயன்படுத்தப்படுகிறது.

இந்தப் புத்தகத்தில் என்னை பிரமிக்கவைத்த இன்னொரு இடமும் உண்டு. அழகை ஆராதிக்கிற மனநிலை மனிதர்களுக்கு அந்தக் காலத்திலேயே இருந்திருக்கிறது என்பதைச் சொல்வதாக ஒரு கதை வரும். அதில் பேரழகியான ஒரு பெண், தான் முதுமை அடைந்தால் தன் அழகு போய்விடுமோ என யோசிக்கிறாள். அதற்காகத் தற்கொலை செய்து கொள்கிறாள். 'என் காதலனின் மனதில் நான் எப்போதும் இதே உருவத்துடன் இருப்பேன்' என்று சொல்லிவிட்டு சாகிறாள். இது ஏற்புடைய கருத்தில்லை என்றாலும் எனக்குப் பிரமிப்பைக் கொடுத்தது என்று சொல்வேன்.

பெண்ணின் அழகைப் பற்றிப் பேசும் பல இடங்கள் இந்தப் புத்தகத்தில் உண்டு. அழகாக இருக்க வேண்டும் என்கிற நினைப்பில் உடல் உழைப்பில் இருந்து விலகி இருப்பார்கள். அதனால் அவர்களுடைய கைகள் மிருதுவாகிவிடும். ஒரு பெண் தன் காதலனிடம், 'இந்தப் பெண்கள் கைகள் மிருதுவாக வேண்டும் என்பதற்காக உழைப்பே இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களது கைகள் பலமே இன்றி அசிங்கமாகக் காணப்படுகின்றன' என்று சொல்வாள். அதாவது ஒரு பிரிவினர் எதை அழகு என நினைத்தார்களோ, அதற்கு நேர் மாறான கருத்தை முன்வைப்பாள் அந்தப் பெண்.

நூலின் முடிவில் இப்போதைய அரசியலைப் பற்றிய பேச்சும் இருக்கும். காந்தியின் அஹிம்சைத் தத்துவம் சரியானதா என்பது பற்றியும் இந்திய அரசியல் அமைப்பு பற்றிய திறனாய்வு பற்றியும் பேசப்பட்டிருக்கும்..

புதிதாக வாசிக்கத் தொடங்குகிற பிள்ளைகளுக்கு நான் பரிந்துரைக்கிற புத்தகங்களில் இந்தப் புத்தகம் முக்கியமானது. இதைப் படித்தால்தான் சமூகப் பரிணாமம் பற்றிய சிந்தனை கிடைக்கும் எனச் சொல்லிப் படிக்க அறிவுறுத்துகிறேன்..."

ஒவ்வொன்றுக்கும் பரிசு: ₹ 100



வண்டு, பூச்சிக்கடிக்கு வெள்ளைப்பூண்டை அரைத்து கடிவாயில் கட்ட... விஷம் முறியும்.

- விஜயலட்சுமி சிவசங்கரன், சென்னை - 87



வெங்காயம், சுடுசோறு, உப்பு மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்துக் கட்டினால், நகச்சுற்று குணமாகும்.

- ஆர்.சங்கவி, நல்லாலம்



பப்பாளிக்காயை கூட்டு, பொரியல் என சமைத்துச் சாப்பிட்டு வந்தால், பருமன் குறையும்.

- ஆர்.அம்மணி, வடுகப்பட்டி



பூசணிக்காயைச் சிறு துண்டுகளாக நறுக்கி, கண்களைச் சுற்றி பற்று போட்டால், நாளடைவில் கருவளையம் மறையும்.

- புவனா நாகராஜன், செம்பனார்கோவில்



குழந்தைகளுக்குத் தொடர் இருமல் வந்தால் பெருங்காயத்தை வெந்நீர் விட்டுக் கரைத்து, அது தெளிந்ததும் நீரை மட்டும் கொடுக்க... இருமல் குணமாகும்.

- கௌசியா அஜீஸ், நெய்வேலி

# டிப்ஸ்... டிப்ஸ்...



www.vikatan.com

அவள் கிளாஸிக்ஸ்

எனக்குள் நான்

- ஸ்ரீப்ரியா

# “ஆண்மை... பெண்ணுக்கு அழகு!”

“மம்மீ..!”

“என்னப்பா..?”

“நீயும் ரஜினி அங்கிளும் ரொம்ப ஃப்ரெண்ட்ஸா மம்மீ? டி.வி-யில் நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து நிறைய தரம் வர்றீங்களே..?”

- யு.கே.ஜி படிக்கும் என் பொண்ணு ஸ்நேகா, சோபாவில் உட்கார்ந்து, என் நெற்றியில் புரளும் முடிகளைக் கலைத்து விளையாடியபடியே கேட்கிறாள். எதிரே டி.வி-யில் நானும் ரஜினியும் நடித்த ‘மாங்குடி மைனர்’ படம் ஓடிக்கொண்டிருந்தது.

நான்கு வயதுகூட இன்னும் முடியாத என் பொண்ணைப் பொறுத்தவரை, அவள் தன் அம்மாவை மம்மு ஊட்டும் போஸிலும், ஹோம்வொர்க் சொல்லிக் கொடுக்கும் போஸிலுமே பார்த்துப் பழகிவிட்டதால், இப்போது புதிதாக ரஜினி அங்கிள் என்று அவளுக்குத் தெரிந்த சூப்பர் ஸ்டாருடன் தன் மம்மி டான்ஸ் ஆடுவது ஆச்சர்யத்தைத் தந்திருக்க வேண்டும்!

குழந்தையின் வார்த்தைகள், ஃப்ளாஷ்பேக் பட்டனைத் தட்டிவிட, மனசு ஒரேயடியாக



நான் குழந்தையாக இருந்த காலத்துக்குச் சென்று நின்றது.

என் மகள் இப்போது படிக்கும் அதே 'சர்ச் பார்க்'கில்தான் நானும் படித்தேன். அங்கே நான், என் அக்கா போல ஒரு சிலரைத் தவிர எல்லோருமே பெரிய பெரிய வீட்டுப் பிள்ளைகள்தான். பள்ளிக்குக் கட்டடம் கட்டுவது போன்ற விஷயங்களுக்கு நிதி வசூலித்தால், வீட்டிலிருந்து கைநிறைய பணம் வாங்கி வந்து தருவார்கள். 'நம்மால் அவ்வளவு பணம் தர முடியவில்லையே' என்று ஏக்கமாகவும் கோபமாகவும் இருக்கும்!

இன்னொரு கோபம், அலமேலு என்கிற என் பெயர் மீது! இப்படி ஒரு பாட்டித்தனமான பெயரை நமக்கு வைத்துவிட்டார்களே என்று படுபயங்கரமாக ஃபீல் பண்ணுவேன். என் பெயரையே இன்னும் கொஞ்சம் சுருக்கி, 'ஆலு' (ஹிந்தியில் உருளைக்கிழங்கு என்று அர்த்தம்) என்று என் குண்டான உருவத்தை வைத்து சில பெண்கள் கேலி செய்து இன்னும் கொஞ்சம் என்னை நோகடிப்பார்கள்.

அப்பா பக்கிரிசாமி பிள்ளை 'ஆல் இந்தியா ரேடியோ'வில் வயலினிஸ்ட்டாக இருந்தார். அம்மா, அப்போதைய மற்ற எல்லா அம்மாக்களையும் போல ஹவுஸ் வொய்ஃப். அப்பாவும் அம்மாவும் பல நேர நல்ல சாப்பாட்டை தியாகம் செய்துவிட்டுதான் எங்களை ஒரு சிறந்த பள்ளியில் படிக்க வைத்திருக்கிறார்கள்.

அம்மா நல்ல கிளாஸிக்கல் டான்ஸர். ஆனால், அவங்களாலே கல்யாணத்துக்கு அப்புறம் ஆட முடியலே. அதனால, அக்கா மீனாட்சிக்கும் எனக்கும் ஆசை ஆசையாக டான்ஸ் கத்துக் கொடுத்தாங்க. அக்காவுக்கு டான்ஸ் கிளாஸ் அல்வா சாப்பிடற மாதிரி (டான்ஸுக்காகத்தான் வைஜெயந்திமாலாவை மனதில் வைத்து 'வைஜெயந்தி' என்று அவர் பெயரை மாற்றி வைத்தார்கள்). எனக்கு டான்ஸில் பெரிய ஆர்வமெல்லாம் இல்லே. ஆனா, டான்ஸ் கிளாஸுக்குப் போனா தாத்தா, சோடாவும் பட்டர் பிஸ்கட்டும் வாங்கித் தருவார் என்பதால், கரெக்டாக போய் விடுவேன். இடையில் கொஞ்சநாள் அப்பா ஹைதராபாத்தில் வேலை பார்த்ததால், தாத்தா வீட்டிலிருந்து கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலிலும் படித்தேன்.

அப்போதைக்கு என் ஆசை முழுக்க கேம்ஸ் டீச்சர் ஆக வேண்டும் என்பதுதான். கையில் பிரம்பும் உதட்டில் விசிலுமாக நான் கேம்ஸ் டீச்சராக நிற்பதுபோல அடிக்கடி நினைத்துக்கொள்வேன். த்ரோபால், நெட்பால் மாதிரியான விளையாட்டுகளில் எப்போதும் நான் முன்னணியில் இருப்பேன் என்பதால், இந்தக் கனவு ஏற்பட்டிருக்கலாம்.

சர்ச் பார்க் பள்ளியின் கண்டிப்பு மற்றும் மாணவிகளின் ஆங்கிலப் புலமை மீது எனக்குத் தீராத காதலே உண்டு. அங்கே என் குழந்தையைச் சேர்க்க வேண்டும் என்பதற்காகவே பெண் குழந்தை வேண்டும் என்று விரும்பினேன் என்றால், நீங்கள் நம்ப மாட்டீர்கள்! ஆனால், உண்மை!

நான் ஒன்பதாவது படிக்கும்போது திடீரென்று ஒரு நாள் எங்கள் வீட்டுக் குள்ளே நாகராஜராவ்! எம்.ஜி.ஆர். உட்பட பலரை போட்டோ எடுத்த பெரிய போட்டோ கிராஃபர். அக்கா வைஜெயந்தியை போட்டோ எடுப்பதற்காக அம்மா அவரை வரவழைத்திருந்தார். பத்மினிக்கு மேக்கப் போடும் தனகோட்டி மேக்கப் போட, ஒரு முழு ரோலும் எடுத்து முடித்துவிட்டு என்னைப் பார்த்தார்.

'ஒரேயொரு ஃபிலிம் இருக்கு. உன்னை எடுத்திடலாம் வா' என்று சொல்ல, கிடுகிடுவென்று எனக்கும் மேக்கப் நடந்தது.


அப்போதெல்லாம் மேக்கப் என்றாலே முன்நெற்றியில் வட்டமாகக் கொஞ்சம் முடியை வெட்டிவிட்டு, 'விக்' வைத்துவிடுவார்கள். கருமேகம் போல அடர்ந்த கூந்தல் இருந்தாலும்கூட, விக் கட்டாயம் உண்டு. (மறுநாள் நான் பள்ளிக்கூடத்துக்கு போனபோது முன்நெற்றியை ஒரு புத்தகம் வைத்து மறைத்துக்கொண்டே போனது இன்னும் ஞாபகத்தில் நிற்கிறது.)

நாகராஜராவ் எடுத்த அந்த போட்டோதான் என்னை நடிகையாக்கியது! டான்ஸ் மாஸ்டர் சலீமிடம் அந்த போட்டோ சிக்க...

அவர் டைரக்டர் மாதவனிடம் காட்ட... 'மாணிக்கத் தொட்டில்' படத்தில் ஜெமினியின் ஐந்து பெண்களில் ஒருத்தியாக நடிக்க எனக்கு அழைப்பு வந்தது. விஷயம் கேள்விப்பட்டு நான் ஸ்கூலிலிருந்து நேராக டைரக்டரிடமே போய் நின்றேன். 'எனக்கு சான்ஸ் தர்றதா சொன்னீங்களாம். என்ன ரோல்?' என்றேன் பட்டென்று! பெரிய பெரிய நடிகர்களே டைரக்டர்களிடம் பேச பயந்த நேரம் அது. 'துக்குணூண்டு பள்ளி மாணவி வந்து என்ன தைரியமாக கேட்கிறது பார்' என்று திகைப்பும் கோபமுமாகப் பார்த்தார் அவர். 'எதுக்குக் கேட்கிறேன்னா. நான் நடிக்க வர்றதா இருந்தா, என் படிப்பையெல்லாம் விட்டுட்டு வரணும். அதனால பெரிய ரோலா இருந்தா தாங்க!' என்றேன் நான் கலங்காமல்! 'இந்த அதிகப்பிரசங்கியை யார் உள்ளே விட்டது?' என்பதுபோல டைரக்டர் கோபமாகிக்கொண்டிருந்தார். வீட்டில் அம்மாவும்தான்!

என்னவோ தெரியவில்லை... மனதில் ஒன்று நினைத்தால் பட்டென்று அதைப் பேசியாக வேண்டும் எனக்கு! எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், என்னால் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க முடியாது. எனது இந்தக் குணமே எனக்கு சில விரோதிகளைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது என்றாலும், பல ப்ளஸ் பாயின்ட்களையும் தந்திருக்கிறது. உதாரணமாக, அடுத்த படத்துக்கே டைரக்டர் மாதவனிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. 'நீ என்கிட்டே தைரியமா பேசின விதம் எனக்குப் பிடிச்சிருந்தது. இது நீ கேட்ட மாதிரி ரோல்தான்' என்றார். 'முருகன் காட்டிய வழி' என்கிற படம் அது. அம்மா, ராகங்களின் புத்தகத்தைப் புரட்டி, 'ஸ்ரீப்ரியா' ராகத்தை எனக்குப் பெயராக செலக்ட் செய்து தந்தார்.

ஸ்ரீகாந்த்தான் ஹீரோ என்றார்கள். நான் படித்த அதே ஸ்கூலில்தான் ஸ்ரீகாந்தின் பெண்ணும் படித்துக்கொண்டிருந்தாள். அவளை ஸ்கூலில் விடுவதற்கு ஸ்ரீகாந்த் வரும்போதெல்லாம் 'ஏய்... ஸ்ரீகாந்த்டீ" என்று தோழிகளோடு நான் சத்தம் போட்டு கேலி செய்துகொண்டிருப்பேன். இப்போது அவரைக் கட்டிப்பிடித்து நான் நடிக்க வேண்டுமா? 'ஐயோ... தோழிங்க எல்லாம் படத்தைப் பார்த்துவிட்டு கிண்டலடிப் பார்களே!' என்ற நினைப்பிலேயே எனக்கு ரொம்பவே தர்மசங்கடமாகிவிட்டது. டைரக்டர் கட்டிப்பிடிக்கச் சொல்லும் ஸீன்களில் எல்லாம் வெட்கப்பட்டுக்கொண்டு அரையும் குறையுமாகச் செய்வேன். விளைவு... பத்து டேக் வாங்கியது. ஒழுங்காக டைரக்டர் சொல்படி கட்டிப்பிடித்தால் ஒரே டேக்கில் 'ஓகே' ஆகிவிடும். இல்லையெனில், நிறைய முறை கட்டிப்பிடிக்க வேண்டியிருக்கும் என்று அப்புறம்தான் தெரிந்துகொண்டேன்.



▲ குடும்பத்தினருடன் ஸ்ரீப்ரியா

பெரியப்பா தண்டாயுதபாணி பிள்ளை சினிமாவின் பெரும் நட்சத்திரங்களான வைஜெயந்தி

மாலா, பத்மினி போன்றோருக்கு நடன குரு என்பதால், 'மாஸ்டர் பொண்ணு' என்று எனக்கு ஃபீல்டில் ஒரு தனி மரியாதை! இரண்டாவது படத்திலேயே நான் சிவாஜிக்கு ஜோடி! 'பாட்டும் பரதமும்' படத்தில் இரண்டு சிவாஜிகளில் ஒருவருக்கு நானும், இன்னொரு சிவாஜிக்கு ஜெயலலிதாவும் ஜோடி! நாங்கள் இருவரும் ஒரு படத்தில் நடித்தோமே தவிர, ஒரே நாளில் ஷூட்டிங்கில் கலந்துகொண்டதில்லை. ஸ்கூலின் முன்னாள் மாணவி என்ற முறையில் எனக்கு ஜெயலலிதாவை ரொம்பப் பிடிக்கும்.

அதற்குள் 'அவள் ஒரு தொடர் கதை' படம் வர... கிடுகிடுவென்று என் படங்கள் வரிசையாக வர ஆரம்பித்தன. நானும் கமலும் கிடார் வைத்துப் பாடும் படங்களே நிறைய வந்தன. ஒரே வருஷத்தில்



ஒன்பது படங்கள். அதுவரைக்கும் பிடிக்காமலே சிடுசிடுவென்று நடித்து வந்த நான், கிட்டத்தட்ட பத்து படங்களுக்கு அப்புறம்தான் நடிப்பின் மேல் ஓரளவு ஆர்வம் வந்து நடிக்கவே ஆரம்பித்தேன்.

இருநூற்றைம்பது படங்களுக்கு மேல் நடித்துவிட்டேன் என்று பெருமையாக இருந்தாலும், 'அவன்-அவள்-அது', 'அவள் அப்படித்தான்', 'வசந்தத்தில் ஒரு நாள்' என்பது போல சில படங்களைத் தவிர, நடிப்பில் நான் பிரமாதமாக எதையும் செய்துவிடவில்லை என்று ஒரு வருத்தமும் இருக்கிறது. காரணம் - எனக்குக் கிடைத்த ரோல்கள் அப்படி!

சிவாஜியுடன் இருபது படங்கள் நடித்திருக்கிறேன். நடிப்பில் இமயமாக இருந்த சிவாஜியின் மோசமான படங்களில் எல்லாம் நான்தான் ஹீரோயின். 'லாரி டிரைவர் ராஜாக்கண்ணு', 'எமனுக்கு எமன்' போன்ற படங்களின் பேரேகூட உங்களுக்கெல்லாம் மறந்திருக்கும்.

அது தமிழ் சினிமாவில் ரீமேக் காலம். பழிக்குப் பழி வாங்கும் தெலுங்கு சினிமா படங்களை 'ரீமேக்' செய்து கொண்டிருந்தார்கள். ரஜினி, கமல் கூட அதுபோன்ற படங்களில்தான் அதிகமாக நடித்தார்கள். நான், கமல், ரஜினி மூவருமே ஒரே நேரத்தில் ஃபீல்டில் நுழைந்து, ஒன்றாகவே வளர்ந்தவர்கள். ரஜினியுடன் அதிகமாக நடித்த ஹீரோயின் நான் என்று கணக்குச் சொல்லும்போது சந்தோஷமாக இருக்கிறது. நாங்கள் இணைந்து 'அன்னை ஓர் ஆலயம்' நடிக்கும்போது அவர் உடம்பும் மனசும் சரியில்லாமல் மருத்துவமனையில் இருக்கும்படி ஆகிவிட்டது. டைரக்டர் கே.பி. சொன்னால்தான் அவர் எதையுமே கேட்பார் என்பதால், நான் டைரக்டரிடம் ஓடினேன். 'ரஜினிக்கு என்னவோ ஆகிவிட்டது. நீங்கள்தான் அவரைக் குணப்படுத்த முயற்சிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டேன். உடன் வேலை செய்யும் ஒரு நண்பருக்காக நான் இப்படி உதவி கேட்டது டைரக்டரின் மனதைத் தொட்டுவிட்டது போலிருக்கிறது. அவர் அதை சில பேட்டிகளில்கூடக் குறிப்பிட்டிருந்தார்.

ரஜினி பேசும் தமிழ் படுஸ்பீடாக, கொஞ்சம் குதறுவதுபோல இருக்கிறது என்று ஆரம்ப காலத்தில் சில அசிஸ்டென்ட் டைரக்டர்கள் அவருக்கு உச்சரிப்பு சொல்லித்தர முயற்சிப் பார்கள். 'என் ஸ்பீட் இதுதான்! ஜனங்க இதைப் பார்த்து ரசிச்சுதான் என்னை ஏத்துட்டு இருக்காங்க. மாத்திப் பேசினா டப்பிங் வாய்ஸ் தந்தது மாதிரி இருக்கும்' என்று, தான் நினைத் ததையே செய்தார் ரஜினி. தான் விரும்பியது எதுவாக

அவள் கிளாஸிக்ஸ்

இருந்தாலும், அதைச் செய்ய ஒரு துணிச்சல் வேண்டும். அது ரஜினியிடம் இருந்ததால்தான், அவர் சக்சஸ் ஆனார்.

எப்போதுமே கமலின் மீது எனக்கு ஒரு பொறாமை உண்டு. படிப்பு, நடிப்பு, எழுத்து என்று தன் எல்லைகளை விரித்துக்கொண்ட புத்திசாலி அவர். அவரைப் பார்க்கும் போதெல்லாம் 'நாமும் ஏன் எழுதக்கூடாது?' என்று எனக்குத் தோன்றிவிடும். ஷூட்டிங் இடைவெளியில் அவர் கவிதை எழுதினால், நானும் கவிதை எழுதுவேன். பொதுவாகவே எனக்கு இமிடேட் செய்யும் குணம் அதிகம் உண்டு. ஜானகியம்மாளைப் பார்த்தால், அவரை மாதிரியே பாட முயற்சி செய்வேன்!

ஒருவகையில் நான் இப்படி இமிடேட் செய்வதேகூட பல விஷயங்களை கற்றுக் கொள்வதற்கு நல்ல வாய்ப்பாகவே அமைந்தது. அந்தப் பழக்கம் நிறைய புத்தகங்கள் படிக்கும் தேவையை எனக்குத் தந்தது. மடமடவென்று சித்தர் புத்தகங்கள் எல்லாம்கூடப் படித்திருக் கிறேன். தமிழிலும் கன்னடத்திலும் நான் படங்களை டைரக்ட் செய்ததற்குக்கூட, இந்தக் குணம்தான் காரணம்.

சினிமா ஒரு புதைகுழி மாதிரி. அதற்குள் நுழையும் வரை பயமுறுத்தும். நுழைந்தபின், வேறு எந்த இடத்துக்கும் போகவிடாமல் அவர்களை அப்படியே இழுத்துக்கொள்ளும். என்னையும் அப்படித்தான் இழுத்துக்கொண்டுவிட்டது.

இப்போது விஜய் ஆடும் டான்ஸும் அர்விந்த்சுவாமியின் கேஷுவலான நடிப்பும் திரையைவிட்டு கண் எடுக்க முடியாத லெவலில் அசத்தலாக இருக்கின்றன. நடிகைகளில் ரம்பாவையும் ரோஜாவையும் எனக்கு ரொம்பப் பிடிக்கிறது. இருவருக்குமே நல்ல டிரெஸ்ஸிங் சென்ஸ்!

அறுபது படங்கள் நடித்துவிட்டு சினிமா என்ற புதைகுழியிலிருந்து மீண்டு வந்த ஒருத்தரும்கூட இருக்கிறார். அவர் வேறு யாருமல்ல... என் கணவர் ராஜ்குமார் சேதுபதிதான். நடிகை லதாவின் தம்பி. 'காஷ்மீர் காதலி' உள்பட பல தமிழ்ப் படங்களில் நடித்த அவர், படங்களில் சம்பாதித்தப் பணத்தை வைத்துக்கொண்டு இன்று சக்சஸ்ஃபுல்லாக ரியல் எஸ்டேட் பிசினஸ் செய்துகொண்டிருக்கிறார்.

தி.நகரில் என் அம்மா பியூட்டி பார்லர் வைத்திருந்தபோது ராஜ்குமார் அடிக்கடி எதிர்க்கடைக்கு வருவார். அவரைப் பார்த்தவுடனே, 'ஐயோ இவரா? 'மகாபலிபுரம் பக்கத்தில் ஃபிளாட் வாங்கறீங்களா.... கோடம்பாக்கம் பக்கத்தில் ஃப்ளாட் வாங்கறீங்களா'ன்னு அறுக்க ஆரம்பிச்சுடுவாரே!' என்று பயந்து ஓடிக்கொண்டிருந்தேன். அவர் சக்ஸஸ் ஸ்டோரிதான் என் எண்ணத்தை மாற்றியது.

ஒரு நியூ இயர் பார்ட்டியில்தான் மனம் விட்டுப் பேசினோம். அவரவர் வீட்டில் சொன்னோம். சம்மதித்தார்கள். திருமணம் நடந்தது. முத்துகள் போல இரண்டு குழந்தைகள். நிஜமாகவே முத்துகள்தான். ஒவ்வொரு முத்தையும் மூழ்கியெடுக்க நான் ஆடாமல் அசையாமல் மாசக்கணக்கில் மருத்துவமனையில் படுத்திருந்து, 'மொட்டை போடுகிறேன்' என்று திருப்பதிக்கு வேண்டிக்கொண்டபின் கண்டெடுத்த முத்துகள்.

என் கேரக்டரையும் பழைய பானுமதி யம்மா கேரக்டரையும் அடிக்கடி நான் ஒப்பிட்டு பார்ப்பதுண்டு. பழைய படங் களில் பானுமதியம்மா கேரக்டர் பார்த்து இம்ப்ரெஸ் ஆகியிருக்கிறேன். எம்.ஜி.ஆர்., சிவாஜி மாதிரி பெரிய பெரிய நடிகர் களையே எதிர்த்து, மனசில் பட்டதை பட்டென்று சொல்லும் தைரியசாலி பெண் கேரக்டர். வேறு வார்த்தைகளில் சொன்னால், ஆண்மை தெறிக்கும் ஒரு பெண் கேரக்டர். என்னைக் கேட்டால்... ஆண்மை பெண்களுக்கும் அவசியம். ஏன்... அது ஓர் அழகு என்றுகூட சொல்வேன். அதிர்ஷ்ட வசமாக எனக்கும்கூடப் பல படங்களில் அப்படிப்பட்ட கேரக்டர்களே கிடைத்தன. நிஜத்திலும்கூட நான் அப்படியொரு கேரக்டராகவே இருக்க விரும்புகிறேன். இருக்கவும் முயற்சி செய்கிறேன்.

சந்திப்பு: **லோகநாயகி**
படங்கள்: **கே.ராஜசேகரன்**

(அவள் விகடன் மார்ச் 5, 1999 இதழிலிருந்து...)

மாத்தி யோசி

வே.கிருஷ்ணவேணி படங்கள்: சு.குமரேசன்

**சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ளது 'த எஸ் ஸ்டுடியோ (The S Studio)'. ஒவ்வொரு சீஸனுக்கும் பண்டிகைக்கும் என பிரத்யேகமாக டிசைன் செய்யப்பட்ட புடவைகள் மற்றும் பிளவுஸ்கள் இங்குள்ள சிறப்பு. இதன் உரிமையாளர் சுபாஷினி ஸ்ரீனிவாசன், தன் ஒவ்வொரு வேலைப்பாட்டிலும் வித்தியாசத்தைக் காட்டுகிறார்.**

"என் அம்மா எம்ப்ராய்டரி வேலை, ஸ்வெட்டர் தைப்பதுன்னு எதையாச்சும் செய்துட்டே இருப்பாங்க. அதைப் பார்த்துப் பார்த்தே வளர்ந்ததால எனக்கும் டிசைனிங் மேல ஆர்வம் வந்துடுச்சு. அந்த ஆர்வத்துக்குத் தகுந்த உழைப்பைக் கொடுத்ததால, இப்போ பொட்டீக் வரை வந்திருக்கேன்.

நான் பிறந்து, வளர்ந்தது சென்னையில். கல்லூரிப் படிப்பை மட்டும் கோவையில் முடித்தேன். அஞ்சு வருஷம் 'ராம்கோ சிஸ்டம்'மில் வேலை பார்த்தேன். திருமணம், குழந்தைகள்னு ஆன பிறகு வேலையை விட்டுவிட்டு கணவரின் லெதர் பிசினஸுக்குத் துணையா இருந்தேன். ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் புடவை, சுடிதார் டிசைனிங் செய்துட்டு இருப்பேன்.

அப்படி ஒருமுறை நான் டிசைன் செய்த புடவையை உடுத்திட்டுப் போனப்போ, 'இது யுனிக்கா இருக்கே... எங்க வாங்கினே..?'னு எல்லோரும் கேட்டாங்க. 'எல்லாம் நம்ம கைவண்ணம்தான்'னு சொன்னதும், 'நிஜமாவா?! அப்போ எங்களுக்கும் செய்து தர முடியுமா'ன்னு கேட்க ஆரம்பிச்சுட்டாங்க. பொழுதுபோக்கா செஞ்ச விஷயத்தை தொழில்முறையில் செய்யும்போது பொறுப்பும், அதிக கவனமும் தேவைப்படுமே..! கொஞ்சம் டென்ஷன் ஆனாலும், அதையே சவாலா எடுத்துட்டு செய்ய ஆரம்பிச்சேன். எல்லார்கிட்டயும் அசத்தலான வரவேற்பு கிடைக்க, வீட்டில் இருந்தபடியே மாதத்துக்கு 50 முதல் 100 புடவைகள் வரை டிசைன் செய்துகொடுக்கும் அளவுக்கு வாழ்க்கை சட்டுன்னு பரபரப்பா மாறிடுச்சு. என் ரெண்டு பசங்களும் கல்லூரிப் படிப்பு வரை வந்ததும், முழுநேர டிசைனரா இந்த பொட்டீக்கை ஆரம்பிச்சேன்" என்று சொல்லும் சுபாஷினி, தன் பொட்டீக்கில் உள்ள *'S'* என்ற எழுத்து, *saree*, *salwar* மற்றும் அவர் பெயரின் முதல் எழுத்து ஆகியவற்றுடன் *'yes'* என்ற பாசிட்டிவ் அர்த்தத்தையும் குறிப்பதாகக் கூறுகிறார்.

## சுபாஷினி டிசைன் செய்யும் புடவைகளில் என்ன ஸ்பெஷல்?

"பொதுவா எல்லா டிசைனர்களுமே பழக்கமான சில அடிப்படைகளில்தான் எம்ப்ராய்டரி, ஆரி வேலைப்பாடுகள், கட் வொர்க்னு எல்லாம் செய்றாங்க. அதில் வித்தியாசம் காண்பிக்கணும் என்பதற்காக, நான் பிளெய்ன் சேலையை வாங்கி, அதற்குச் சாயம் ஏற்றி, பார்டரில் கட் வொர்க், எம்ப்ராய்டரி டிசைன் போன்றவற்றைச் செய்து, அதையே முழுக்க முழுக்க டிசைனர் புடவையா



# அமெரிக்கப் பெண்களுக்கும் கலம்காரி புடவைகள் பிடிக்கும்!

சுபாஷினி ஸ்ரீனிவாசன்







ஒரிஜினல் காஞ்சிபுரம் பட்டுப் புடவை களை தறியில் நெய்து தரச்சொல்லி வாங்கி, அதிலும் டிசைன் செய்து தர்றேன்” என்று சொல்லும் சுபாஷினி, சென்னை, ஹைதராபாத், பெங்களூரு போன்ற நகரங்களில் 15-க்கும் மேற்பட்ட கண்காட்சிகளில் க்ரியேட்டிவ் வேலைப்பாடுள்ள உடைகளைக் காட்சிப் படுத்தியிருக்கிறார்.

வடிவமைக்கிறேன். அடுத்ததா, சீஸனுக்கு ஏற்ற புடவைகள் என் ஸ்பெஷல். உதாரணமா, டிசம்பர் மாதம்னா மியூசிக் - டான்ஸ் சீஸன் என்பதால் இசைக்கருவிகள், பரதநாட்டிய முத்திரைகள் போன்றவற்றையெல்லாம் புடவையில் வேலைப்பாடாகச் செய்வேன். இப்படி தீபாவளி, பொங்கல்னு ஒவ்வொரு பண்டிகைக்கும் அந்தந்தக் கொண்டாட்டங் களையே டிசைன்களா மாற்றுவேன்.







“எல்லா இடங்கள்லயும் நல்ல வரவேற்பு. குறிப்பா, அமெரிக்காவில் எனக்குத் தெரிஞ்சவங்க மூலமா ஸ்டால் போட்டிருந்தேன். எம்ப்ராய் டரி, கட் வொர்க், காஞ்சிபுரம் புடவைகள்னு எல்லாத்தையும் விரும்பி வாங்கினாங்க. குறிப்பா, கலம்காரி வேலைப்பாடு அவங் களுக்கு ரொம்ப பிடிச்சது. கலம் காரி புடவைகளால்தான் அமெரிக் காவிலும் எனக்கு நிறைய கஸ்டமர்கள் கிடைச்சிருக்காங்க'' என்று மகிழ்கிற சுபாஷினி, இப்போது தன் பொட்டீக்கில் புடவை, சல்வாருடன் ஹேண்ட் பேக், பர்ஸ் போன்ற அக்ஸசரீஸையும் விற்பனை செய்கிறார்.

“எவ்ளோ கஷ்டப்பட்டு உருவாக்கின ஸ்பெஷல் டிசைனா இருந்தாலும், ஐந்து புடவைகளுக்கு மேல அதைப் பயன்படுத்துவது இல்லை. ஆறாவது புடவைக்கு நிச்சயமா வேற டிசைனை யோசிக்க ஆரம்பிச்சுடுவேன்” என்கிறார் சுபாஷினி ஸ்ரீனிவாசன்.

ஆமாம்... இதுதான் வெற்றிக்குக் காரணம்!



# கசக்கிப் பிழியும் பயம்... கரைசேரும் வழி என்ன?

கிராமத்தில் இருந்து நகரத்துக்கு குடிபெயர்ந்ததனால் நான் படும் அவஸ்தைகள்தான் என் பிரச்னையே! பெருநகரங்களின் வாசனைபடாமல் உள்ளூர் பள்ளியில் படித்து வளர்ந்த பக்கா கிராமத்துப் பெண் நான். பட்டப்படிப்புக்காக நகரத்தை எட்டிப் பார்த்தேன். அதுவும் ஒரு பெரிய கிராமம் போலதான் இருக்கும் என்று என்னை சமாதானப்படுத்தி நகரத்துக்குப் படிக்க அனுப்பினார்கள். ஹாஸ்டல் வாழ்க்கை, டி.வி-யில் கேள்விப்படுகிற விஷயங்கள் என அனைத்தும் பயமுறுத்தவே... நகரத்தின் பிடியில் இருந்து தப்பி ஓடவே எத்தனித்தேன். போதாக்குறைக்கு பேய், இருட்டு பயமும் சேர்ந்துகொண்டன. வெளியில் காட்டிக்கொள்ளாமல் தவித்து, எப்படியோ கல்லூரி வாழ்க்கையை முடித்தேன். 'போதும்டா சாமி' என்று ஊருக்கு வந்த என்னைத் திருமணம் என்ற பேரில் நகரத்துக்கே கொண்டுபோனது வாழ்க்கை.

திருமணம் முடிந்து கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் பயணிக்க ஆரம்பித்தேன். புகுந்த வீட்டில் எனது பயந்த சுபாவம் பற்றி தெரிந்தும் பேய்க் கதைகளை சொல்லி பீதிக்குள்ளாக்குவார்கள். கணவர் இருக்கும் நேரம் மட்டும் சந்தோஷமாக கழிந்தது. தற்போது கர்ப்பமாகியிருக்கிறேன். வயிற்றில் குழந்தை வளர வளர எனக்குள் இருந்த பயமும் வளரத் துவங்கியது. சுற்றிலும் இருப்பவர்கள் பிரசவத்தில் பெண்களுக்கு நடந்த மரணம், குழந்தை இறப்பு என நெகட்டிவான விஷயங்களை என் காதுபடவே பேசுகிறார்கள். இதெல்லாம் என் பயத்தை மேலும் அதிகப்படுத்துகின்றன.

வீட்டில் உள்ளவர்களிடம் இதைப் பற்றி சொன்னால் 'மன பாதிப்பு கொண்டவள்' என்று ஒதுக்கி வைத்து விடுவார்களோ என்று அச்சமாக இருக்கிறது. உண்மையைச் சொன்னால், ஐந்து நிமிடங்கள்கூட என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. உடல் சோர்வும் அதிகமாக இருக்கிறது.

'என் பயம் அர்த்தமற்றதா? வீணாக வாழ்க்கையைப் பாழாக்கிக்கொள்கிறேனா? இதெல்லாம் தெரிந்தால் என் கணவர் என்னைத் தவறாக நினைத்து வெறுத்து விடுவாரா?' என்று குழப்பத்தில் தவிக்கிறேன். தயவு செய்து ஆலோசனை கூறுங்கள் தோழிகளே!

- பெயர் வெளியிட விரும்பாத வாசகி

## என் டைரி 400-ன் சுருக்கம்

"நானும் என் கணவரும் கிராமத்துச் சூழலில் வாழ்பவர்கள். எங்கள் மூத்த மகள் இன்ஜினீயரிங் முடித்துவிட்டு பெங்களூரில், ஐ.டி துறையில் வேலை செய்கிறாள்.

'அழகாக இருக்கிறாய், மாடலிங் இல்லைன்னா சினிமாவுல முயற்சி செய்து பார்' என மகளின் தோழிகள் அவளிடம் சொன்னதாக ரெண்டு வருஷத்துக்கு முன் எங்களிடம் சொன்னாள். 'நமக்கு இது சரிப்பட்டு வராது' என அவளிடம் சொன்னபோது, 'நான் ஏத்துக்குறேன். ஆனா, எனக்கு மாடலிங்ல ஆர்வம் இருக்கு. அழகும் வயசும் இருக்குற காலத்துல அதைப் பயன்படுத்திக்கிறேன்' என்றாள். பலமுறை அட்வைஸ் செய்தும், அவளைத் தடுக்க முடியவில்லை. வாய்ப்புகள் தேடிவர, அவளும் கைநிறைய சம்பாதித்தாள். ஆனால், நாங்கள் பயந்ததுபோலவே ஆண்களிடம் அவள் பழகினாள்; அது எங்களுக்குப் பிடிக்கவில்லை. அவளோ, 'என்னை மீறி எதுவும் நடக்காது. இப்போதைக்குக் கல்யாணப் பேச்சை எடுக்காதீர்கள். நான் சினிமாவிலும் நடிக்கப் போகிறேன்' என்றாள் திட்டவட்டமாக!

எங்கள் கவலை, அக்கறையை மதித்து... மாடலிங், சினிமாத்துறையில் இருந்து மகள் வெளியேறி, திருமணத்துக்குச் சம்மதிக்க வழிசொல்லுங்களேன்."



# சிநேகிதிக்கு...சிநேகிதிக்கு...

## வாசகிகள் ரியாக்‌ஷன்

ஒவ்வொன்றுக்கும் பரிசு: ₹ 100

### சாதித்துக்காட்டுவாள்!

கிராமத்துச்சூழலில் நீங்கள் உள்ளதால் உங்கள் மனதில் பயம் உருவாகியிருக்கிறது. மகளை இன்ஜினீயரிங் படிக்கவைத்த நீங்கள் எதிர்மறை சிந்தனைகளுக்கு இடம் அளிக்கலாமா? தற்போதைய தலைமுறை பெண் குழந்தைகள் எல்லா வகையிலும் கெட்டிக்காரர்கள். உங்கள் மகள் கூடுதலாக, தனது விருப்பப்படி மாடலிங், சினிமா துறைகளையும் தேர்வு செய்துள்ளார். இத்துறைகளில் ஆண்களுடன் பழகுவது தவிர்க்க இயலாதது. உங்கள் மகள்மீதும் அவளது வார்த்தைகள், ஒழுக்கத்தின்மீதும் முதலில் முழு நம்பிக்கை கொள்ளுங்கள். அவள் சாதனைப்பெண்ணாக உங்கள் முன் வந்து நிற்பாள். உங்கள் விருப்பப்படி திருமணமும் செய்துகொள்வாள்.

– கே.விஜயகுமாரி, விருத்தாசலம்

### பக்குவமாக எடுத்துச்சொல்லுங்கள்..!

உங்கள் மகளின் இந்த மனோநிலைக்குக் காரணம் அவளின் தோழிகளே! உங்கள் மகளிடம் 'அழகு நிலையானதல்ல' என்று பக்குவமாக எடுத்துச்சொல்லுங்கள். 'நடுத்தர குடும்பத்தினருக்கு சினிமா என்பது ஒரு கனவே..! அந்தத் துறையில் உள்ளவர் களிடம் கேட்டுப்பார்த்தால் அதன் சிக்கல் தெரியும். எல்லோரும் பெரிய நடிகையாகிவிட முடியாது' என்று புரிகிறவிதத்தில் சொல்லுங்கள். அடம்பிடிக்கும் மகளிடம் 'நீ சினிமாவில் நடித்துவரும் பணம் புகழைவிட உன் படிப்பில் நீ சம்பாதித்து வரும் பணமே நிரந்தரமானது' என எடுத்துச்சொல்லுங்கள். நிச்சயம் கேட்பார்.

– உஷா முத்துராமன், திருநகர்

• **வித்தியாசம்** ஆர்.வைதேகி

பெண்களால் விமானங்களையே இயக்கிவிட முடிகிறது. ஆனாலும், ஆண்களுக்கான வாகனங்களாக அறியப்பட்டவற்றை ஓட்டிச் செல்கிற பெண்களை இன்றும் ஆச்சர்யமாகப் பார்க்கிற மக்களும் இருக்கிறார்கள். அப்படி ஆயிரக்கணக்கானோரின் ஆச்சர்யப் பார்வை பதிகிறது சென்னையைச் சேர்ந்த வித்யா ஸ்ரீனிவாசனின் மேல். ஆண்களே அதிகம் ஓட்டிப் பார்த்திராத 'ஹார்லி டேவிட்சன்' வண்டியை அநாயாசமாக இவர் இயக்குகிற அழகே அலாதியானது!

சமீபத்தில் கோவாவில் நடந்த ஹாக் ராலியில் கலந்துகொண்டு திரும்பியிருக்கிறார் வித்யா. ஹார்லி டேவிட்சனிலேயே 'சென்னை டு கோவா' ட்ரிப் அடித்துவிட்ட ஆனந்தம் அடங்காமல் பேசுகிறார்...

"எனக்கு 13 வயசிருக்கும்போது, அப்பா இண்ட் சுஸூகி பைக் ஓட்டக் கத்துக் கொடுத்தார். அப்போ அப்பாகிட்ட சொந்தமா பைக் இல்லை. ஃப்ரெண்டோட பைக்கை வாங்கி, வாய்ப்பு கிடைக்கிறபோதெல்லாம் என்னை ஓட்டச் சொல்வார். எனக்கொரு தம்பி இருக்கான். அவனைவிட நான் தைரியசாலியா இருக்கணும்னு நினைப்பார் அப்பா. எனக்கும் எப்போதும் ஏதாவது வித்தியாசமா செய்யப் பிடிக்கும். அப்பதான் மத்தவங்க நம்மளைப் பார்ப்பாங்கன்னு நினைப்பேன்.

ஸ்கூல் படிப்பை முடிச்சதுமே, குடும்பச் சூழ்நிலை காரணமா நான் உடனடியா வேலைக்குப் போயிட்டேன். வேலைக்குப் போய் வருவதற்காக, பொண்ணுங்க ஓட்டற வண்டியை வாங்கித் தராம, அப்பா எனக்கு எம்80 பைக்-தான் வாங்கித் தந்தார்.


எம்80 ஓட்டினபோது ஒருமுறை ஆக்ஸிடென்ட் ஆகி, வண்டியோட கிக்கர் உடைஞ்சு என் காலுக்குள்ள போயிடுச்சு. அதனால கைனடிக் ஹோண்டா ஓட்ட ஆரம்பிச்சேன். அடிபட்ட காலில் பொருத்திய பிளேட்டும் ஸ்க்ருவும்தான் இப்பவும் இருக்கு... எலும்பு கிடையாது.

என் தம்பி ராஜ்தூத் வாங்கினான். அதை நான் ஓட்டும்போது மறுபடியும் அடிபட்டது. கொஞ்சநாள் வண்டி ஓட்டாம இருந்தேன். தேவைப்பட்டா செல்ஃப் ஸ்டார்ட் இருக்கிற வண்டியை மட்டும் ஓட்டிக்கிட்டிருந்தேன்..." - விவரிக்கிற வித்யாவுக்கு, ஹார்லி டேவிட்சன், செல்லமான கதை சுவாரஸ்யமானது.

"ஐ.டி கம்பெனியில வேலை பார்த்துட்டிருந்தேன். வெள்ளிக்கிழமைகள்ல நைட் ஷிஃப்ட் இருக்கும். என் ஃப்ரெண்ட்ஸ் சிலர்கிட்ட பைக் இருக்கும். நைட் ஷிஃப்ட் முடிச்சுட்டு 'இசிஆர்'ல லாங் ரைடு போவோம். அது ரொம்பப் பிடிச்சிருந்தது.

தனியா பைக் ஓட்டும்போது, ஒரு பொண்ணு பெரிய வண்டியை ஓட்டறதாவதுன்னு என்னை ஓவர்டேக் பண்றது, கட் கொடுக்கிறதுன்னு பசங்க நிறைய பண்ணியிருக்காங்க. இயல்பிலேயே நான் கொஞ்சம் குண்டு வேற. கிண்டல், கேலிகளுக்குப் பஞ்சமே இருக்காது. நான் அதுக்கெல்லாம் பயப்படவும் மாட்டேன்; கண்டுக்கவும் மாட்டேன். என் மனசெல்லாம் பைக்கை ரசிச்சு ஓட்டறதுலதான் இருக்கும்.

ரெண்டு வருஷத்துக்கு முன்னாடிதான் எனக்கு ஹார்லி டேவிட்சன் வண்டியைப் பத்தி தெரியவந்தது. ஹார்லி டேவிட்சன், நம்ம மாருதி 800 காருக்கு இணையான சக்திகொண்டது. 750 சிசி. மிகச்சமீபத்துலதான் அந்த வண்டியை வாங்கணும்கிற ஆசை வந்தது. டெஸ்ட் டிரைவ் பண்ணிப் பார்த்ததும், ரொம்பப் பிடிச்சுப் போச்சு. வாங்கிட்டேன். வீட்ல எதிர்ப்பு இருந்தாலும், என் தைரியத்தை என்கரேஜ்






வித்யா ஸ்ரீனிவாசன்

# வண்டி ஓட்டிப் பாருங்க... வாழ்க்கையே மாறும்!

பண்ணாங்க. 'சரி ஓட்டு... ஆனா, சேஃபா இரு...'ன்னு சொன்னாங்க. 180 கிலோமீட்டர் வேகத்தைத் தொட்டிருக்கேன். வண்டியோட வெயிட்டே 250 கிலோ இருக்கும். 0 - 100 கிலோமீட்டர் பவரை 3 - 4 செகண்ட்ஸ்ல அடைய முடியும். இந்த வண்டியை அவ்வளவு ஸ்பீடாதான் ஓட்டியாகணும். அதுக்கான ஹெல்மெட், ஜாக்கெட் எல்லாம் போட்டுக்கிட்டுப் பாதுகாப்பாதான் ஓட்டுவேன். மத்தவங்களுக்குத் தொந்தரவு இருக்கக்கூடாதுன்னு ஹைவேஸ்ல, அதிகாலை 4 மணிக்குத்தான் ஓட்டுவேன்..." என்று வியக்க வைக்கிறார்.

''பைக் ஓட்டறபோது என் மனநிலை ரொம்ப வித்தியாசமா இருக்கும். என்னையே நான் நிறைய கேள்விகள் கேட்டுப்பேன். நிறைய நல்ல முடிவுகளை என்னால எடுக்க முடியும். அதிகாலையில கடற்கரை சாலையில இயற்கையை ரசிச்சபடி, பறவைகளோட சத்தத்தைக் கேட்டுக்கிட்டே வண்டி ஓட்டற அந்த அனுபவம் வார்த்தைகளால வர்ணிக்க முடியாதது.

பைக் ஓட்டும்போது நூற்றுக்கணக்கான பைக்கர்ஸை சந்திச்சிருக்கேன். என் ஆர்வத்தை எல்லாரும் என்கரேஜ் பண்ணுவாங்க. அப்பல்லாம் அவங்ககிட்ட 'என்னைப் பாராட்ட றீங்க சரி... நீங்க ஏன் உங்க மனைவிக்கோ, அக்கா, தங்கைக்கோ பைக் ஓட்டக் கத்துக் கொடுக்கக்கூடாது'ன்னு கேட்பேன். சிலர் 'அவங்க பயப்படறாங்க'ன்னு சொல்வாங்க. சிலர், 'அட ஆமாம்ல... ட்ரை பண்றோம்'னு சொல்வாங்க.

'சின்ன வயசுல என் அண்ணனோட பைக்கை ஓட்டியிருக்கேன். ரெண்டாவது கியர் வரைக்கும் போயிருக்கேன். அப்புறம் அப்படியே விட்டுட்டேன்'னு சொல்ற பெண்களை நிறைய பார்க்கிறேன். 'வாங்க, நான் சொல்லித்தர்றேன். விமன் பைக்கர்ஸ் கிளப் ஆரம்பிக்கலாம்'னு கூப்பிட்டா யோசிக்கிறாங்க. 'விழுந்துடுவோமோ... அடிபட்டுடுமோ... அதனால தழும்பாயிடுமோ... கல்யாணமாகிறதுல பிரச்னைகள் வருமோ'ன்னு எல்லாம் யோசிக்கிறாங்க. ஆர்வமிருந்தும் தயக்கம் காரணமா யோசிக்கிற யாரும், ஒருவாட்டி ஓட்டிப் பார்த்துட்டாங்கன்னா விடமாட்டாங்கன்னு நம்பறேன்..." - நம்பிக்கை அளிப்பவர், தனது பைக்குக்குச் செல்லப் பெயர் வைக்கிற அளவுக்கு சென்டிமென்டல்!

'மார்லி அண்ட் மீ'னு ஒரு ஆங்கிலப் படம் வந்தது. ஹீரோவுக்கும், அவனோட நாய்க்குமான அன்பைப் பத்தின படம். அந்த நாயால ஹீரோவுக்குக் கல்யாண வாழ்க்கையே முறிஞ்சுபோகிற அளவுக்குப் பிரச்னைகள் வரும். ஆனாலும், அவன் அந்த நாயை விட்டுக் கொடுக்க மாட்டான். என் வண்டியும் எனக்கு அப்படித்தான். யார் என்ன சொன்னாலும், என்ன பிரச்னை வந்தாலும் இந்த வண்டியை என்கூடவே



▲ லாங் ரைடு பைக் நண்பர்களுடன்...

வெச்சுக்கணும்னு நினைக்கிறேன். அந்தப் படத்தோட தாக்கத்துலதான் என் வண்டிக்கு 'மார்லி'னு பேர் வெச்சிருக்கேன். கல்யாணம் பண்ணிக்கிட்டா என் சுதந்திரம் போயிடும்னு ஆரம்பத்துலேருந்தே அதுல எனக்கு விருப்பம் இருந்ததில்லை. இப்படியே வாழத்தான் ஆசை..." என்பவர்... கராஜ் வைப்பதையும், பைக்குகளை மாற்றி அமைத்துக் கொடுப்பதையும், பைக் ஓட்டுவதில் ஆர்வமுள்ள பெண்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்கிற கவுன்சலிங் கொடுப்பதையும் எதிர்காலத் திட்டங்களாக வைத்திருக்கிறார்.

பயணங்கள் முடிவதில்லை!

  செ.சங்கீதா   படம்: க.மணிவண்ணன்

# தாய்மொழி அறிவே நம்மைக் காக்கும்!

வண்ணதாசன் சாகித்ய அகாடமி விருது பெற்ற அதே நாளில்தான் கோவையைச் சேர்ந்த சரோஜா சுந்தரராஜனுக்கும் சாகித்ய அகாடமியின் 'பாஷா சம்மன்' விருது வழங்கப்பட்டது. இந்தியாவில் உள்ள அங்கீகரிக்கப்படாத மொழிகளில் (Unrecognized language) எழுதும் படைப்பாளிகளின் பங்களிப்பைப் பாராட்டி அளிக்கப்படும் சிறப்பு விருது இது. இந்த ஆண்டு, சரோஜா சுந்தரராஜன் எழுதிய 'யோகேந்த்ருன் மொன்னு ஸிங்காரு லாடுன்' என்ற சௌராஷ்ட்ர மொழி புத்தகத்துக்கு இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது. 'யோகேந்ர தலைவர்களின் மனதில் எழுந்த அழகிய அலைகள்' என்பது இதன் பொருள்.

1940-ம் ஆண்டு மதுரையில் பிறந்த சரோஜாவுக்கு எட்டாம் வகுப்பு முடித்ததுமே திருமணம். தனியார் கல்வி நிலையத்தில் பத்தாம் வகுப்பு படித்தார் சரோஜா. பிறகு, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் புலவர் பட்டம் பெற்ற இவர், இந்தி மொழியிலும் புலமை பெற்றிருக்கிறார். அத்தனை சிறப்புகளுக்கும் காரணம் கணவர் சுந்தரராஜன். அவர் இதய நோயால் பாதிக்கப்பட்டிருந்தபோதும், தன் மனைவியைத் தொடர்ந்து படிக்கவைத்து ஊக்கப்படுத்த, 'சௌராஷ்ட்ரா கவி'யாகவும் உருவானார் சரோஜா.



1975-ம் ஆண்டு முதல், இவர் எழுதிய கவிதைகள் 'பாநாபிமானி', 'சௌராஷ்ட்ரா டைம்' ஆகிய இதழ்களில் வெளியானதோடு, நூல் வடிவமும் பெற்றுள்ளன. 'தேவிமாநாத்ம்யம்' என்கிற இவரது நூலில் பராசக்தியின் படைப்பு ரகசியம் விவரிக்கப்பட்டுள்ளது. கந்தசஷ்டி கவசம், ஹனுமான் சாலிஷா ஆகியவற்றையும் சௌராஷ்ட்ர மொழியில் மொழிபெயர்த்துள்ளார் சரோஜா.

2012-ம் ஆண்டு வெளியான 'யோகேந்த்ருன் மொன்னு ஸிங்காரு லாடுன்' நூலில் ஆதிசங்கரர், நடன கோபால நாயகி சுவாமிகள், சத்யசாயி பாபா ஆகிய மூவரையும் யோகத்தின் தலைவர்களாக எடுத்துக்கொண்டு, அவர்கள் மனதில் எழுந்த அலைகளைப் பாடல்களாக இயற்றியுள்ளார். நடன கோபால் ஒருபுறமும் சாயிபாபா ஒருபுறமும் பாடுவது போல தமிழிலும் ஒரு நூல் எழுதிவருகிறார்.

"அழிந்துகொண்டே வரும் எங்கள் சௌராஷ்ட்ரா மொழியில் நிறைய கருத்துகளும் உபதேசங்களும் புதைந்துள்ளன. அவற்றை உலகுக்கு அளிக்க வேண்டும் என்பதே என் ஆசை. என்னால் முடிந்தவரை, சபாக்களின் மூலமாகவும், உறவினர் வீடுகளுக்குச் சென்று அங்குள்ள குழந்தைகளுக்கும் சௌராஷ்ட்ர மொழியைக் கற்பித்து வருகிறேன். எல்லோருமே தாய்மொழியை நன்கு கற்று அதில் உள்ள புதையல்களை வெளிக்கொணர வேண்டும். மூலிகை மருத்துவம், பண்பாடு, வீரம் ஆகியவற்றை நம் மொழிகள் மூலமே அடைய முடியும்" என்கிறார் சரோஜா!

www.vikatan.com

• முகங்கள் ஆர்.வைதேகி படங்கள்: ப.சரவணகுமார்

கட்டுப்பாடுகள் நிறைந்த குடும்பத்தில் பிறந்தாலும், தடைகளை மீறி தன் விருப்பத்துக்கேற்ப உயர் கல்வியை முடித்தவர்... கணவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்த பெண்கள் வித்தியாசமாகப் பார்க்கப்பட்ட எழுபதுகளில் துணிந்து தனிமனுஷியாக நின்று சாதித்துக் காட்டியவர்... எந்தப் பிரகடனமும் இல்லாமல் உண்மையான பெண்ணியவாதியாக வாழ்ந்துவருபவர் என வத்ஸலா ஒரு வித்தியாசமான மனுஷி!

“தஞ்சாவூர் ஐயங்கார் குடும்பத்தில் பிறந்தவள். அந்தக் காலகட்டத்திலேயே ஓரளவு பெண்ணியவாதியாக இருந்தவர் என் அம்மா. நிறைய விஷயங்களைப் பற்றிக் கேள்வி கேட்பார். அதுதான் எனக்கான வித்தாகவும் இருந்திருக்கும். ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறையின் தோள் மேல் ஏறித்தானே போகிறது? என் அப்பா ரொம்பவும் நல்லவர். ஆனாலும், தோண்டித்துருவிப் பார்த்தால், அவரும் அந்தக் காலகட்டத்து சராசரி ஆணைப் போல ஆணாதிக்கம் உள்ளவராகவே இருந்தது பல வருடங்களுக்குப் பிறகுதான் புரிந்தது.

பெண்ணியச் சிந்தனைக்கான விதை என் அம்மாவிடமிருந்து எனக்குள் வந்திருந்தாலும், அவருக்கிருந்த தைரியமும் தன்னம்பிக்கையும், நான் வளர்ந்த விதம் காரணமாக எனக்கு இல்லை. திருமணமாகி, குழந்தை பெற்றுப் பல வருடங்களைக் கடந்தபோதும்கூட நான் என்னை மக்கு என்றே நம்பிக் கொண்டிருந்தேன்.

புத்திசாலிக்கு இங்கே சொல்லப்படுகிற விளக்கம் என்ன? சட்டென ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்; நிறைய ஞாபகசக்தி இருக்க வேண்டும்... இந்த இரண்டும்தான் புத்திசாலித்தனம் என உலகம் நம்பிக்கொண்டிருக்கிறது. என் அம்மாவும் அப்படித்தான் நினைத்தார். இந்த இரண்டிலும் நான் தோற்றுவிடுவேன். எனக்கு எந்த விஷயத்தையும் புரிந்து கொள்ள சற்று நேரம் ஆகும். என் உணர்வுகளைப் பாதிக்கிற விஷயங்கள், அது சந்தோஷமோ, துக்கமோ... அப்படியே ஞாபகம் இருக்கும். ஆனால், அறிவியலில் ஒரு ஃபார்முலாவை என்னால் படித்தவுடன் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், அதில் எந்த உணர்வும் இல்லை. உலகம் எதை புத்திசாலித்தனம் என நம்பியதோ, அதன்படியே இருந்தவன் என் அண்ணன். அந்த வகையில் எங்கள் வீட்டிலும் அண்ணன் என்னைவிட ஸ்பெஷலாகவே நடத்தப்பட்டிருக்கிறான்.

மும்பையில் தமிழ்வழிப் பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்பு வரை படித்தேன். பிறகு, என் அப்பாவுக்கு குஜராத்துக்கு மாற்றலானது. அங்கே தமிழ்வழிப் பள்ளிக்கூடம் இல்லை. என் அண்ணாவைச் சென்னைக்கு அனுப்பி, பாட்டி வீட்டில் தங்கவைத்துப் படிக்க அனுமதித்தார். என்னைப் பக்கத்திலேயே உள்ள குஜராத்தி பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். ஐந்தாவது படிக்க வேண்டிய என்னை நான்காம் வகுப்பில்தான் சேர்த்துக்கொள்ள முடியும் என்றார்கள். ஹெச்.எம்-மிடம் போய் நானே பேசி, என்னை ஐந்தாவது வகுப்பில் சேர்த்துவிடச் சொன்னேன். எல்லாம் சரியானபோது வீடு மாறினார்கள். பள்ளிக்கூடம், வீட்டிலிருந்து மிகவும் தொலைவில் இருந்தது. அடிக்கடி உடம்புக்கு முடியாமல் போனது. படிப்பில் இருந்து நிறுத்தினார்கள்.

அப்போதெல்லாம் குழந்தைகளின் படிப்பு முக்கியமான விஷயமாகவே பெற்றோருக்குத் தோன்றாது. அதிலும் பெண் குழந்தைகளின்





www.vikatan.com



# கண்ணுக்குள் சற்று பயணித்து..!

படிப்பெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. அடுத்த மூன்று வருடங்கள் பள்ளிக்கூடமே போகவில்லை. வீட்டில் தமிழ்ப் பத்திரிகைகள் நிறைய படிப்பேன். அப்படித்தான் தமிழறிவை வளர்த்துக்கொண்டேன். லட்சுமி, கல்கி, சூடாமணி, ராஜம் கிருஷ்ணன் கதைகளை எல்லாம் படிக்க ஆரம்பித்தேன். ஆங்கிலம் மட்டும் தனியே கற்றுக்கொடுத்தார்கள். கல்யாண மார்க்கெட்டில் மதிப்பு ஏறும் என்பது அதன் காரணமாக இருந்திருக்கலாம். 'பொம்பளைப் புள்ளையை ஸ்கூலுக்கு அனுப்பாம வெச்சிருக்கிறது தப்பு' என அப்பாவின் நண்பர் ஒருவர் சொன்னதால், மூன்று வருட இடைவெளிக்குப் பின் மறுபடி என்னை குஜராத்திவழிப் பள்ளியில் சேர்த்தார்கள். மிகவும் கஷ்டப்பட்டுப் படித்தேன்.

ஸ்கூல் ஃபைனல் முடித்தேன். காலேஜ் படிக்க விரும்பியபோது ஃபர்ஸ்ட் கிளாஸில் பாஸ் செய்தால் காலேஜ் போகலாம் என கண்டிஷன் போட்டார் அப்பா. அது மாதிரியான கண்டிஷன் என் அண்ணனுக்குச் சொல்லப்படவில்லை. போராட்டங்களுக்குப் பிறகு டபிள்யூ.சி.சி கல்லூரியில் சேர்ந்தேன். அந்தக் கல்லூரியில் எனக்குக் கிடைத்த சுதந்திரமும் நட்பும் கிறிஸ்தவ மதச் சூழலும் என்னை நிறைய சிந்திக்கவைத்தன. அந்த மதத்தின் நன்றி சொல்கிற தன்மையும் மன்னிக்கிற மனப்பான்மையும் எனக்குப் பிடித்தது. எங்கள் வீட்டில் பக்தி என்பது

"ஒருநாள் என்னுடைய திறமையைப் பார்த்து வியந்த என் தோழி ஹேமா, 'நீ அதிபுத்திசாலி...' எனப் பாராட்டும்வரைகூட 'நான் மக்கு' என்றே நம்பிக்கொண்டிருந்தேன்!"

மிதமாகவே இருக்கும். தினசரி கோயிலுக்குப் போகும் பழக்கமெல்லாம் இருந்ததில்லை. ஆனால், கிறிஸ்தவர்கள் தன் மதத்தின் மீது வைத்திருந்த பற்று, நான் என் மதத்தைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ளவும், எல்லா மதங்களும் அடிப்படையில் நல்ல விஷயங்களைத்தான் வலியுறுத்துகின்றன என்பதைப் புரிந்துகொள்ளவும் உதவியது.

கல்லூரியில் பேச்சுப் போட்டி, நாடகம், விவாதம் எல்லாவற்றிலும் பங்கேற்பேன். எதையும் விட்டுவைக்கமாட்டேன். அந்த ஆர்வத்தில் படிப்பில் கோட்டைவிட்டு, இரண்டாம் வகுப்பில் தான் பாஸ் செய்ய முடிந்தது. குற்ற உணர்வு தாங்கமுடியவில்லை. அதை அவமானச் சின்னமாக உணர்ந்தேன். இதை எப்படியாவது சரிசெய்ய வேண்டும் என எம்.எஸ்ஸி படித்தேன். 'இதுவரை படிக்கவைத்ததே பெரிது... அடுத்து கல்யாணம்தான்' எனத் தெரிந்ததால் மேலே படிக்கவோ, வேலைக்குப் போகவோ நான் ஆசைப்படவில்லை.

பிறகு திருமணம்... திருமண வாழ்க்கை சரியாக அமையவில்லை. நான் வேலைக்கும் போகக்கூடாது... அதேநேரம் குடும்பச் செலவுகளுக்குப் பணமும் தருவதில்லை. இத்தனைக்கும் நல்ல சம்பளம்தான். ஆனாலும், தட்டுப்பாடு. அந்தத் தட்டுப்பாடு வேண்டுமென்றே உருவாக்கப்பட்டது என்பது பிறகுதான் புரிந்தது.

என் கவிதை ஒன்றில் எழுதியிருப்பேன்...

**'அவன் அடித்தானா,**

***குடித்தானா?***

***இன்னொன்று வைத்திருந்தானா..?***

**இப்படி எந்தக் காரணங்களும் இல்லை.**

**ஆனால்...'**

என வேறு காரணங்களைக் குறிப்பிட்டிருப்பேன். இதைத் தவிர பல பிரச்னைகள். தன்மானத்துடன் வாழமுடியாத ஒரு நிலை. உண்மையான அன்பினால் எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துவிடலாம் என எண்ணி மூன்று வருடங்கள் பொறுமையாக எல்லாவற்றையும் சகித்துக்கொண்டேன். அதற்குள் ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. கணவனுடன் இருந்தால் என் குழந்தைக்குச் சரியான கல்வியைத் தர முடியாது என உணர்ந்தேன். வெளியே வந்தேன்.

என் வாழ்க்கையின் இரண்டாம் பகுதி சிங்கிள் உமனுக்கான சவால்களுடன் ஆரம்பித்தது. பெண்ணாக இருந்தது ஒரு சிக்கல் என்றால், விவாகரத்தானவள் என்பது இன்னொரு சவாலாக இருந்தது. கணவரை இழந்த பெண் மீது பரிதாபம் கிடைக்கும் (மரியாதை கிடைக்காது என்றாலும்). அதுவே விவாகரத்தானவள் என்றால் அந்தப் பார்வை மாறுகிறது.

70-களில் இந்தியாவில் சாஃப்ட்வேர் துறை முதலடி பதித்த காலத்தில் கம்ப்யூட்டர் புரோகிராமராக வேலைக்குச் சேர்ந்தேன். வீட்டுக்கும் அலுவலகத்துக்கும் பல முறை (இரவிலும்கூட) போக வேண்டி இருந்ததால் 30 வயதில் சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டேன்; பிறகு ஸ்கூட்டர்.

அப்போது பெண்களுக்கு அதுபோன்ற வேலைகளுக்கு வரத் தகுதி கிடையாது என்கிற பொதுப் பார்வை இருந்தது. ஆகவே, மூளையை உபயோகித்துச் செய்கிற வேலைகளை என்னால் செய்ய முடியாது என்கிற முன்தீர்மானத்துடன் தொடக்கத்தில் எனக்கு அவற்றைக் கொடுக்க மறுத்தார்கள். 'கீ பன்ச்' செய்வது போன்ற ரொட்டீன் வேலைகளையே கொடுத்தார்கள். அதையெல்லாம் கடந்து முன்னேறினேன். பல தடைகளை மீறி, என்னுடைய 45-வது வயதில் கம்ப்யூட்டர் துறையில் எம்.எஸ் (ஆராய்ச்சிப் பட்டம்) முடித்தேன்.

ஆண் பெண் உறவை நட்பாகப் பார்க்கிற மனோபாவம் இன்னும் முழுமையாக வரவில்லை. ஆண்களால் மனைவியின் தோழியுடன் நன்றாகப் பேச முடிகிறது, தோழனின் மனைவியுடன் நன்றாகப் பேச முடிகிறது. அதுவே நேரடியாக ஒரு பெண்ணுடன் ஓர் ஆணால் அப்படிப் பேசிப் பழக முடிவதில்லை. அதிலும் விவாகரத்தானவள் என்றால் அது கூடுதல் சிக்கல்!

பெண் வேலைக்கு வருகிறாள் என்றால் பொழுதுபோக்கவோ, பாக்கெட் மணிக்காகவோ என்று அர்த்தப்படுத்திக் கொள்கிறார்கள். அவளது சம்பாத்தியத்

திலும் குடும்பம் நடக்கும் என்பதை ஆண்களால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

என் பெண் குழந்தைக்கு அப்பா பக்கத்தில் இருந்திருந் தால் சமுதாயத்தில் கிடைத் திருக்கக்கூடிய மதிப்பையும் சேர்த்துக் கொடுக்க வேண்டிய கட்டாயம் எனக்கு. கடினமாக உழைத்தேன். ஒருநாள் என்னுடைய திறமையைப் பார்த்து வியந்த சக பெண் ஊழியரும் என் தோழியுமான ஹேமா, 'நீ அதிபுத்திசாலி...' எனப் பாராட்டும்வரைகூட 'நான் மக்கு' என்றே நம்பிக் கொண்டிருந்தேன். பாராட்டிய தோடு நிறுத்திக்கொள்ளாமல், அதை எனக்கு அவர் புரியவும் வைத்தார். அன்றிலிருந்து எதையுமே ஒருமுறை படித்தாலே எனக்குப் புரியத் தொடங்கியது!


▲ வத்ஸலா

என் வாழ்க்கையின் அடுத்த திருப்புமுனை மற்றொரு தோழியான வ.கீதாவின் மூலம் நிகழ்ந்தது. மார்க்சியச் சிந்தனையாளரான அவர், பெரியாரைப் பற்றியும் எழுதியிருக் கிறார். பெண்ணியம் பற்றிய தெளிவான புரிதல் கொண்டவர். 1990-ல் கோழிக்கோட்டில் நடந்த அனைத்திந்திய பெண்கள் மாநாட்டில் நானும் ஹேமாவும் கீதாவின் உந்துதலால் பங்கேற்றோம். ஆயிரக்கணக்கான பெண்களைச் சந்தித்தேன். அத்தனை பேருக்கும் பிரச்னைகள். காரணம் ஒன்றே ஒன்றுதான் - அவர்கள் பெண்கள்!

கீதாவின் ஊக்கத்தின்பேரில் எழுதத் தொடங்கினேன். 'வட்டத்துள்' என்கிற என் முதல் நாவல், என் அம்மா காலத்து மேல்தட்டுப் பெண்களின் வாழ்க்கையைப் பற்றியது. ஆணாதிக்க உலகில் அவர்கள் சந்தித்த பிரச்னைகளைப் பற்றிய நாவல் அது. தொடர்ந்து நிறைய கவிதைகள், சிறுகதைகள் எழுத ஆரம்பித்தேன்.

கணையாழியில் வெளிவந்த என்னுடைய 'என்று' கவிதையைப் படித்துவிட்டுப் பாராட்டிய எழுத்தாளர் சுஜாதா, அப்பத்திரி கையின் 'கடைசிப் பக்க'த்திலும் தன் 'சிறந்த கவிதைகள்' ஆல்பத்தில் இடம் பிடித்த கவிதை எனக் குறிப்பிட்டிருந்தார். என்னுடைய கவிதைத் தொகுதி 'சுயம்' 2000-ம் ஆண்டில் வெளியானது. முதல் நாவல் 'வட்டத்துள்' 2006-ல் வெளியாகி திருப்பூர் தமிழ்ச்சங்க விருது பெற்றது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்போது 'கண்ணுக்குள் சற்று பயணித்து' நாவல் வெளிவந்திருக்கிறது. இது என் வாழ்க்கைக் கதையை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டது. ஆனால், சுயசரிதை அல்ல. அடுத்து சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிடும் முயற்சியில் இருக்கிறேன்...."

என்கிற வருக்கு எழுத்தாளர் சூடாமணியின் சந்திப்பு காலத்துக்கும் நினைவில் நிலைத்திருக்கக்கூடிய அனுபவமாக நிறைந்திருக் கிறது. பிரபா ஸ்ரீதேவனின் ஆங்கில மொழிபெயர்ப்பில் வெளியாகவிருக்கும் சூடாமணியின் கதைகளின் இரண்டாவது தொகுதியின் தயாரிப்பில் இவரது பங்கும் உள்ளது.

## வத்ஸலாவின் பார்வையில் எது பெண்ணியம்?

"காலங்காலமாக செய்யப்பட்ட மூளைச் சலவையின் விளைவாக ஆண், பெண் இருவர் மனதிலும் ஆணாதிக்கச் சிந்தனை உள்ளது. அதன் காரணமாக பொதுவாக பெண்ணின் மேல் அதிகாரம் செலுத்த தனக்கு உரிமை இருக்கிறதென்று ஆண் நம்புகிறான். அதே காரணத்தால் பெண் தன் சுயமதிப்பை இழந்து ஆணின் ஒப்புதலுக்காக ஏங்குகிறாள். இதைப் புரிந்துகொள்வதும் மாற்ற முயல்வதும்தான் என் பார்வையில் பெண்ணியம்" என்கிறவர், திருமண உறவிலிருந்து வெளியே வருகிற பெண்களுக்கு அழுத்தமான செய்தி ஒன்றும் சொல்கிறார்.

"சகித்துக்கொள்ள முடியாத நிலையில்தான் பெண்கள் திருமண பந்தத்தில் இருந்து வெளியே வருகிறார்கள். ஆனால், அந்த உறவு தோற்றுப் போனதாக அவர்கள் யாரும் நினைப்பதில்லை. மாறாக, தாமே தோற்றுவிட்டதாகக் குற்ற உணர்வுகொள்கிறார்கள். நானும்கூட அப்படித்தான் என்னைத் தோற்றவளாக நினைத்துக்கொண்டிருந்தேன். வாழ்க்கையில் ஜெயித்த பிறகுதான் நான் தோற்றுவிட்டதாக நம்பவைக்கப்பட்டதை உணர்ந்தேன்!" ●

• பதிவுகள் பொன்.விமலா

மாடலிங், வெட்டிங், ட்ராவல், ஃபுட், வைல்ட்லைஃப் என போட்டோகிராஃபியில் வெரைட்டிகள் பல இருந்தாலும், தன்னை தனியொரு பிரிவுக்குள் சுருக்கிக்கொள்ளாமல், தன் ஆர்வத்தை சகல திசைகளிலும் செலுத்திக்கொண்டிருக்கும் சௌம்யா, 23 வயது தைரியசாலிப் பெண்!

"பிறந்ததும் வளர்ந்ததும் சென்னைதான். எம்.ஓ.பி வைஷ்ணவ் காலேஜ்ல விஸ்காம் படிச்சேன். விளம்பரத்துறையில் பயிற்சி எடுத்தேன். பிறகு,'புதுயுகம்' தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பில் உதவிப் பொறுப்பாளராகவும், நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் செயல்பட்டேன்" என்று அறிமுகம் சொல்கிற சௌம்யா, தனது கேமரா தருணங்களையும் விவரிக்கிறார்.












www.vikatan.com










▼ சௌம்யா



# கையில் ஏந்தும் நிழல் உலகம்!

கேமரா பெண் சௌம்யா















''அப்பா தேர்ந்த புகைப்படக் கலைஞர். அம்மா மேக்கப் ஆர்ட்டிஸ்ட். அப்பாவின் மாடல்களுக்கு அம்மாதான் மேக்கப் போட்டுவிடுவாங்க. அப்பாவோட 35 ஆண்டுகால அனுபவப் பயணம் எனக்குப் பேருதவியா அமைந்தது. அவரது 'நிழல் ஸ்டுடியோ'வில் நானும் இணைந்தேன். இப்போ தொழில் ரீதியாக நாடு கடந்தும் பயணிக்கிறேன்'' என்கிற சௌம்யா, 'நேஷனல் ஜியோகிராஃபிக்' சேனல் நடத்திய சிறந்த புகைப்படக் கலைஞர்களுக்கான போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 இந்திய புகைப்படக் கலைஞர்களில் ஒருவர். அந்த அனுபவம் இவருக்கு நிறையவே கற்றுக் கொடுத்ததாம்!


"ஒருமுறை காசிக்குப் போயிருந்தேன். பெண் என்கிற காரணத்தால், பிணங்கள் எரிக்கப்படுவதை புகைப்படம் எடுக்க என்னை அனுமதிக்கவில்லை. பெரிய போராட்டத்துக்குப் பிறகுதான் படம் எடுக்க முடிஞ்சது. பிணம் எரியும்போது, திடீரென பிணத்தோட கால், மேலே தூக்கிக்கொள்ளும். அதைப் பார்த்து நான் பயந்துடுவேன்னு எல்லாரும் நினைச்சாங்க. என்னைப் பொறுத்தவரைக்கும் இதுல பயப்பட எதுவும் இல்ல. கேமரா கண்ணோடு பார்த்தோம்னா பிணம்கூட











அழகுதான்" - வித்தியாச அனுபவம் தெரிகிறது சௌம்யாவின் பேச்சில்!

"புகைப்படக்கலையில் காத்திருப்பும் தைரியமும் மிக முக்கியம். கல்யாணத்துக்கு போட்டோ எடுக்கப் போனா, எல்லாரும் பிஸியாவே இருப்பாங்க. 'கொஞ்சம் தள்ளுங்க'ன்னு சொல்லிட்டு, க்ளிக் பண்ண முடியாது. பெரும்பாலும், திருமணங்களில் எடுக்கப்படுகிற கேண்டிட் புகைப்படங்கள்தான் யதார்த்தமாக அமையும். அதற்காக மெனக்கிடுவதும் ஒரு சுகம்தான்.

ட்ராவல் போட்டோகிராஃபியிலும் புதுப்புதுப் பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். இப்படி, சவால்களைச் சந்தித்து, ஜெயிப்பது என்பது ஸ்வெட்டர் இல்லாமல் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்குச் சமம்! ஆனால், படத்தைப் பார்க்கும்போகும் கிடைக்கும் மகிழ்ச்சி அலாதி."

- கண்கள் மிளிர உதாரணம் சொல்கிறார், கேமரா கலைஞர் சௌம்யா!

● **யதார்த்தம்** பொன்.விமலா படங்கள் உதவி: வள்ளியூர் குணா

# களத்தில் ஒரு காதல்!



▾ கோபாலகிருஷ்ணன் - திவ்யா

"காலைக்கடனை தவறாமல் கழிப்பது அவசியம்னு சொல்றோம். நாம கழிக்குற கடனெல்லாம் எங்கே போகுது? அதையெல்லாம் யார் அள்ளுகிறார்கள்? இதை எல்லாம் எப்போதாவது யோசித்திருக்கிறோமா?

மலம் அள்ளும் நேரத்தில் மூக்கைப் பொத்தாமல் முகத்தைச் சுளிக்காமல் இரண்டு நிமிடங்கள் வேடிக்கை பார்க்க முடிகிறதா? மனிதன் மலத்தை மனிதன் அள்ளும் நிலைதான் இங்கே தொடர்கிறது. இப்படி மலம் அள்ளும் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது விஷவாயு தாக்கி இறந்த தொழிலாளர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கான நியாயங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமான போராட்ட வடிவில்தான் தொடர்கிறதே தவிர, நியாயம் கிடைத்தபாடில்லை.

'ஒவ்வொரு பிரச்னைக்கும் வாய் நிறைய பேசுகிறோம். ஆனால், களத்தில் இறங்கி இம்மாதிரியான தோழர்களுக்கு நாம் என்ன செய்தோம்?' என்கிற சொரணை வந்த நேரத்தில்தான் அவர்களுக்காக ஆவணப்படம் எடுக்க வேண்டும் என்கிற எண்ணம் உதித்தது..."

- பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள 'கக்கூஸ்' ஆவணப்படத்தின் இயக்குநராகக் களத்தில் இறங்கிப் பேசுகிறார் திவ்யா. வழக்கறிஞர், சமூகச் செயல்பாட்டாளர் என பல முகங்கள் திவ்யாவுக்கு. போராட்டக் களங்களில் இறங்கி விட்டால் எதையும் ஒருகை பார்த்து விடுவோம் என்கிற திவ்யாவைப் போலவேதான், அவரின் காதல் இணையர் கோபாலகிருஷ்ணனும்!

காதல் திருமணம் செய்து கொண்ட இருவர் பொதுவாழ்வில்





ஈடுபடுவதையும், பொதுவாழ்வில் ஈடுபட்ட இருவர் காதல் திருமணம் செய்துகொண்டு தொடர்ந்து களப்பணியில் ஈடுபடுவதையும் பார்த்திருப்போம். இந்த இரண்டுமே இருவேறு ரகம். ஒரே கருத்துடைய இருவர் வாழ்க்கைப் பயணத்தில் இணையும்போது அந்தப் பயணம் செல்லும் பாதை, எத்தனை துயர்வரினும் வழிநெடுகிலும் அன்பை மட்டுமே தன்வசம் வைத்திருக்கும். அந்த வகையில் திவ்யா - கோபாலகிருஷ்ணனின் காதல் முதல் கல்யாணம் வரையிலான பந்தம் அழகானது. இனி அவர்களே பேசக் கேட்போம்.

“அகில இந்திய மாணவர் கழகத்தின் மதுரை உறுப்பினராக நானும், காஞ்சிபுரம் உறுப்பினராகத் தோழர் கோபாலகிருஷ்ணனும் இருந்தோம். 2011-ல் சங்கத்துக்கான மாநிலக் கூட்டம் நடந்தப்பதான் நாங்க சந்திச்சோம். அவரைச் சந்திக்கும் முன்பு என் வாழ்க்கைப் பயணம் ஒரு சிறிய வட்டத்துக்குள் சுருங்கியிருந்ததா... இல்லை அந்தச் சந்திப்பு என் வட்டத்தை பெரியதாக்கியாதான்னு சரியா சொல்ல முடியலை!

எனக்குச் சொந்த ஊர் அருப்புக்கோட்டை. எங்க அப்பா பஞ்சு மில் தொழிலாளி. பஞ்சு மில்லுக்குச் சொந்தமான பள்ளியில படிச்சேன். அந்த மில்லுக்குச் சொந்தமான குடியிருப்புப் பகுதியில்தான் எங்க வீடு இருந்தது. அது ரொம்ப சிறிய பகுதி. அங்க இருந்த சூழல் ஒரு கிராமத்தில் வளர்ந்த மாதிரியான அனுபவத்தைக்கூட எனக்குக் கொடுக்கலை. அதற்கும் கீழான வாழ்க்கைமுறை அது.

பள்ளிக் காலங்களில் வாசிப்பு மீதான ஆர்வம் காரணமாக அம்பேத்கர், பெரியார் புத்தகங்களைப் படிக்கத் தொடங்கி பள்ளிக் காலத்திலேயே கம்யூனிச இயக்கத்தில் உறுப்பினராக இருந்தேன். அதைத் தொடர்ந்து உலக சினிமாக்கள், ஆவணப்படங்கள் பார்ப்பதன் மூலமா, என்னோட நட்பு வட்டமும் அதிகரிச்சது.

நான் அரசு வேலையில சேரணும்கிறது தான் அப்பாவோட கனவா இருந்துச்சு. அதுல எனக்கு உடன்பாடில்லாததால், விஷுவல் கம்யூனிகேஷன் படிச்சேன். அதையும் இரண்டு மாதங்கள்கூட தொடர முடியல. நான் படிச்ச மதுரை, இந்தோ-அமெரிக்கன் கல்லூரியில் அந்த நேரம், மாணவர் போராட்டம் நடந்தது. அந்தப் படிப்பை பாதியில விட்டுட்டு சட்டக் கல்லூரியில சேர்ந்துப் படிக்க ஆரம்பிச்சேன். படிப்பு ஒருபக்கம், கிராமங்களுக்குச் சென்று களப்பணிகள் ஒருபக்கம்னு கல்லூரிக் காலங்களை எனக்கான நாள்களாக முழுமைப் படுத்திக்கிட்டேன். இந்த நேரத்தில்தான் என் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் தவறிட்டாங்க. ஈடுகட்ட முடியாத பேரிழப்பு” - சற்று குரல் தேயும் திவ்யாவை அன்பாக அரவணைத்துப் பேசுகிறார் கோபாலகிருஷ்ணன்.

“சமூகப்பணியின் மீது திவ்யா காட்டுகிற ஆர்வம் எனக்குப் பிடிச்சிருந்தது. காஞ்சிபுரத்துல ‘நோக்கியா’ கம்பெனியில டெக்னீஷியனா வேலை பாத்துட்டு இருந்த நேரம். அறிமுகம் ஆனதில் இருந்தே என்னோடு நல்ல தோழமையோடு மனம்விட்டுப் பேசுவாங்க.

**“எனக்கு மேக்கப் போடுறது பிடிக்காது. கல்யாணத்துக்கு அலங்காரம் பண்ணிக்கணும்னு அவர் வீட்ல சொன்னப்ப என்னால ஏத்துக்க முடியலை...”**

திடீர்னு ஒருநாள் 'என்னைக் கல்யாணம் பண்ணிக்குறீங்களா'ன்னு கேட்டுட்டாங்க. ஆரம்பத்துல பயந்துட்டேன். 'அவங்களுக்கு ஏன் என்னைப் பிடிக்குது'ன்னு யோசிச்சுப் பார்த்தா, அவங்களுக்குப் பிடிச்ச 'வெண்ணிற இரவுகள்' புத்தகத்தை நான் பரிசா கொடுத்திருக்கேன். ரெண்டு பேரோட வாசிப்பும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருந்துச்சு. பேசிப் பேசி, கல்யாணம் பண்ணிக்கலாம்னு முடிவெடுத்து வீட்ல சொன்னப்ப ஒப்புக்கிட்டாங்க. ஆனா, ஒரு சின்ன கண்டிஷன் இருந்துச்சு!" - கோபால் விட்டதில் இருந்து தொடர்கிறார் திவ்யா...

“எனக்கு மேக்கப் போடுறது பிடிக்காது. கல்யாணத்துக்கு அலங்காரம் பண்ணிக்கணும்னு அவர் வீட்ல சொன்னப்ப என்னால ஏத்துக்க முடியலை. ஒருவழியா சம்மதிக்க வெச்சு, சின்ன அரங்கத்துல சீர்திருத்த முறைப்படி திருமணம் செஞ்சுக்கிட்டோம். முக்கியமான உறவினர்கள், நண்பர்கள் மட்டும் கலந்துகிட்டாங்க. 2013-ல் கல்யாணம் நடந்தப்ப கல்லூரியில் படிச்சுட்டு இருந்தேன். அதுக்கப்புறம் கோபால் காஞ்சிபுரத்துல வேலையை விட்டுட்டு மதுரைக்கு வந்துட்டார். கல்யாணத்துக்குப் பிறகான பயணத்தையும் ஒரே வரியில் சொல்லிட முடியாது!”

''அதை நான் சொல்கிறேன்'' என தொடர்ந்தார் கோபால்...“ மதுரைக்கு வந்ததும் மீன் கடை போட்டேன், அதுக்கப்புறம் எல்.ஐ.சி ஏஜென்ட், காளான் மார்க்கெட்டிங், சர்வீஸ் இன்ஜினீயர்னு ஒரு வேலையிலும் நிரந்தரமா இல்லாம இப்போ ஸ்டுடியோ வெச்சிருக்கிறேன். களப்பணியில் முழு நேரமா ஈடுபடணும்கிற எண்ணம் இருந்தாலும், கடனில்லாத குடும்ப நிர்வாகத்துக்கு ரெண்டு பேர்ல ஒருத்தர் வேலை செய்ய வேண்டியது அவசியமா இருக்கு.

இப்ப திவ்யா ஆவணப்படம் சார்ந்த பணிகள்ல ஈடுபட்டிருக்காங்க. நான் மதுரையில் இருக்கேன். மக்களுக்கான பிரச்னைகளை முன்னெடுத்துட்டுப் போகும்போது, குடும்பம் தான் முக்கியம்னு சொல்லி தடுக்காமல் ஆதரவு கொடுப்பதுதான் ஒரு நல்ல இணைக்கு அழகாக இருக்கும்னு நினைக்கிறேன்...” - கோபாலின் அன்பிலும் பேச்சிலும் 'இணை' என்பதன் அர்த்தம், ஈடு இணையில்லாமல் தெரிகிறது!

அன்போடு களப்பணியும் இணைந்தால் ஆனந்தமே!



## என்ன கொடுமை இது..!

திவ்யா இயக்கிய 'கக்கூஸ்' ஆவணப்படம் பிப்ரவரி 26 அன்று சென்னையில் திரையிடப்பட்டது. துப்புரவு பணியாளர்களின் அவலங்களையும் வலிகளையும் பதிவு செய்து, அத்தொழிலாளர்களுக்கு அரசும் சமூகமும் என்ன செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது இந்தப் படம்.

மலம் அள்ளும் தொழிலை இழிவாகப் பார்ப்ப தோடு, அவர்கள் செய்யும் வேலைக்கேற்ற ஊதியமும் கொடுப்பதில்லை. குத்தகைதாரர்களின் கையில் சிக்கி தினக்கூலிக்கு வேலைபார்க்கும் அநீதி நிகழ்ந்துகொண்டிருக்கும் அதே வேளையில், 'இழிவான தொழில்' என்று சமூகம் புறக்கணிக்கும் துப்புரவுப் பணியிலும் ஆண்களுக்கு தரும் கூலியைவிட பெண்களுக்குக் குறைவான கூலியே வழங்குகிறார்கள். 'மனிதன் மலத்தை மனிதன் அள்ளக்கூடாது' எனச் சட்டம் இயற்றப்பட்டிருந்தாலும், அதிலும் பல ஓட்டைகள்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களையே காலம்காலமாக இந்தத் தொழிலில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் அரசாங்கத்தையும் சமூகத்தையும் பொட்டில் அடித்து கேள்வி கேட்கிறது இந்தப் படம். துப்புரவுத் தொழிலாளர்கள் எந்தப் பாதுகாப்பு உபகரணமும் இல்லாமல் மலம் அள்ளுவதையும், சுத்தம் செய்வதையும் பார்க்கும்போது எந்த ஒரு மனிதராக இருந்தாலும் கண்ணில் நீர்கோப்பதைத் தவிர்க்க முடியாது.

 எம்.ஆர்.ஷோபனா படம்: அ.சரண் குமார்



# “உலகமே என் வீடு!”

ஹைதராபாத் பல்கலைக்கழக ஆய்வு மாணவராக இருந்த ரோஹித் வெமுலா, சாதியப் பிரச்னைகளின் அழுத்தம் காரணமாக, ஓராண்டுக்கு முன் தற்கொலை செய்துகொண்டார். இந்த மரணம் நாடு முழுக்க அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ரோஹித் மரணத்துக்கான நீதி வேண்டிப் போராடிய இயக்கங்களோடு தன்னையும் இணைத்துக்கொண்டிருக்கிறார் ரோஹித்தின் தாய் ராதிகா வெமுலா. ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சென்னை வந்திருந்த அவரைப் பெரியார் திடலில் சந்தித்தோம்.

“நான் வளர்ப்புத்தாயிடம் வளர்ந்தவள். அவர்கள் வீட்டில் பெண்குழந்தைகள் இல்லையென்பதால் என்னைத் தத்தெடுத்தார்கள். உண்மையில், வீட்டுவேலை செய்வதற்காகத்தான் என்னைத் தத்தெடுத்திருந்தார்கள். அதனால், வீட்டிலே அடிமைத்தனத்தை அனுபவித்திருக்கிறேன். ஆனால், அதற்குப்பின் சாதி இருக்கிறது என்பதெல்லாம் எனக்கு அப்போது தெரியாது. நான் மாலா எனும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவள். அவர்களோ பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள்!” என்கிற ராதிகாவுக்குத் திருமணமானபோது 15 வயது!

“தினமும் அதிதமாகக் குடித்துவிட்டு வந்து, சண்டை வளர்த்து,என்னை அடிப்பதும்உதைப்பதும் என் கணவருக்கு வாடிக்கை. கணவரைப்போலவே என் பிள்ளைகள் வளர்ந்துவிடக் கூடாது என்கிற ஒரே காரணத்துக்காக, மீண்டும் (வளர்ப்புத்) தாய் வீட்டுக்கே வந்துவிட்டேன். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான், குழந்தைகளுடன் தனியாக வாழத் தொடங்கினேன். அன்று முதல், என் உலகத்தில் குழந்தைகள் மட்டுமே இருந்தனர். அவர்களை நல்லபடியாக வளர்க்க வேண்டும்... அதற்காக உழைக்க வேண்டும் என்பது மட்டுமே என் சிந்தனையாக இருந்தது. டி.வி பார்ப்பதோ, பத்திரிகை படிப்பதோகூட கிடையாது. ஆனால், ரோஹித்தின் மரணம் உலகத்தையே என் வீடாக மாற்றிவிட்டது. இப்போது நான் சந்திக்கும் மக்கள், செல்லும் இடங்கள், பங்கேற்கும் நிகழ்ச்சிகள்... இவை அனைத்தும் எனக்குப் புதியவை. ஆனால், இதன்மூலம்தான் சமத்துவம் உருவாகும் என உணர்ந்துகொண்டேன்” என்கிறார், இழப்பின் துயரத்தைத் தாண்டி சமூகப்பணியில் தன்னை ஈடுபடுத்தி வரும் ராதிகா வெமுலா!



அனுஷா... ஆதிரா... இனியா!

# யாரு அந்த சொப்பன சுந்தரி?!

“யார் என்ன சொன்னா எனக்கென்ன? இந்த உலகத்துலயே நான் மட்டும்தான் இருக்கறதா நினைச்சுப்பேன்... ஹேஹாஹ!”

“அனு இங்க பாரேன்... இனியா கண்ணாடியைப் பாத்து தனியா பேசிட்டு இருக்கா!”

“அவ உலகம் கண்ணாடிக்குள்ள போயிடுச்சோ என்னவோ?!”

“ரெண்டுபேரும் என்னைக் கலாய்க்கறீங்கன்னு தெரியுது. ஆனா, நீங்க நினைக்கற அளவுக்கு எல்லாம் ஒண்ணும் ஆகிடலை. ‘இட் அது பட் ஆனால்’னு ஒரு ஷார்ட் ஃபிலிம் பாத்தேன். செம இன்ட்ரஸ்டிங். ரெண்டு பெண்களுக்குள்ளான நட்பு, காதல், கொண்டாட்டம், குழப்பம், கனவுன்னு எல்லாத்தையும் ரொம்ப அழகா காட்டி இருப்பாங்க. அதுல ஒரு கண்ணாடி சீன் வரும். அதுலதான் ரெண்டு கேர்ள்ஸும் இப்படி பேசிட்டு இருப்பாங்க. நீங்களும் பாருங்க கேர்ள்ஸ். அவ்ளோ எனர்ஜி கிடைக்கும்!”



“நீ இவ்ளோ குஷியாகிப் பேசுறப்ப பாக்க மாட்டோமா என்ன? பாக்குறோம் கேர்ள்ஸ்!”

“வாராவாரம் ஷாப்பிங் போகாட்டி, மண்டைல மசாலா அரைக்கற மாதிரி, ஒரு சத்தம் வரணுமே... என்ன ஆச்சு இனியா, இன்னிக்கு அவுட்டிங் போகலையா?”

“அதாகப்பட்டது என்னன்னா... இன்னிக்கு ஷாப்பிங் போறது கன்ஃபார்ம்தான். ஆனா, மூணு பேருமே தனித்தனியாத்தான் போகப் போறோம்.!”

“ஏன்... எதுக்கு?’

‘மூணு பேரும் ஒண்ணா ஷாப்பிங் போகும்போது, இஷ்டத்துக்கு வாங்கிக் குவிக்கிறோம். நிறைய செலவு பண்றோம். அதனால இந்த முறை தனித்தனியா போனா எவ்ளோ பணத்தை மிச்சம் பண்ண முடியும்னு செக் பண்ணலாமே!”

“ஐடியா ஓகே-தான். ஆனா, இது உன் சொந்த ஐடியா மாதிரி தெரியலையே!”

“சரி... சரி... ஐடியா கொடுத்த அந்த ஆர்ட்டிக்கிளை ஷேர் பண்றதைத் தவிர வேற வழி தெரியல!”

“நீ ரொம்ப புத்திசாலியா இனியா?”

“ஏய்... ஏய்... அந்தக் கேள்வியை ஏன் என்னைப் பாத்துக் கேக்குற?”

“இல்ல... குரூப் எக்ஸாமுக்கு விழுந்து விழுந்து படிக்கிறியே... நான் கேட்குற கேள்விக்குப் பதில் சொல்லு பாப்போம்!”

“கேளுங்க மேடம்!”

“மிஸ் வேர்ல்டு போட்டியில பட்டம் வென்ற முதல் இந்தியப் பெண் யாருன்னு சொல்லு?”



www.vikatan.com

அசத்தலான செய்திகளையும் வீடியோக்களையும் படித்துப் பார்த்து மகிழ www.vikatan.com என்னும் விகடன் இணையதள முகவரியைத் தொடருங்கள். அல்லது இந்த க்யூ ஆர் கோடை ஸ்கேன் செய்யுங்கள்.



இட் அது பட் ஆனால்... குறும்படம் பாக்கலாமா?!
http://bit.ly/2lgfSSt



இந்தியாவின் சாதனைப் பெண்களை பற்றி உங்களுக்கு எந்த அளவுக்குத் தெரியும்?
http://bit.ly/2mcg1We



ஷாப்பிங்கில் மனசைக் கட்டுப்படுத்துங்கள்... பணத்தைப் பத்திரப்படுத்துங்கள்!
http://bit.ly/2lZaRej



சொப்பன சுந்தரியாகிய நான்!
http://bit.ly/2lgcLd7

''ஹாஹா... வெரி சிம்பிள். நம்ம ஐஸ் அக்காதான்!''

''யாரு ஐஸ்வர்யா ராயா?''

''ஆமாம்பா... ஆமாம்!''

''தப்புடா செல்லம்! 1994-ம் வருஷம்தான் ஐஸ்வர்யா ராய் மிஸ் வேர்ல்டு பட்டம் வாங்கினாங்க. அதுக்கும் முன்னாடியே 1966-ம் வருஷத்துலயே கோவாவைச் சேர்ந்த ரீத்தா ஃபரியா பாவல், அந்தப் பட்டத்தை வாங்கிட்டாங்க!''

''சரி, ஏதோ ஒண்ணு மிஸ் ஆகிடுச்சு... அதுக்காக கலாய்க்கக் கூடாது!''

''இந்தியாவின் சாதனைப் பெண்களைப் பற்றி ஒரு இன்ட்ராக்டிவ் க்விஸ் கொடுத்திருக்காங்க. நீ அதுல கலந்துக்கிட்டு பாஸ் மார்க் வாங்கிக் காட்டு பார்ப்போம்!''

''இன்னிக்கு ஏன் ரெண்டும் பேரும் சேர்ந்து அப்பாவி இனியாவையே குறிவெச்சு தாக்குறீங்க? மீ பாவம் ப்ளீஸ்!''

''அப்போ வா... சொப்பன சுந்தரி கூட சேர்ந்து நாமளும் பொங்கி எழுவோம்.''

''யாரு அந்த சொப்பன சுந்தரி?''

''சொப்பன சுந்தரி, மீனாகுமாரி, புஷ்பா... இப்படி இன்னும் சில பெயர்கள் சினிமா படைப்பாளிகளால தொடர்ந்து வம்புக்கு இழுக்கப்பட்டு வருவதை கவனிச்சிருக்கியா இனியா?''

''ஆமாம்... அந்தப் பேருள்ள பொண்ணுங்க எல்லாம் எவ்ளோ வலிகளைத் தாங்கறாங்கன்னு கொஞ்சம்கூட உணராம இருக்கறதும் மறைமுகமா பெண்கள் மேல நடத்தப்படுற வன்கொடுமைதான்...''

''அதுசரி இப்ப ஏன் திடீர்னு இந்த டாபிக்?''

''யூடியூப் வீடியோவுல பார்த்தேன். மனசைப் புரட்டிட்டே இருந்துச்சு. அதான் சொல்லிட்டேன்...''

''ஓ... சூப்பரு! குரல் கொடுப்போம் ஃப்ரெண்ட்ஸ்!''

**- கச்சேரி களைகட்டும்...**

# நமக்குள்ளே!



அந்தப் பள்ளி வளாகத்தில் அன்று கண்ட காட்சிகள், மருத்துவமனையை ஞாபகப்படுத்துவது போலிருந்தன.

ஒரு பெண், அழுதுகொண்டே இருக்கும் தன் மூன்று வயதுக் குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்டு, இறுக்கமான முகத்தோடு அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தார். குழந்தையைத் தேற்றுவதையும் மறந்து, வளாகத்தில் காத்திருந்த மற்ற குழந்தைகளையே ஏக்கமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். பள்ளி முதல்வரின் அறைக்குள்ளே அழைத்துச் செல்லும் பெற்றோர் பலர், பின்பு வெளியே வரும்போது குழந்தைகளைத் தேவையில்லாமல் அச்சுறுத்துவதும், அழவைப்பதுமாக இருந்தனர். கிட்டத்தட்ட தடுப்பூசி முகாம் போலவேதான் இருந்தன அந்தக் காட்சிகள்.

மூன்று வயதுக் குழந்தையை 'ப்ரி கே.ஜி' வகுப்பில் சேர்த்துக்கொள்வதற்காக தனியார் பள்ளிகள் பலவும் வரையறுத்து வைத்திருக்கும் விதிமுறைகள், உலகமகா கொடுமை! 'ஒரு வயதாகிறது... இன்னும் அச்சுப்பிறழாமல் பேசத் தெரியவில்லை இந்தக் குழந்தைக்கு' என்று சொன்னால், அது எவ்வளவு அபத்தமோ, அப்படியான அபத்தங்களைத்தான் பெரும்பாலான பள்ளிகள் செய்துவருகின்றன. 'உனக்குத் தெரிஞ்ச ரைம்ஸ் சொல்லு பார்ப்போம்; இதுல எது லேவண்டர் கலர்; ஏபிசிடி சொல்லுங்க; உங்க நேமுக்கு ஸ்பெல்லிங் சொல்லுங்க பார்ப்போம்' என்பது போன்ற வாய்மொழிக் கேள்விகளே... அந்த வயதுக்கு அதிகம்தான். இந்த நிலையில், செயல்முறை தேர்வுகளையும் அந்த பச்சைமண்ணின் மீது திணிக்கும் பள்ளிக்கூடங்களை எதில் சேர்ப்பது?

குழந்தைகள், குழந்தைகளாக இருப்பதுதான் அழகு. வீட்டில் படுசுட்டியாக இருக்கும் சில குழந்தைகள், பொது இடங்களில் அமைதியாக இருப்பார்கள். பொது இடங்களில் துறுதுறுவென்றிருக்கும் குழந்தைகள், வீட்டில் அமைதியாக இருப்பார்கள். அந்தந்த நேரத்தில் குழந்தை என்ன மனநிலையில் இருக்கிறதோ... அதை வைத்துதான் அதன் செயல்பாடுகளும் இருக்கும். இதுதான் இயற்கை எனும்போது, உடல் மற்றும் மூளைத்திறன் அடிப்படையில் பள்ளியில் அட்மிஷன் கொடுப்பது எந்த வகையில் சரியானதாக இருக்க முடியும்?

'நம் குழந்தை நன்றாகப் படித்தால்தானே அதன் எதிர்கால வாழ்க்கை சிறப்பானதாக இருக்கும்' என்று நினைப்பதில் தவறில்லை. ஆனால், வியாபாரக் கூடங்களாகிவிட்ட பள்ளிகள் ஆட்டுவிக்கும் அனைத்துக்கும் தெரிந்தே நாமும் ஆடிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் மறுப்பதற்கில்லை.

'இப்படியெல்லாம் படித்தவர்களின் எதிர்காலம்தான் சிறப்பாக இருக்கிறது... மற்றவர்களின் எதிர்காலம் சிறக்கவே இல்லை' என்பதற்கு ஏதாவது சான்றுகளை வைத்திருக்கிறோமா என்ன?

கல்வியைக் கற்றுக்கொடுப்பதற்கும் திணிப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன என்பதை எப்போதுதான் புரிந்துகொள்ளப்போகிறதோ இந்தச் சமூகம்?!

உரிமையுடன்,



ஆசிரியர்

Printed by S.Madhavan, Published by S.Arivazhagan on behalf of Ananda Vikatan Publishers Private Limited and Printed at Ananda Vikatan Printers Private Limited, No: 99, (NP), Sidco Industrial Estate, Ambattur, Chennai-600 098 and Published from No: 757, Anna Salai, Chennai-600 002. Editor: S.Arivazhagan (Shree)



கோ-ஆப்டெக்ஸ்
2 வாங்கினால்
1 இலவசம்!
மனதுக்கு பரவசம்...
Sponsored by
Development Commissioner (Handlooms)
Under VIRUDHUNAGAR MEGA HANDLOOM CLUSTER SCHEME
Shop Online @ www.cooptex.com www.facebook.com/cooptex


தூய சந்தனம்
முகப்பரு, சுருக்கங்கள் மற்றும்
கருவளையங்களை குறைக்கிறது.
குங்குமப்பூ மற்றும் ரோஜா
சருமத்திற்கு நாள்
முழுவதும் பொலிவூட்டுகிறது.
மினரல் காம்ப்ளெக்ஸ்
சருமத்தின் அதிகப்படியான
எண்ணெயை உறிஞ்சுகிறது.
அழகு
என்ற சொல்லுக்கு...!
GOKUL SANTOL
BRIGHTENING
BEAUTY CREAM
Instant Radiance
Advance Oil Control
Long lasting formula
Inquiries: 044-42874123 care@tsr.in | www.tiesar.com